பக்கங்கள் - 24
விலை - 30 ரூபா

24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 35 கதிர் 190 வைகாசி 24ஆம் நாள் வெள்ளிக்கிழமை 07 ஜூன் 2019 வள்ளுவர் ஆண்டு 2050

Now in JAFFNA
BBA
(Bachelor of Business Administration)
Leading to MBA
BLC CAMPUS
0777 174 443
4th Lane, Brown Road, Jaffna.
T - 021 493 5555, 021 493 6666
E - info@blccampus.edu.lk
www.blccampus.edu.lk

*யாழ். பல்கலைக்கழக*

## இந்து கற்கைகள் பீடம் வரலாற்று மைல் கல்

*கல்விச் சமூகத்தினர் பெருமிதம்*

யாழ்ப்பாணம், ஜூன் 7
யாழ்ப்பாணப் பல்கலைக் கழத்தில் இந்துக் கற்கைகள் பீடம் தனியாக உருவாக்கப் பட்டது. பல்கலைக்கழக வரலாற்றில் ஒரு மைல் கல்லாகப் பொறிக்கப்படவேண்டும். இவ்வாறு கல்விச் சமூகத்தினர் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் இந்து கற்கைகள் பீடத்தின் ஆரம்பநிகழ்வு நேற்றுச் சிறப்பாக நடைபெற்றது. பரமேஸ்வரா ஆலயத்தில் பூசைகள் இடம்பெற்று விருந்தினர்கள் அழைத்துச் செல்லப்பட்டு, கைலாச

19

# கூட்டமைப்பு- மோடி சந்திப்பு ஞாயிறன்று

*அரசியல் தீர்வு, சிறுபான்மை மக்களின் பிரச்சினைகள் கலந்துரையாடப்படும்*

கொழும்பு, ஜூன் 7
இலங்கையில் சிறுபான்மை இன மக்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகள், அரசியல் தீர்வு விவகாரம் உட்பட சமகால விடயங்கள் தொடர்பில் இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடிக்கும், இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் முக்கிய பேச்சு நடைபெறவுள்ளது.

19

## மன்னார் விபத்தில் இளைஞன் சாவு

*பிறந்த நாளில் உயிரிழந்த சோகம்*



மன்னார், ஜூன் 7
மன்னார் தலைமன்னார் பிரதான வீதி புதுக்குடியிருப்பு சந்தியில் நேற்று வியாழக்கிழமை மாலை இடம்பெற்ற விபத்தில் இளைஞன் உயிரிழந்துள்ள

04

## முகத்தை முழுமையாக மூடினால் இனி வழக்கு



கொழும்பு, ஜூன் 7
முகத்தை முழுமையாக மூடி தலைக்கவசம் அணிவோர் மீது இனி வழக்கு தொடரப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அவசரகாலச் சட்டத்தின் கீழ்,

19

## ஸ்டாலின் - மாவை. சென்னையில் சந்திப்பு



சென்னை, ஜூன் 7
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவருமான மாவை சேனாதிராசா சென்னை அண்ணா அறிவாலயத்தில் திமுக தலைவர்

19

## அரசியலிலிருந்து பிக்குகளை ஒதுங்கக் கோரி உணவுஒறுப்பு

கொழும்பு, ஜூன் 7
பிக்குகளை அரசியலிருந்து விலகுமாறு வலியுறுத்தி ஒருவர் சாகும் வரையான உணவு ஒறுப்புப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளார்.



19

*மீண்டும் பதவியேற்கவும்*

## மகாநாயக்கர்களின் கோரிக்கையை வரவேற்கும் முஸ்லிம் அரசியல்வாதிகள்

கொழும்பு, ஜூன் 7
குற்றம் சுமத்தப்படாத முஸ்லிம் அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் மீண்டும் அவர்களது பொறுப்புக்களை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று மகாநாயக்க தேரர்கள் விடுத்துள்ள கோரிக்கையை வரவேற்பதாக முஸ்லிம் அரசியல்வாதிகள் தெரிவித்துள்

19

*பெற்றோர்*

## பாடசாலைகளில் பாதுகாப்பு பணியில் ஈடுபடத்தேவையில்லை

*கல்வி அமைச்சு அறிவிப்பு*

கொழும்பு, ஜூன் 7
பாடசாலைகளுக்கு முழுமையான பாதுகாப்பை வழங்கும் நடவடிக்கையில் பொலிஸார் மற்றும் முப்படையினர் ஈடுபட்டுள்ளனர். பாதுகாப்பை வழங்கும் பணியில் பெற்றோர்கள் ஈடுபட வேண்டிய அவசியம் இல்லை

04

## தாக்குதலுக்குப் பொறுப்பேற்றால் தூதுவர் பதவியை வழங்குவேன்

*மைத்திரி 'டீல்' பேசியதாக பூஜித பரபரப்பு வாக்குமூலம்*

கொழும்பு, ஜூன் 7
உயிர்த்த ஞாயிறு தற்கொலைக் குண்டுத் தாக்குதல் சம்பவங்களுக்குப் பொறுப்பேற்று பதவியைத் துறந்தால் தூதுவர் பதவி வழங்கப்படும் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன சொன்

19

*பாதுகாப்புச் சபைக் கூட்டத்துக்கு*

## ரணில், ருவான், பூஜிதவுக்கு மைத்திரியே கதவடைத்தார்

*தெரிவுக்குழுவில் உண்மையை போட்டுடைத்தார் ஹேமசிறி*

கொழும்பு, ஜூன் 7
தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, பொலிஸ் மா அதிபர் பூஜித, பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் ஆகியோர் தேசிய பாதுகாப்புச் சபைக் கூட்டத்துக்கு 2018ஆம் ஆண்டு நவம்பர் 13 ஆம் திகதி முதல் அழைக்கப்படவில்லை. அவர்களை அழைக்க வேண்டாமென அரச தலைவர் மைத்திரிபால என்னிடம் தெரிவித்தார். இவ்வாறு முன்னாள் பாதுகாப்பு செயலர் ஹேமசிறி பெர்னாண்டோ பரபரப்பு தகவலை வெளியிட்டுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல்கள் குறித்து ஆராயும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் முன்னிலையாகி சாட்சியமளித்த அவர் மேலும் தெரிவித்ததாவது,

தலைமை அமைச்சர், பொலிஸ் மா அதிபர், பாதுகாப்பு இராஜாங்க

05

*தமிழர்கள் கடத்தல் விவகாரம்*

## விசாரணை அதிகாரி நிசாந்தவை இடமாற்றுமாறு மைத்திரி பணித்தார்

*பூஜித தெரிவிப்பு*

கொழும்பு, ஜூன் 7
கொழும்பில் 11 தமிழ் இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட விவகாரம் தொடர்பில் விசாரணையை முன்னெடுத்த பொலிஸ் அதிகாரியான நிசாந்த டி சில்வாவை இடமாற்றம் செய்ய அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அழுத்தம் கொடுத்ததாக, கட்டாய விடுமுறை வழங்கப்பட்டுள்ள பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

19



அனைவருக்கும் ஏற்ற DFCC வங்கி

வங்கியென்றால் அது அனைவருக்கும் ஏற்ற வங்கியாக இருக்கவேண்டும். சேமிப்புக் கணக்கு, நடைமுறைக் கணக்கு, நிலையான வைப்பு, கிரடிட் காட், லீசிங், வீட்டுக் கடன், தனிப்பட்ட கடன், வேர்ச்சுவல் வொலட், வியாபார நிதிச் சேவைகள் உட்பட அனைத்து வங்கிச் சேவைகளையும் வழங்கும் வங்கிதான் DFCC வங்கி.

24 மணிநேர அழைப்பு நிலையம்: 0112 350000
www.dfcc.lk

DFCC வங்கி
உங்கள் வளர்ச்சிக்கு

## கொக்குவில்இந்துமாணவர்கள் 4பேர்சீனாவுக்குசுற்றுப்பயணம்




"தோழர்களாகியநூல்களே நேசமிகு நண்பர்கள்" தேசியமட்டவாசிப்புப்போட்டியில் பங்குபற்றிய கொக்குவில்இந்துக்கல்லூரிமாணவர்களாகிய சந்திரகுமார் சாருஜன், வரதராஜா சுமித்திரா. மகேஸ்வரக்குருக்கள் தர்ஷிகா, தெய்வேந்திரராஜாகிருத்திகன் ஆகியோர் சீனாவுக்குசுற்றுப்பயணம் செல்வதற்காக தேசிய ரீதியில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

# மங்கள,ராஜிதவை கைது செய்யுங்கள்

## சரத் வீரசேகர கொதிப்பு

கொழும்பு, ஜூன் 7
இனவாதக் கருத்துக்களை வெளியிட்டு வருகின்ற அமைச்சர்களான மங்கள சமரவீர மற்றும் ராஜித சேனாரத்ன ஆகியோர் கைது செய்யப்பட வேண்டும் என்று இராணுவத்தினரின் உரிமைகளைப் பாதுகாக்கும் அமைப்பின் தலைவர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
ரிசாத் பதியுதீன், எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் மற்றும் அசாத் சாலி ஆகியோர் முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்பதால் அவர்களைப் பதவி விலகுமாறு நாங்கள் கோரவில்லை. தீவிரவாத செயற்பாடுகளுடன் அவர்களுக்கு ஏதேனும் தொடர்புகள் இருக்கலாம்என்றசந்தேகத்தால், அவர்களை விசாரணைகளுக்கு உட்படுத்தவும், விசாரணைகளுக்கு இடையூறு ஏற்படாதிருக்கவுமே பதவி விலகுமாறு கோரப்பட்டனர்.
அவ்வாறிருக்கையில் அனைத்து முஸ்லிம் அமைச்சர்களும் தாங்கள் முஸ்லிம்கள் என்ற கோணத்தில் சிந்தித்துப் பதவி விலகி யிருக்கிறார்கள்.
இங்கு அவர்கள்தான் இனவாத அடிப்படையில் சிந்தித்துள்ளார்கள். சிங்களவர்கள்இனவாதிகள் அல்ல. பதவி விலகியவர்களில் குற்றச்சாட்டுக்கள் இல்லாதவர்கள் மீண்டும் அமைச்சுப் பதவிகளை ஏற்றுக்கொள்வதற்கு



நாம் ஒருபோதும் எதிர்ப்புத் தெரிவிக்கமாட்டோம் -என்றார். (ஒ.5)

## கசிப்பு வைத்திருந்தனரென 4 வீடுகளில் 10 பேர் கைது

முல்லைத்தீவு விசுவமடு மாணிக்கபுரம் கிராத்தில் கசிப்பைப் பயன்படுத்தினார் மற்றும் வீடுகளில் வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டுக்களில் நான்கு வீடுகளிலிருந்து 10 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று புதுக்குடியிருப்புப் பொலிஸார் தெரிவித்தனர்.
இவர்களிடமிருந்து 19.6 லீற்றர் கசிப்பு மீட்கப்பட்டுள்ளது. போதைத் தடுப்பு சம்மந்தமான சுற்றிவளைப்பு நேற்றுமுன்தினம் நடைபெற்றது.
அதன்போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.
அவர்கள் விசாரணையின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.
கிராம அலுவலர், அரசதலைவர் செயலக போதை ஒழிப்புப் பிரிவினர், பொலிஸார், பொது அமைப்புக்களின் பிரதி நிதிகள் இணைந்து சுற்றிவளைப்பு மேற்கொண்டனர். (த-ரி3)

# சுகாதாரத் தொண்டர்களின் நேர்முகத் தேர்வில் அரசியலா?

## குழறுப்படிகள் நடந்தால் மாற்று நடவடிக்கை செயற்பாட்டுக் குழு உறுப்பினர்கள் தெரிவிப்பு



வவுனியா, ஜூன் 6
வடக்கு மாகாண சுகாதாரத் தொண்டர்களுக்கு இடம்பெற்ற நேர்முகத் தேர்வில் அரசியல் தலையீடு ஆதிக்கம் செலுத்தியுள்ளது என்பது கண்டறியப்பட்டுள்ளது. சுகாதாரத் தொண்டர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் நியமனம் வழங்கப்பட வேண்டும் இந்தமுறையும் எமது நியமனம் தட்டிக்கழிக்கப் பட்டால் அடுத்த கட்ட நடவடிக்கைக்குச் செல்வோம். அது பற்றி ஆராய்கிறோம்.
இவ்வாறு வடக்கு மாகாண சுகாதாரத் தொண்டர்களின் ஐந்து மாவட்டங்களினதும் செயற்பாட்டுக் குழு உறுப்பினர்கள் தெரிவித்தனர்.
வவுனியா தொடருந்து நிலைய வீதியிலுள்ள சுத்தானந்தா இந்து இளைஞர் சங்கத்திலுள்ள கட்டடத்தில் அவர்கள் இது பற்றி நேற்றுக் கலந்துரையாடினர். அதன்பின்னர் அவர்கள் நடத்திய செய்தியாளர்கள் சந்திப்பில் மேலும் தெரிவித்ததாவது:
2014ஆம் ஆண்டு வடக்கில் 900 சுகாதார சேவை உதவியாளர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டது. அன்றிலிருந்து இன்று வரையிலும் பல போராட்டங்களுக்கு மத்தியில் கவனவீர்ப்புப் போராட்டம், எழுத்து மூலமான ஆவணங்கள், சுகாதாரம் தொடர்புபட்ட அதிகாரிகளுடன் பல சந்திப்புக்களை ஏற்படுத்தி இறுதியாக வடக்கு மாகாண சபையின் இறுதி அமர்வின்போதும் எங்களுடைய நியமனம் தொடர்பாக சிறப்புத் தீர்மானம் ஒன்று எடுக்கப்பட்டிருந்தது. அதற்கு அமைவாகவும் வடக்கு மாகாண ஆளுநரின் தீர்மானத்துக்கு அமையவும் எங்களுடைய இறுதி முடிவு கிடைக்கப்பெற்றிருந்தது.
வடக்கில் சுகாதாரத் தொண்டர்களாக 2014தொடக்கம் பெயர்ப்பட்டியலிலுள்ளவர்களுக்கு கல்வித் தகமை பாராமல் சுகாதாரத் தொண்டர்களுக்காக நிரந்தர நியமனத்தை வழங்குவதற்குத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.
அந்தத் தீர்மானத்துக்கு அமைவாக கடந்த 27ஆம் திகதி தொடக்கம் 31ஆம் திகதிவரையும் வடக்கு மாகாணத்திலுள்ள பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தினர் மாவட்ட ரீதியாக நேர்முகத்தேர்வுகள் இடம்பெற்றுக்கொண்டிருந்தன. அதற்கு அமைவாகவும் எங்களுடைய 850க்கும் மேற்பட்ட சுகாதாரத் தொண்டர்கள் பதிவிலிருந்தவற்றைவிடவும் நேற்றும் வடக்கு மாகாணத்தில்கிட்டத்தட்ட மூவாயிரத்துக்கும் அதிகமானவர்கள் நேர்முகத் தேர்வில் கலந்து கொண்டிருக்கின்றார்கள்.
இம்முறையும் எங்களுக்கு அந்த அநீதி நடைபெறும் என்று நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.
பெண்களுக்கு 70வீதமும் ஆண்களுக்கு 30வீதமும் நியமனம் என்று இறுதியாகத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த வீதம் இல்லாவிட்டால் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்ட ஆண்களையும் உள்வாங்கலாம் என்று சுகாதாரத் தொண்டர்களின் செயற்பாட்டுக்குழு எதிர்பார்க்கின்றது.
எமக்குச் சாதகமான பதில் கிடைக்காவில்லையென்றால் இங்கு கூடியுள்ள அனைவரும் ஏதோ ஒரு அடுத்தகட்ட நடவடிக்கைக்குச் செல்லவேண்டிய நிலை ஏற்படும் - என்றனர். (த)



# பாடசாலையைதரம்உயர்த்துமாறு வடமராட்சிகிழக்கில்போராட்டம்

## மாணவர்களும் பெற்றோரும் இணைந்து நடத்தினர்

யாழ்ப்பாணம், ஜூன் 7
வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு றோமன் கத்தோலிக்க மகா வித்தியாலயத்தை தரம் உயர்த்துமாறு கோரி மாணவர்கள், பெற்றோர் இணைந்து பாடசாலை முன்பாக நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தினார்கள்.
கல்விப்பொதுத்தராதரசாதாரணதரம்வரையில் வகுப்புக்கள் இடம்பெற்று வரும் நிலையில், உயர்தர வகுப்புக்களை ஆரம்பிக்குமாறு பல தரப்புக்களிடம் கோரிக்கை முன்வைத்தும் எந்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று தெரிவித்தே கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.
'திறமைகளை நிரூபித்தும் உரிமைகளை ஏன் மறுக்கின்றீர்கள்?', 'கல்விக்குக் கடிவாளம்போட்டு எம் முன்னேற்றத்தை முடக்காதே' என்பன போன்ற பதாகைகளை தாங்கியவாறு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.
போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள், பெற்றோர் தெரிவித்ததாவது:
மாவட்டத்தின் கடைசிக் கிராம அலுவலர் பிரிவான கட்டைக்காடு மற்றும் அதனைச் சூழவுள்ள கிராமங்களில் போக்குவரத்து வசதிகள் இல்லை. இந்தப்பாடசாலையில் உயர்தர வகுப்புக்கள் இல்லை. முறையான பேருந்து வசதிகள்கூட இல்லாத நிலையில் எமதுபிள்ளைகள், தினமும் 20கிலோமீற்றர் பயணம் மேற்கொண்டு உயர்தரம் வரையிலான வகுப்பு உள்ள பாடசாலைக்குச் செல்ல வேண்டியுள்ளது.
கடந்த ஆண்டு இடம்பெற்ற கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் 18 மாணவர்கள் தோற்றினார்கள். அதில் 17 பேர் சித்தியடைந்துள்ளனர். பாடசாலையை தரம் உயர்த்த அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. சில அதிகாரிகள் பாடசாலையை தரம் உயர்த்த தடையாக இருக்கின்றார்கள்.
மாகாண கல்வித் திணைக்களத்திடம் கேட்டால், வடமராட்சிவலயக்கல்விப்பணிமனை பாடசாலையை தரம் உயர்த்துவதற்கான முன்மொழிவை வழங்கவில்லை என்று கூறுகின்றது. வடமராட்சி வலயக் கல்விப் பணிமனையிடம் கேட்டால், தமக்கு இதற்கு அதிகாரம் இல்லை என்கிறார்கள். இப்படியே விடயத்தை தட்டிக் கழிக்கின்றார்கள் -என்றனர்.
போராட்டம் இடம்பெற்றுக் கொண்டிருந்த போதுஅந்தப்பகுதிக்குவந்த, வடக்குமாகாண சபையின்முன்னாள்உறுப்பினர்ச.சுகிர்தன், போராட்டக்காரர்களுடன்பேச்சு நடத்தினார். அவர்களிடமிருந்து மனுவையும் பெற்றுக் கொண்டார். தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனுடன் பேச்சுநடத்தி இந்தப் பிரச்சினைக்குத் தீர்வைக் காணலாம் என்று கூறினார். இதனையடுத்து போராட்டம் முடிவுக்கு வந்தது. (ஒ.5.160.ரி1)

# மைத்திரியே மீண்டும் போட்டியிட வேண்டுமாம்

## சு. கவினர் மனு கையளிப்பு

கொழும்பு, ஜுூன் 7

அரசதலைவர்தேர்தலில்மைத்திரிபாலசிறிசேனவை மீண்டும்போட்டியிடுமாறு கோரிசிறிலங்காசுதந்திரக் கட்சியினர் மனுவைக் கையளித்துள்ளனர்.



சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களால், அரச தலைவர் செயலகத்தில் நேற்று வியாழக்கிழமை மனுகையளிக்கப்பட்டுள்ளதாகஅரசதலைவர்ஊடகப் பிரிவுதெரிவித்துள்ளது.

அரச தலைவர் தேர்தலில் மீண்டும் போட்டியிடப் போவதில்லை என்றும், மகிந்த தரப்பினருக்கு ஆதரவு வழங்கப் போவதில்லை என்றும், ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் பொருத்தமானஒருவர்களமிறங்கினால் அவருக்கு ஆதரவு வழங்குவேன் என்று அமைச்சர்களிடம் அரச தலைவர் மைத்திரி பால சிறிசேன கூறியிருந்தார்.

இவ்வாறானதொரு நிலையிலேயே, அரச தலைவர் மைத்திரியை நேற்றுச் சந்தித்த சுதந்திரக் கட்சியினர், அரச தலைவர் தேர்தலில் மீண்டும் களமிறங்க வேண்டும் என்ற மனுவைக்கையளித்துள்ளனர். (ஒ.5)

# குருநாகல் மருத்துவர் தொடர்பில் 540 பேரிடம் வாக்குமூலம் பதிவு

## பொலிஸ் பேச்சாளர் தகவல்

கொழும்பு, ஜுன் 7

குருநாகல் மருத்துவர் சாபி தொடர்பில் 540 பேரிடம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர தெரிவித்துள்ளார்.

மொஹமட்சாபிக்குஎதிராக இதுவரை முறைப்பாடு செய்துள்ள 421 பெண்கள் உட்பட 540 பேரிடம் குற்றத்தடுப்பு பிரிவினர் வாக்குமூலங்களை பதிவு செய்து வருகின்றனர்.

அவர்களில் 26 மருத்துவர்கள், 6 பெண் மகப்பேறு மருத்துவர்கள், 69 தாதியர்கள் மற்றும் 18 மருத்துவப் பணியாளர்களின் வாக்குமூலங்களும் பெறப்பட்டுள்ளன.

வருமானத்தைமீறிச்சொத்து சேர்த்தமைதொடர்பாக குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளாகியுள்ள குருநாகல் போதனா மருத்துவமனையின் பிரசவ மற்றும் மகப்பேற்று வைத்தியர் சேகு சிஹாப்தீன் மொஹம்மட் சாபி பயங்கரவாதத் தடைசட்டத்தின் கீழ் தடுத்து வைத்து விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்றார்.

சட்டவிரோத கருத்தடை மேற்கொண்டதாகசாபிக்கு எதிராகஇதுவரை735பேர் முறைப்பாடுகளை மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை, மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பில் மருத்துவப் பரிசோதனைகள் மேற்கொள்ளசட்டமருத்துவஅதிகாரிஒருவர்தலைமையில் குழுநியமிக்கப்பட்டுள்ளது. (ஒ.5)

# குடும்பப் பெண் மீது வாள்வெட்டுதாக்குதல்

## பளையில்சம்பவம்

கொடிகாமம், ஜுன் 7

பளை அரசர்கேணிப் பகுதியில்நேற்று வியாழக்கிழமை உந்துருளியில்சென்ற குடும்பப்பெண்மீது உந்துருளியில்பின் தொடர்ந்து வந்த இருவர் சனநடமாட்டமில்லாத பகுதியில்வைத்து வாளால்வெட்டியதில் கைவிரல்களிலும் கையிலும்காயம் ஏற்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். கெற்பேலிமேற்கில் உள்ளமேற்படிபெண் பளையிலுள்ள சகோதரன் வீட்டுக்குச்சென்ற வேளையில் பின் தொடர்ந்துவந்தநபர்கள் வெட்டியதாகத்தெரிவிக்கப்பட்டது. (ஒ.5,9,159)

## சாய்ந்தமருது குண்டுவெடிப்பு

# உயிரிழந்தவர்களின் சடலங்களை தோண்டி எடுக்க உத்தரவு!

கொழும்பு, ஜுன் 7

கல்முனை சாய்ந்தமருதில் குண்டுகளை வெடிக்கவைத்து உயிரிழந்த ஐ எஸ் பயங்கரவாதிகள்மற்றும்அவர்களின்குடும்பஉறுப்பினர்களின் சடலங்கள் தோண்டி எடுக்கப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

மரபணு பரிசோதனைகளுக்காக சடலங்கள் இன்று தோண்டி எடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. அம்பாறை நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவுக்கு அமைய, இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் 26ஆம் திகதி கல்முனை சாய்ந்தமருது சுனாமி கிராமத்தில் உள்ள வீடொன்றில், பாதுகாப்புத் தரப்பினருக்கும் ஸஹ்ரான் குழுவினருக்கும் இடையில் துப்பாக்கிச் சமர் இடம்பெற்றது. தாக்குதலில் 15 பேர் உயிரிழந்திருந்தனர். இதனையடுத்து அந்தவீட்டிலிருந்து 6 சிறுவர்களினதும் 6 ஆண்களினதும் 3 பெண்களினதும் சடலங்கள்கண்டெடுக்கப்பட்டன.

பயங்கரவாத தாக்குதல்களின் பிரதான சூத்திரதாரியான ஸஹ்ரான் காசிமின் தந்தை, அவரின்சகோதரர்கள்இரண்டுபேர்மற்றும்ஒரு சகோதரரின் மனைவி ஆகியோரும் சடலங்களாககண்டெடுக்கப்பட்டவர்களில்உள்ளடங்குவதாகக்கூறப்பட்டது.

குண்டுத் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் சடலங்கள், கடந்தமாதம் 2ஆம்திகதிஅம்பாறை பொதுமயானத்தில், இஸ்லாமியமதச்செயற்பாடுகளின்றி, பலத்தபாதுகாப்புக்குமத்தியில்அடக்கம்செய்யப்பட்டிருந்தது. இந்த நிலையிலேயே மரபணுப் பரிசோதனைகளுக்காக சடலங்கள் இன்று தோண்டிஎடுக்கப்படவுள்ளதாகதெரிவிக்கப்படுகிறது. (ஒ.5)

# நல்லாட்சியின் மோசடிகள் இடைக்கால அறிக்கை

## மைத்திரியிடம் கையளிப்பு

கொழும்பு, ஜுன் 7

நல்லாட்சி அரசு ஆட்சி அமைத்த பின்னர் இடம்பெற்ற முறைகேடுகள் தொடர்பில் விசாரிப்பதற்கு நியமிக்கப்பட்ட அரச தலைவர் ஆணைக்குழுவின் இடைக்கால அறிக்கை, அரச தலைவர் மைத்திரி பாலசிறிசேனவிடம்நேற்று வியாழக்கிழமைகையளிக்கப்பட்டது.

2015ஆம் ஆண்டு ஜனவரி 14 ஆம் திகதி முதல் 2018 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆம்திகதிவரையானகாலப் பகுதிகளுக்குள் அரச நிறுவனங்களில் இடம்பெற்ற ஊழல், அரச வளங்கள் மற்றும்சலுகைகளைதவறாகப் பயன்படுத்துதல் உள்ளிட்ட விடயங்கள் குறித்து ஆணைக்குழுவிசாரணைகளை முன்னெடுத்து வருகின்றது.

கிடைத்துள்ள முறைப்பாடுகளுக்கு அமைய, சுகாதார அமைச்சின் கீழுள்ள நிறுவனம், பெற்றோலிய கூட்டுத்தாபனம், சிறிலங்கா வானூர்தி நிறுவனம், விவசாய அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களில் பெரிய ஊழல்மோசடிகள்இடம்பெற்றுள்ளதாக முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளதாக அரசதலைவர்ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில்தெரிவிக்கப்பட்டது.

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க உட்பட அமைச்சர்கள் சிலருக்கு எதிராகவும் அரச தலைவர் ஆணைக்குழுவில்முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்ட நிலையில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. இதன் இடைக்கால அறிக்கையே சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. (ஒ.5)

# தீ விபத்தில் மூதாட்டி சாவு

## துன்னாலையில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜுன் 7

76 வயது மூதாட்டிதீ விபத்தில் சிக்கி பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார். வீரபத்திரர் கோயிலடி துன்னாலை மத்தியைச்சேர்ந்த சுப்பிரமணியம் புவனேஸ்வரி அம்பாள் என்ற மூதாடியே இவ்வாறு உயிரிழந்துள்ளார். மூதாட்டி நரம்புத் தளர்ச்சி நோயால் நீண்டகாலம் பாதிக்கப்பட்டிருந்தார். இதன் காரணமாக அவர் கால் பகுதிக்கு சூடு காட்டுவது வழமை. நேற்று அதிகாலையும் நரம்புத் தளர்ச்சி ஏற்படவே துணி மற்றும் கடதாசிகளைப் பயன்படுத்தி சூடு காட்டியுள்ளார். இதன்போது தீ, மூதாட்டியின் உடையிலும் பிடித்துள்ளது. மூதாட்டியின் கணவன், உடனடியாக அதனை அவதானித்து தீயை அணைத்துள்ளார். அயலவர்களின் உதவியுடன், மந்திகை மருத்துவமனையில் மூதாட்டி சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார். மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டபோதும், சிகிச்சை பலனின்றி அவர் உயரிழந்துள்ளார்.

இறப்புத் தொடர்பில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (ஒ.5,105)

# ஹிஸ்புல்லாவுக்கு மற்றொரு நெருக்கடி

கொழும்பு, ஜுன் 7

கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் ஹிஸ்புல்லாவுக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் நேற்று வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டில் ஹிஸ்புல்லாவுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சட்டத்தரணி இந்திரசிறி சேனாரத்ன இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளார்.

மே மாதம் 13ஆம் திகதி தொலைக்காட்சி நிகழ்சியில் கலந்து கொண்ட முன்னாள் ஆளுநர், நீதிபதி ஒருவர் மாற்றப்பட்டமை தொடர்பில் கருத்து வெளியிட்டார்.

இதன் காரணமாக நீதிமன்றம் அவமதிக்கப்பட்டுள்ளதாக மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ.5)

# வடக்கிலிருந்து தெற்குக்கு இன ஒற்றுமை பாதயாத்திரை

## புத்தசாசன அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஜுன் 7

இனங்களுக்கிடையிலான ஒற்றுமையை வலுப்படுத்தும் வகையிலும் நாட்டின் அமைதியை வேண்டியும் புனிதயாத்திரைஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது. பொசன்போயா தினத்தை முன்னிட்டு 'வடக்கிலிருந்து தெற்கு வரை புத்தபகவானை தரிசிக்கும் வரப்பிரசாதம்'என்னும்தொனிப்பொருளில்தொடருந்து ஊடான ஆசீர்வாத புனித யாத்திரை இடம்பெறவுள்ளது. பெலியத்தை பகுதியிலிருந்து காங்கேசன்துறை வரையான பகுதிக்கு எதிர்வரும் 11ஆம் திகதியிலிருந்து16ஆம்திகதிவரையான காலப்பகுதியில் ஆசீர்வாத யாத்திரையொன்று பாதுகாப்பான முறையில் மேற்கொள்ளதீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறுபுத்தசாசனமற்றும்வடமேல் அபிவிருத்திஅமைச்சர்காமினிஜயவிக்கிரமபெரேரா தெரிவித்துள்ளார்.

அரசதகவல் திணைக்களத்தில் நேற்று வியாழக்கிழமை பொசன் போயா தினத்தை முன்னிட்டு மேற்கொள்ளப்படவுள்ள செயற்திட்டங்களை தெளிவுபடுத்தும்ஊடகசந்திப்பிலேயேமேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின் பாதுகாப்பு நெருக்கடி நிலையைக் கருத்தில் கொண்டு வெசாக் கொண்டாட்டங்கள் வரையறுக்கப்பட்டிருந்தன. பொசன் போயா தினக் கொண்டாட்டங்களைச் சிறந்த முறையில் நடத்துவதற்கானஏற்பாடுகளைமேற்கொள்ளுமாறு பிக்குகள்கேட்டுக்கொண்டமைக்குஅமையபொசன்போயா தினக்கொண்டாட்டங்களைசிறந்த முறையில்நடத்ததீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன் ஒரு அங்கமாக வடக்கிலிருந்து தெற்கு வரையில் நாட்டு மக்கள் அனைவரும் புத்தபகவானை தரிசிக்கும்வகையிலும் நாட்டின்அமைதிக்காகவழிபடும்வகையிலும் தொடருந்து ஊடான யாத்திரை ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது. அதற்கான பாதுகாப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பயங்கரவாதத்தை நாட்டிலிருந்து இல்லாதொழிப்பதற்கான ஒத்துழைப்பை வழங்க முஸ்லிம்கள் தயாராகவுள்ளனர். பயங்கரவாதஅமைப்புடன்தொடர்புடைய சந்தேகநபர்களை கைது செய்வதற்கு ஏதுவான தகவல்களையும் முஸ்லிம்கள் வழங்கியுள்ளனர். முஸ்லிம் பயங்கரவாதத்தை நாட்டிலிருந்து ஒழிக்கத் தேவையான ஒத்துழைப்புக்களை முஸ்லிம் சமூகத்தினர் வழங்கி வருகின்றனர் - என்றார்.



(ஒ.5)

## பொன்மொழிகள்



உலகம் ஒரு சமுத்திரமல்ல, மருத்துவமனை; வாழத் தகுந்த இடமல்ல. மரணக் குழி.

**தாமஸ் பிரௌன்.**

உலகமே அழிந்தாலும் நீதி நிலை நாட்டப்பட வேண்டும்.

**முதலாம் பெர்னாண்ட்.**

இந்த உலகம் பைத்தியக்காரர்களால் நடத்தப்படும் பைத்தியக்கார விடுதி போல் ஆகிக் கொண்டிருக்கிறது.

**டேவிட் லாயிட் ஜார்ஜ்.**

இரண்டு மனிதர்கள் ஒரே மாதிரியாக இருந்தால் அவர்களை ஏற்றுக் கொள்ளும் அளவிற்கு உலகம் பெரியதாக இல்லை.

**கலீல் கிப்ரான்.**

இந்த உலகத்தை வாழ்வதற்கேற்ற நல்ல இடமாக்க ஏசுவைப் போல், புத்தரைப் போல் அன்பு செலுத்து.

**இசதோரோ டங்கன்.**

இந்த உலகை குருட்டு அதிர்ஷ்டத்தால் சில காலம் ஆளலாம். ஆனால், அன்பொழுக்கத்தினால் உலகை நிரந்தரமாக ஆளலாம்.

**லாவோட்சே**



ஊர்க்காவலன்™
@oorkkavalaan
கிளியும்
ஒரு சிறந்த
"கீச்"சாளர்....




ஊர்க்காவலன்™
@oorkkavalaan
நல்ல எழுத்துக்களை
படிப்பதில் உள்ள ஆபத்து
என்னவெனில்
எழுதுவதற்கான குறைந்த
பட்ச தன்னம்பிக்கையும்
குறைந்து விடுவதே

## இது புதுசு



புதிய வடிவமைப்பில் பெண்களுக்கான கைப்பைகள் அறிமுகமாகியுள்ளன. இவை ஆயிரத்து 450 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.




## சசிகுமாரின் அடுத்த படம் அதிகாரப்பூர்வ அறிவிப்பு

'பேட்ட' படத்துக்குப் பிறகு தனது அடுத்தடுத்த படங்களில் நடித்து வருகிறார் சசிகுமார். அடுத்ததாக ஜி.என்.கிருஷ்ணகுமார் இயக்கத்தில் திரில்லர் படமொன்றில் நடிக்கவிருப்பதாக அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சசிகுமார் 'நாடோடிகள் 2', 'கொம்பு வச்ச சிங்கம்டா' மற்றும் 'கென்னடி கிளப்' ஆகிய படங்களில் நடித்து முடித்திருக்கிறார். தற்போது 'ராஜவம்சம்' என்ற படத்தில் நடித்து வருகிறார். என்.வி.நிர்மல்குமார் இயக்கத்திலும் நடிக்க ஒப்பந்தமாகி இருக்கிறார்.

இந்த நிலையில், சசிகுமாரின் அடுத்த படம் குறித்த அறிவிப்பு வெளியாகி இருக்கிறது. இந்தப் படத்தை மலையாளத்தில் 'காலேஜ் டேஸ்', 'காஞ்சி', 'டியான்' உள்ளிட்ட படங்களை இயக்கிய ஜி.என்.கிருஷ்ணகுமார் இயக்குகிறார். இந்தப் படத்தில் கதாநாயகியாக மானஷா ராதா கிருஷ்ணன் நடிக்க முக்கிய கதாபாத்திரங்களில், குருசோமசுந்தரம், இளங்கோ குமரவேல், மாரிமுத்து, அப்புக்குட்டி, ஜார்ஜ் மரியான், பசங்க சிவக்குமரன், சுஜாதா, வித்யா ப்ரதீப், மஞ்சுபெத்து ரோஸ் உள்ளிட்ட பலரும் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர்.

## ஆறு விதமான ஆச்சரியங்கள் ....!



1. 'இறப்பு' என்பது நிச்சயிக்கப்பட்ட நேரத்தில் வந்தே தீரும் என்பதை அறிந்த மனிதர்கள், கவலைப்படாமல், தன் கடமைகளைச் செய்யாமல் சிரித்துக் கொண்டிருப்பது ஆச்சரியம்.!

2. ஒரு நாளில் இவ்வுலகம் அழிந்து போகும் என்பதை அறிந்த மனிதன், உலகத்தின் மீது மோகம் கொண்டிருப்பது ஆச்சரியம்...!!!

3. எந்த ஒரு செயலும் இறைவன் விதித்தபடியே நடக்கும் என்பதை அறிந்த மனிதன், கை நழுவிச்சென்றவற்றை எண்ணி கவலைப்பட்டுக்கொண்டிருப்பது ஆச்சரியம்...!

4. மறுமை வாழ்க்கைக்கான தீர்வு இவ்வுலகிலேயே இருப்பதை நம்புகின்ற மனிதன், அதனைப் பற்றி அக்கறையின்றி வாழ்ந்து கொண்டிருப்பது ஆச்சரியம்...!!!

5. நரக நெருப்பின் வேதனை பற்றி அறிந்த மனிதன், அது பற்றி சிந்திக்காமல் தொடர்ந்தும் பாவம், தவறு செய்வது ஆச்சரியம்...!!!

6. நரகம், சொர்க்கத்தைப் பற்றி அறிந்த மனிதன், உலக செல்வங்களை சேர்த்து வைப்பதில் தமது முழு வாழ்வையும் கழிப்பது ஆச்சரியம்!

## வடிவேலு தமிழகம்

நடிகர் வடிவேலுவின் வருகைக்குப்பிறகு நாம் அப்பப்போ பேசும் ஆங்கில மொழி எத்தனை மாறியிருக்கிறது என்று இந்த நீண்டபட்டியலைக்கண்டால் வியப்பாக இருக்கிறது. ..!!



Oh shit
வட போச்சே

Is it so?
ஆஹாம்

Be careful
மண்ட பத்திரம்

Back to square one
மறுபடியும் முதல்லருந்தா?

I feel you, bro
வொய் ப்லெட்? சேம் ப்லெட்

You are useless
நீ புடுங்குனது பூராவுமே தேவயில்லாத ஆணிதான்

Inflated ego
இப்டி உசுப்பேத்தி உடம்ப ரனகலம் ஆக்கிடாங்கப்பா

They have started
ஆஹா, கிளம்பிட்டாங்கப்பா! கிளம்பிட்டாங்கப்பா!

Disrespectful name calling
மிஸ்டர் பிச்சுமணி. கிவ் ரெஷ்பெக்ட், டேக் ரெஷ்பெக்ட்

Mail me
யாரவது என்ன காண்டாக்ட் பன்னனும்னா, ww பிச்சு டாட்காம் கு மெய்ல் பன்னுங்க

I am tired
ஸப்பா, இப்போவே கண்ண கட்டுதே

Don't forget the past
வரலாறு ரொம்ப முக்கியம் அமைச்சரே

Swept away by beauty
இதுக்கு பேரு தான் அழகுல மயங்கி விழுரதோ

No hike
பேட்டாவா? பேட்டா எங்கம்மா தராங்க

I received a compliment
என்ன ரொம்ப நல்லவன்னு சொல்லிட்டாங்க

Unexpected surprise
எதையுமே பிலான் பண்ணி பண்ணனும், பிலான் பண்ணாம பண்ணா இப்டிதான்

Note to self
பீ ஹார்ஃபுல்! என்ன சொன்னேன்!

You are the SME(subject matter expert)_
தங்களுக்கு தெரியாத சட்டம் ஒன்றும் இல்லை

Amazed_
நா அப்பிடியே ஷாக் ஆயிடேன்

Why you're shouting?
"தம்பி நாய் ஏன் கத்துது?"

Get out
வெளிய போங்கடா அயோக்கிய ராஷ்கல்கலா

**தொடர்ச்சிகள்....**

### மன்னார்...

தோடு, மேலும் ஒருவர் படுகாயமடைந்து மன்னார் பொது மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவர் பேசாலை முருகன் கோவில் பகுதியைச் சேர்ந்த நேற்று தனது பிறந்த நாளைக் கொண்டாடிய எ. அசோக்குமார் (வயது-25) என்ற இளைஞனே உயிரிழந்துள்ளார்.

மன்னாரில் இருந்து தலைமன்னார் வீதியூடாக இளைஞனும், இன்னுமொருவரும் உந்துருளியில் சென்று கொண்டிருந்த போது, அதே வீதியூடாக மன்னார் நோக்கிப் பயணித்த பட்டா ரக வாகனத்துடன் புதுக்குடியிருப்பு பகுதியில் நேருக்கு நேர் மோதி விபத்து இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ஓ.5.56)

### பாடசாலைகளில்...

என்று கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

பாடசாலைகளின் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக பெற்றோரைப் பயன்படுத்துவதை நிறுத்துமாறும் கல்வி அமைச்சு உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளது.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் பின்னர் நாட்டில் தற்போது சுமுகமான நிலமை ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன் பாதுகாப்பு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. தற்போதைய சூழலில் மாணவர்களின் பாதுகாப்பு குறித்து பெற்றோர்கள் அச்சமடையத் தேவையில்லை, என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. (ஓ.5)

# பூகம்பம்

- பூகம்பம் உயிரையும் உடமைகளையும் அழிக்கும் இயற்கையின் சீற்றம் ஆகும்.
- பூகம்பம் பூமிக்கு அடியில் ஏற்பட்டு பூமியின் மேற்பரப்புவரை பரவும்.
- பூமிக்கு அடியில் உள்ள டெக்டானிக் பாறைகள் சுமார் 20 கி.மீற்றர் முதல் 300 கிலோமீற்றர் வரை கனங்கொண்டவை. இவை வெப்ப சலனத்தால் வருடத்துக்கு சுமார்5சென்ரிமீற்றர் முதல் 10 சென்ரி மீற்றர்வரை நகர்ந்து ஒன்றோடொன்று மோதுகின்றன.
- இதன் விளைவாக இந்தப் பாறைகளில் அழுத்தம் உண்டாகிறது.
- தொடர்ந்து இந்தப் பாறைகள் ஒன்றின் அழுத்தத்தை மற்றொன்று தாங்க முடியாத நிலையில் இந்தப் பாறைகள் ஒன்றிலிருந்து ஒன்று வழுக்கிவிடுகிறது. அப்போது தான் அந்தப்பாறையின் பிளவில் பூமி அதிர்வு உண்டாகிறது.
- இந்த அதிர்வுகள் பலவிதமான அலைகளாக பூமியின் மேற்பரப்புக்கு வந்து நிலநடுக்கத்தை ஏற்படுத்துகின்றன.
- நில நடுக்கங்கள் இயற்கையாகவும் செயற்கையாகவும் ஏற்படுகின்றன.

*ரணில்...*

அமைச்சர் ஆகியோர் தேசிய பாதுகாப்பு சபை கூட்டத்துக்கு 2018ஆம் ஆண்டு நவம்பர் 13ஆம் திகதி முதல் அழைக்கப்படவில்லை. அவர்களை அழைக்க வேண்டாமென அரச தலைவர் என்னிடம் கூறினார். அன்று முதல் கடந்த ஏப்ரல் 25 ஆம் திகதி வரை தேசிய பாதுகாப்பு சபையின் நான்கு கூட்டங்கள் நடந்தன. இரண்டு தடவைகள் நான் புலனாய்வு தகவல்களை அரச தலைவருக்கு விளக்கிக் கூற முயன்றேன்.

ஆனால் அரச புலனாய்வுப் பணிப்பாளர் தம்மிடம் எல்லாவற்றையும் கூறிவிட்டதாக அரசதலைவர் என்னிடம் சொன்னார். நான் பதவியில் இருந்த ஐந்து மாத காலத்தில் புலனாய்வுத் தகவல்களை அரச தலைவருக்கு விபரிக்கும் நடைமுறை இருந்ததில்லை. அரச புலனாய்வுத் துறை பணிப்பாளருக்கும் அரச தலைவருக்கும்நேரடித் தொடர்பு இருந்தது.

நான்கு ஆண்டுகள் காலம் அரச தலைவருக்கு புலனாய்வுத் தகவல்களை வழங்கி வருவதாக புலனாய்வுப் பணிப்பாளர் ஒரு தடவை என்னிடம் கூறியிருந்தார். பாதுகாப்பு செயலரான நான் எனது அமைச்சரை சந்திக்க கூட முடியாத நிலையில் இருந்தேன். இரண்டு கிழமைகளுக்கு ஒரு தடவை கூட சந்திக்க கஷ்டமாக இருந்தது. அவருக்கு அதற்கான நேரம் இருக்கவில்லை. ஒரு கையொப்பம் பெறவே மூன்று மணி நேரம் காத்திருக்க வேண்டியேற்பட்டது. ஏப்ரல் 9 ஆம் திகதியில் இருந்தே அச்சுறுத்தல் இருந்ததால் வழமைபோல அந்த தகவலையும் புலனாய்வுப் பிரிவு அரச தலைவருக்கு கூறியிருக்குமென நான் யூகித்தேன். தாக்குதலுக்கு பின்னர் தலைமை அமைச்சர் என்னை சந்திக்க அழைத்தாலும் அவரை சந்திக்க செல்ல அரச தலைவர் என்னை அனுமதிக்கவில்லை, என்றார் ஹேமசிறி பெர் னா ண்டோ.

(ஓ.5.22)

## பெயர்மாற்றம்

சிவிக்சென்ரர் வட்டக்கச்சி கிளிநொச்சியைச் சேர்ந்த **நோர்வூட் சௌந்தரராஜா** ஆகிய எனது கணவரது பெயரை இன்றிலிருந்து **நோபேட் சௌந்தரராஜா** எனப் பெயர்மாற்றி இனிவரும் காலங்களில் சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையெப்பம் இடுவார் என்பதை சகலருக்கும் அறியத் தருகின்றேன்.

**திருமதி அன்னமலர் நோபேட் சௌந்தரராஜா** (மனைவி)

(ACH/632) (11.17)

# மரண அறிவித்தல்



## திருமதி நல்லம்மா விஸ்வலிங்கம்

சரவணை கிழக்கைப் பிறப்பிடமாகவும், கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நல்லம்மா விஸ்வலிங்கம் நேற்று (06.06.2019) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி-தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கதிரவேலு- சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற விஸ்வலிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான நகுலாம்பிகை, பாக்கியரெத்தினம், சொர்ணம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான நாகம்மா, சண்முகம், சொக்கலிங்கம் ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்ற அன்பழகன் (லண்டன்) மற்றும் அன்பழகி, மதியழகி, ஸ்ரீயழகி, அறிவழகன் (லண்டன்), மதியழகன், திருவழகி ஆகியோரின் அன்புத் தாயும், சந்திரவதனா (லண்டன்), இராசேந்திரம், வன்னியசிங்கன் (ஓய்வுபெற்ற நீதிமன்ற பதிவாளர்), குணசேகரம், ஸ்ரீரங்கநாயகி (லண்டன்), தவச்செல்வன் (இத்தாலி) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், பார்த்தீபன்-அனித்தா (லண்டன்), சிந்துஜா (லண்டன்), சஜந் (லண்டன்), பத்மினி-நதீஷன் (பிரான்ஸ்), காண்டீபன்-ஜீவிதா (பிரான்ஸ்), காயத்திரி-சுகுமாரன், சயந்தினி-பிரதீப் (லண்டன்), நிறைஞ்சன் (வவுனியா, நீதிமன்ற பதில் பதிவாளர்) - சுதானி, நிறைஞ்சனி (ஆசிரியர்- வேம்படி மகளிர் உ.பாடசாலை), நெல்சன், நிதர்சன் (நில அளவையாளர், பயிலுனர்)-கம்ஷா, நிரோஷன் (Denta கம்பனி விற்பனை பிரதிநிதி)- பிரியா, பவனுஷா (தினக்குரல்), திவாகரன், அபிஷா (லண்டன்), யதுகுலன், யதுசிகா, யதுசியன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், நிவேதா, சாயித்தியன், அஷ்வின், அமாயா, அக்ஷித், அக்ஷரா, தரணிதா, வருணிதா, கிருத்திக், சஷ்மிகா, ஷகிந்தன், லக்ஷகி, மயூரா ஆகியோரின் பாசமிகு பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.06.2019) வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**முத்தட்டுமட வீதி,**
**கோண்டாவில் மேற்கு,**
**கோண்டாவில்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**தொ.பே: 0778588787, 0766971521**

# மரண அறிவித்தல்கள்

## சம்பந்தப்பிள்ளை கந்தசாமி



அராலிதெற்கு வட்டுக்கோட்டையைப் பிறப்பிட மாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சம்பந்தப்பிள்ளை கந்தசாமி நேற்று (06.06.2019) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சம்பந்தப்பிள்ளை நாகம்மா தம்பதியினரின் பாசமிகு மகனும் காலஞ்சென்ற சின்னத்துரை அபிராமிப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகனும் காலஞ்சென்ற மனோன்மணியின் அன்பு கணவரும் செந்தூரன் (பொறியியலாளர்), சுகந்தியா (ஜேர்மனி), தர்சினி (கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர், யாழ்ப்பாணம்), தர்சனன் (சமுர்த்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம் வலிமேற்கு, சங்கானை) ஆகியோரின் அன்பு தந்தையாரும் புவனேஸ்வரி, நடராசா, காலஞ்சென்ற முத்துமாரி ஆகியோரின் அன்புச்சகோதரனும் காலஞ்சென்ற அழகரத்தினம் மற்றும் கலாநிதி, காலஞ்சென்ற சுப்பிரமணியம், இராஜேஸ்வரி, தங்கராணி ஆகியோரின் மைத்துனரும் செங்கமலச்செல்வி, இரவிச்சந்திரன் (ஜேர்மனி), புவிராஜ், சிவகரணி ஆகியோரின் மாமனாரும் டிலோஜன், டினுஜா, மதுசா, யனுஜன், மேருக்சன், கவீனா, பிரவீன், நித்தியா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.06.2019) வெள்ளிக் கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூனாவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**அராலி தெற்கு,**
**வட்டுக்கோட்டை**

**தகவல்: குடும்பத்தினர்**
**077 908 6483**

## திருமதி புவனேஸ்வரிஅம்மா சுப்பிரமணியஐயர்



கொக்குவில் அம்மன் வீதியை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி புவனேஸ்வரிஅம்மா சுப்பிரமணியஐயர்நேற்று (06.06.2019) வியாழக்கிழமை அதிகாலை காலமாகி விட்டார்.

அன்னார் சுப்பிரமணிய ஐயரின் அன்பு மனைவியும் சுரேஸ்குமார், காலஞ்சென்ற, கிருஸ்ணகுமார் மற்றும் திருமதி ச. விஜயலஷ்மி ஆகியோரின் தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (07.06.2019) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப 3.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.30, அம்மன் வீதி,**
**கொக்குவில் கிழக்கு**

தகவல்:
**கி.சுப்பிரமணிய ஐயர்** (கணவர்)
**077 666 3206**

## ஆறுமுகம் குணலிங்கம்



கொல்லங்கலட்டியை பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் குணலிங்கம் கடந்த (05.06.2019) புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-சரஸ்வதி தம்பதியினரின் அன்பு மகனும், சட்டநாதர் காலஞ்சென்ற சிதம்பரம் தம்பதியினரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சரஸ்வதி குணலிங்கத்தின் அன்புக்கணவரும், கேதீஸ்வரன் (கனடா), சுபாஜினி (பிரான்ஸ்), சுமதி (ஜேர்மனி), மணிமாறன் (ஜேர்மனி), சுதாமினி (ஜேர்மனி), நிசாந்தன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத்தந்தையும் தர்மலிங்கம், சிவலிங்கம், தவமணி, திலகவதி, மகேஸ்வரி, லோகலிங்கம் ஆகியோரின் அன்புச்சகோதரனும் சுபாஜினி (கனடா), முகுந்தன் (பிரான்ஸ்), ஜீவசுரேன்(ஜேர்மனி), மதுரிகா(ஜேர்மனி), துவாரகா(ஜேர்மனி), ஆகியோரின் பாசமிகு மாமனாரும் அனாமிகா, பிரவீன், சாருஜன், சஷ்மிதன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (12.06.2019) புதன்கிழமை ஜேர்மனியில் நடைபெறவுள்ளது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஆறுமுகம் வீதி, கந்தரோடை,**
**சுன்னாகம்**

தகவல்:
**இ.சட்டநாதர்**

## கேள்வி அறிவித்தல்

### வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை, நேரியகுளம் வீதி, நெளுக்குளம், வவுனியா
### மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை வேலைத்திட்டம் (PSDG) – 2019

1. தலைவர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை, தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர் களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வீதி வேலைகளிற்காக கோருகின்றார்.
2. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
3. கேள்வி பெற தகுதியுடையவராவதற்கு, சித்தி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும் 04/2016(i)ம் இலக்க 08.05.2019ம் திகதிய பொதுச்சுற்றறிக்கையின் பிரகாரம் நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) வீதி வேலை செய்வதற்கான கீழே அட்டவணையில் காட்டப்பட்டபடி பொருத்தமான தரத்தில் பதிவினை மேற்கொண்டிருப்பதுடன் வடக்கு மாகாணத்திற்குள் செல்லுபடியான வியாபார/கம்பனி பதிவினையும் கொண்டிருத்தல் வேண்டும்
4. தேவையான தகமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தலைவர்/ செயலாளர் வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை, நேரியகுளம் வீதி, நெளுக்குளம், வவுனியா (தொலைபேசி: 0242225737, தொலைநகல்- 0242050067, மின்னஞ்சல் npvstps@yahoo.com) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் 21.06.2019ஆம் திகதி வரை மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09.00 மணி முதல் மாலை 14.00 மணி வரை கேள்விப் ஆவணத்தினை பார்வையிடலாம்.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணங்களை ஆங்கில மொழியில் தலைவர்/செயலாளர், வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை, நேரியகுளம் வீதி, நெளுக்குளம், வவுனியா எனும் இடத்திலிருந்து 07.06.2019 திகதியிலிருந்து 21.06.2019 வரை காலை 09.00 மணிக்கும் 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப் படாத கட்டணமாக ரூபா 2000/= ( வரிகள் நீங்கலாக) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாக செலுத்தப்பட வேண்டும்.
7. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து தலைவர்/செயலாளர் வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை, நேரியகுளம் வீதி, நெளுக்குளம் வவுனியா எனும் முகவரிக்கு 21.06.2019 ஆம் திகதி மாலை 14.30 மணிக்கு முன்பதாகக் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
8. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித்திகதியிலிருந்து 63 (அறுபத்தி மூன்று நாட்கள் 23.08.2019) நாட்கள் வரையும் செல்லுபடியாகும்
9. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| கேள்வி எண் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ)மில்லியன் | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/43(5)/5.5/4-9/19 | புதியவேலர்சின்னக்குளம் பிரதான வீதி கிரவலிடல் | 2.598 மில்லியன் | 03 மாதங்கள் | C8 & C7 வீதி வேலை | 26,000.00 | 20.09.2019 |
| NP/14/43(5)/5.5/4-10/19 | சிதம்பரநகர் உள்ளக வீதி கிரவலிடல் | 4.301 மில்லியன் | 03 மாதங்கள் | C8 & C7 வீதி வேலை | 44,000.00 | 20.09.2019 |
| NP/14/43(5)/5.5/4-11/19 | தவசிகுளம் பாலவிநாயகர் வீதி கல்லிட்டுத் தாரிடல் | 4.417 மில்லியன் | 03 மாதங்கள் | C8 & C7 வீதி வேலை | 45,000.00 | 20.09.2019 |

10. கேள்வி கோரல் பற்றிய முன்னோடிக் கூட்டம் 19.06.2019 ஆம் திகதி காலை 10.30 மணிக்கு வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபைக் கட்டிடத்தில் நடைபெறும் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்தச் செலவில் கலந்து கொள்ள முடியும்.

**தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு**
**வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை,**
**நெளுக்குளம், வவுனியா.**
**07.06.2019**

## கேள்வி அறிவித்தல்

### குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி நன்கொடை வேலைத்திட்டம்- 2019
### உள்ளூராட்சி திணைக்களம்
### கரைச்சி பிரதேச சபை - கிளிநொச்சி

1. குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி நன்கொடை வேலைத்திட்ட நிதியின் ஒரு பகுதி கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வேலை திட்டத்தின் கொடுப்பனவுக்கென் பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2. தவிசாளர், பிரதேச சபை, கரைச்சி, கிளிநொச்சி சார்பாக தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட கட்டுமான வேலைகளுக்காக கோருகின்றார்.
3. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் வடமாகாண நிர்வாக எல்லைக்குள் பதிவுசெய்யப்பட்ட கேள்விதாரர்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
4. கேள்வி பெற தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் வீதி மற்றும் கட்டட அமைப்புக்கான (CIDA) பதிவினை மேற்கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.
5. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule 5) கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி. (தொலைபேசி: 0212285761, தொலைநகல்: 0212285690, E-Mail: kilinochchi1kps@gmail.com) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலைநாட்களில் காலை 09.00 மணி முதல் 14.00 மணி வரை 2019.06.21ஆம் திகதி வரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
7. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் தவிசாளர் , கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி எனும் இடத்திலிருந்து. 2019.06.07 ஆம் திகதியிலிருந்து 2019.06.21 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மட்டும் காலை 09.00 மணிக்கும் 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2,000/- (வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
8. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் இரு பிரதிகளில் தயாரித்து தவிசாளர், கரைச்சி பிரதேச சபை, A9 வீதி கிளிநொச்சி எனும் முகவரிக்கு 2019.06.21 ஆம் திகதி மாலை 14.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப் படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
9. கேள்வியானது கேள்விகள் சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து 63 நாட்கள் (அறுபத்தி மூன்று நாட்கள்)– (2019.08.23) வரையும் செல்லுபடியாகும்.
10. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| கேள்வி எண் | வேலை விபரம் | மதிப்பீட்டு தொகை (ரூ) மில்லியன் | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை வைப்பு (ரூபா) | செல்லுபடியாகும் காலம் |
| NP/KI/KAPS/ PSDG/W/01/2019 | உமையாள்புரம் கழிவகற்றல் பிரதேசத்திற்கான வீதி அமைத்தலும் வேலி அமைத்தலும் | 3.67Mn | 03 மாதம் | C8 / C7 | 37000/= | 20.09.2019 |

11. கேள்வி கோரல் பற்றிய முன் கூட்டிய கூட்டம் 2019.06.14 ஆம் திகதி மாலை 14..30 மணிக்கு தவிசாளர், கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி அலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கலந்துகொள்ளலாம். இதற்கு எதுவித கொடுப்பனவுகளும் வழங்கப்படமாட்டாது.

**2019.06.06**

**அருணாசலம் வேழமாலிகிதன்**
**தலைவர்**
**பெறுகைக்குழு**
**கரைச்சி பிரதேச சபை**

விளம்பர தொடர்புகளுக்கு
உதயன் advt@uthayan.com,
0214931111

## கண்ணீர்க் காணிக்கைகள்



எமது பாடசாலை இரசாயனவியல் ஆசிரியர் செ.கோகுலானந்தன் மற்றும் முன்னைநாள் பௌதீகவியல் ஆசிரியர் செ.சரத்சந்திரன் ஆகியோரது பாசமிகு தாயாரான

**செல்வரத்தினம் மகேஸ்வரி**

அவர்கள் இறைபதமடைந்ததையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங் களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**பாடசாலைச்சமூகம்,**
**யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி.**

(CS/25871)(11,17)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 23 . 11 . 1958

மறைவு 09 . 06 . 2016

**அமரர் குழந்தைவேலு குலேந்திரராஜன்**
**(ராஜன் பொடி பில்டர்ஸ்)**

திதி: பூர்வபக்கபஞ்சமி (07.06.2019)

நிழலாய் போன நிஜங்களில் இன்னமும் எம்மைத் தொலைத்தபடி
இன்றைய நிகழ்வோடு ஒட்டாமல் அன்றைய நினைவுகளோடு
வாழ்நாளைக் கழிக்கின்றோம் நீங்கள் ஆலமரமாய்
இருந்து உங்கள் - குடும்ப
விழுதுகளை வழிநடத்த வேண்டும் என உங்களிடமே சரணடையும்
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

குடும்பத்தினர்.
இல.21 சாரதா வீதி, சங்கத்தானை, சாவகச்சேரி.
கிஷோர்குமார் - மகன்

## மரண அறிவித்தல்கள்



தோற்றம் : 08.02.1925
மறைவு : 06.06.2019

வைத்திய கலாநிதி
**கந்தையா மாணிக்கம்**
உசன், மிருசுவில்
(ஓய்வுநிலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், வடக்கு/கிழக்கு மாகாணம்)

உசனைப் பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட வைத்திய கலா நிதி கந்தையா மாணிக்கம் தனது 94 ஆவது வயதில் (06.06.2019) வியா ழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-சின்னம்மா தம்பதி யரின் ஏக புத்திரனும், காலஞ்சென்ற பூபதியின் அன்புக் கணவரும், மகேஸ்வரி சரவணபவானந்தனின் (கொழும்பு) மைத்துனரும், காலஞ் சென்ற சரவணபவானந்தனின் (கொழும்பு) சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (06.06.2019) வியாழக் கிழமை உசனில் நடைபெற்று, பூதவுடல் ஈச்சங்காடு மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**உசன், மிருசுவில்.**
**செ.மனோகரன்** (T.P.No-0772850744)
**கு.விமலதாஸ்** (T.P.No-0773474767)

## பாபு சுதர்சன்



பிறப்பு 13.05.1988
இறப்பு 03.06.2019

குரும்பசிட்டி கிழக்கைப் பிறப்பிட மாகவும் நவரட்ணராஜா வீதி, கோண்டாவில் மேற்கை வசிப்பிட மாகவும் கொண்ட பாபு சுதர்சன் 03.06.2019 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் பாபு - அருளம்மா தம்பதிகளின் அன்பு மகனும் கபிலதாஸ் - சந்திரிகாவின் அன்புச் சகோதரனும் கந்தன் - பரிசிலிங்கம், கந்தன் - பற்பராசா ஆகியோரின் பாசமிகு பெறாமகனும் காலஞ்சென்ற வர்களான கந்தன் - பூபதி தம்பதிகளின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.06.2019) வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப 10.00 மணியளவில் காரைக்கால் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**நவரட்ணராஜா வீதி,**
**கோண்டாவில் மேற்கு.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# இணுவில் கந்தசுவாமி கோவில்
## வருடாந்த மஹோற்சவ உற்சவம் - 2019 -



இணுவை முருகன் திருவருள் துணை நிற்ப நிகழும் ஸ்வஸ்தி ஸ்ரீ விகாரி வருடம் வைகாசி 25ம் நாள் (08.06.2019) சனிக்கிழமை கொடியேற்றத் திருவிழாவுடன் ஆரம்பமாகி, ஆனி மாதம் 17ஆம் நாள் (02.07.2019) செவ்வாய்க்கிழமை வரை இருபத்தைந்து தினங்கள் நடைபெறும் இத்தினங்களில் முருகன் அடியார்கள் எம்பெருமானை தரிசித்து இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகின்றோம்

**தர்மகர்த்தா சபையினர்,**
**இணுவில் கந்தசுவாமி கோவில்**

**E.S Printers**

357, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

021 492 7471, 021 492 7472
esprintersjaffna@gmail.com

## TRADE FINANCE & INVESTMENTS PLC

(Licensed by the Monetary Board Of the Central Bank of Srilanka Under the finance Business Act No42 of 2011)

**No.459, Union Place, Colombo 02.**

+94 -(0)112 688 421/ +94 -(0)112 688 422 /+94 -(0)112 698 818
+94 -(0)112 699 226 info@tfil.lk www.tfil.lk

**பதிவு செய்யப்பட்ட வாகனங்கள் விற்பனைக்கு கிளிநொச்சிக் கிளையில்**

| Model | Reg.Number | Condition |
|---|---|---|
| AUTO | NP YW – 5689 | Running |
| PULSAR | NP BFO – 8599 | Running |
| CDL | NP BAQ – 6692 | Running |
| HER | NPBGX – 9879 | Running |
| PULSAR | NP BFY – 7830 | Running |
| AVE | NP BGM – 1954 | Running |
| RAY | NP BGE – 9933 | Running |
| PULSAR | NPBHK – 8879 | Running |
| PULSAR | NP BGM – 5280 | Running |
| HUN | NPBGA – 5828 | Running |
| SCOOTY | NP BEN – 2652 | Running |
| CDL | NPBHL – 2906 | Running |
| PEL | NP BGN – 9661 | Running |
| DIO | NPBGG – 8335 | Running |
| PULSAR | NP BFQ – 8248 | Running |
| LET | NP BFV – 9906 | Running |
| PULSAR | NP BFO - 1285 | Running |
| ACI | EPBEX – 0791 | Running |
| RAY | NP BFO – 7947 | Running |
| PULSAR | NPBGY – 6881 | Running |
| PULSAR | NP BEV – 2041 | Running |
| V12 | NPBGN – 9669 | Running |
| DIO | NPBGL – 6671 | Running |
| PSR | NP BGJ – 0811 | Running |
| PSR | NPBHC - 7896 | Running |
| DIO | NPBHI - 9128 | Running |

(N 10400)(14.17)

வேலை நாள்களில் கிளிநொச்சி கிளையில் பார்வையிடலாம் 08.30AM- 05.30PM
பணம் செலுத்தியதுடன் அனைத்து ஆவணங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.
நிபந்தனைக்குட்பட்டது.

தொடர்புகளுக்கு: 077 212 5848/077 166 1648/ 021 228 0110

# பேராசிரியர் அழகையா துரைராசா அவர்களின் 25வது ஆண்டு நினைவு தின வைபவம் - 2019



**காலம்:** 11.06.2019
**நேரம்:** மு.ப.10 மணி
**இடம்:** உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி பேராசிரியர் அ.துரைராசா நினைவு மண்டபம்

**தலைவர்:** பேராசிரியர் சி.சிறிசற்குணராசா
**நினைவுப் பேருரை:**

"மானுடமும் ஊடகமும்"
கலாநிதி சிவசுப்பிரமணியம் ரகுராம்
PhD.(Gandihigram Rural university),
M.A.(Journalism and mass communication)
B.sc.(visual communication),
சிரேஷ்டவிரிவுரையாளர், ஊடகக்கற்கைகள் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

**0771710294**

செயலாளர்,
பழைய மாணவர் சங்கம்,
உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி.

# 26ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**தோற்றம்** 01.01.1954 **மறைவு** 07.06.1993

அமரர்
**நகுலராசா நகுலேஸ்வரி**


ஆண்டவனின் திருவுருவாய்
அன்பின் இலக்கணமாய்
இல்லத்தின் ஒளி விளக்காய்
ஈகையில் வள்ளலாய்
உள்ளத்தில் உத்தமியாய்
எண்ணத்தில் உயர்ந்தவராய்
ஏற்போருக்கு அமுதசுரபியாய்
வாழ்ந்த....

எங்கள் குடும்ப குலவிளக்கு மறைந்து ஆண்டுகள் இருபத்தி ஆறு ஆனதோ
ஆண்டுகள் எத்தனையானாலும் ஆறுமோ உன் நினைவு...

ராஜன் ஹாட்வெயார்,
பருத்தித்துறை.

**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்



## சுப்பையா முருகையா

(முன்னாள் காசாளர் - விஜியா கூல்பார், பேருந்து நிலையம், யாழ்ப்பாணம்)

கம்பளையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் நல்லூர் கோயில் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா முருகையா 05.06.2019 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா - நல்லம்மா தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான ராமையா - மீனாட்சி தம்பதியரின் அன்பு மருமகனும், கோவிந்தம்மாவின் அன்புக் கணவரும், புஸ்பவதி, இராஜரட்ணம் (யாழ்கோ - திருநெல்வேலி), மகேஸ்வரி (லண்டன்), இராஜேஸ்வரி, சிவம் (யாழ்கோ - திருநெல்வேலி), சிவதாரணி ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜங்கரன் (தியேட்டர்), செல்வராணி, நாகராஜன் (ஜெயதுர்க்கா நகைத்தொழிலகம் - மல்லாகம்), கஜேந்திரன் (லண்டன்), சர்மிளா, உதயகுமார் (நகைத்தொழில்), வித்தியாதரன் (எரிபொருள் நிரப்பு நிலையம் - S.V.M. - பரமேஸ்வராச்சந்தி) ஆகியோரின் பாசமிகு மாமனும், சிவசாந்தன் (படப்பிடிப்பாளர் டொட்லைன்), பிரசாந்தன் (நியூ லலிதா நகைமாளிகை), காலஞ்சென்ற நிரோஷா மற்றும் சௌமியா (சௌமியா அழகு கலை நிலையம் - யமுனா வீதி), மோனலிஷன் (யாழ் சென் ஜோன்ஸ் கல்லூரி), ருக்ஷிகா (யாழ் இந்து மகளிர் கல்லூரி), விஷ்ணுவரன் (யூனியன் கல்லூரி), பகிராம், நேபகா (ஸ்கந்தவரோதயக்கல்லூரி), பகீத், லஜின், துஷிகா (யாழ் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை), அஜய், அக்சனா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.06.2019) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 1.00 மணியளவில் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**238, கோயில் வீதி,**
**நல்லூர்,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(cs 23659)

**077 517 8542**

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# மெல்ல வெளிக்கிளம்பும் பௌத்த மேலாதிக்கவாதம்

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலுக்குப் பின்னரான நிலைமைசிறுபான்மைச்சமூகத்துக்குஅச்சுறுத்தலாக தற்போதுமாற்றம்பெற்றுள்ளது.தாக்குதலுக்குப்பின்னர் பௌத்த மேலாதிக்க வாதம் தீவிரம் பெறத் தொடங்கியுள்ளது. இப்போது அது முஸ்லிம் மக்களை இலக்கு வைத்துள்ளபோதும், அது மெல்ல மெல்ல அனைத்துச் சிறுபான்மை மக்களுக்கும் ஆபத்தானதாக மாறும் என்பதை மறுக்க முடியாது.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலுடன் சில முஸ்லிம் தலைவர்களுக்குத் தொடர்புண்டு என்ற குற்றச்சாட்டைத் தொடர்ந்து அவர்களைப் பதவிவிலக்க வேண்டும் என்ற கோரிக்கை தெற்கில் இருந்து கிளம்பியது. குற்றஞ்சாட்டப்பட்ட முஸ்லிம் தலைவர்கள் பதவி விலகும் அவசியம் இல்லை என்னும் நிலைப்பாட்டை வெளிப்படுத்தியிருந்த அரசு, இந்தவிடயத்தைப்பௌத்ததேரர்கள்கையில் எடுத்த பின்னர் மெல்ல மாற்றிக் கொண்டு மௌனம் சாதித்தது. அமைச்சர் ரிசாத் பதியுதீன் மற்றும் கிழக்கு, மேல்மாகாண ஆளுநர்கள்பதவிவிலக வேண்டும் என்று அத்துரலிய ரத்ன தேரர் கண்டியில் பட்டினிப் போராட்டம் நடத்தினார். அதைத் தொடர்ந்து அரசில் அங்கம் வகித்த முஸ்லிம் அரசியல் தலைவர்கள் தாம் வகித்த அனைத்து அமைச்சுப் பதவிகளையும் உதறினர்.

நீதிமன்றை அவமதித்த குற்றச்சாட்டில் கடூழியச்சிறைத் தண்டனைவிதிக்கப்பட்டு, அரசதலைவர்மைத்திரிபால சிறிசேனவால் அண்மையில் பொதுமன்னிப்பில் விடுதலை'செய்யப்பட்ட பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலர் கலகொட அத்தே ஞானசார தேரர் இப்போது ஒரு கருத்தை வெளியிட்டுள்ளார். குற்றஞ்சாட்டப்பட்ட முஸ்லிம் அரசியல்வாதிகள் மட்டுமல்ல, அனைத்து முஸ்லிம் அரசியல்வாதிகளையும் கைது செய்து தீவிரவிசாரணை நடத்தவேண்டும் என்பதே அது. அது மட்டுமல்ல முஸ்லிம்கள் இன்று நாட்டுக்குப் பெரும் ஆபத்தாக மாறியுள்ளனர். சிலரின் நடவடிக்கைகளால் ஒட்டுமொத்த முஸ்லிம்களையும் நம்ப முடியாது என்றும் அவர் கூறியுள்ளார்.

இவரது கூற்றைச் சாதாரணமாகக் கருதிச் சென்று விட முடியாது. முன்னைய அரசுகளும் சரி, தற்போதைய அரசும் சரி,பௌத்த மேலாதிக்க எண்ணம் கொண்ட அரசுகளே என்பதை எவரும் மறுக்க முடியாது. அரசதலைவர் மைத்திரிபாலசிறிசேனவோ, தலைமை அமைச்சர்ரணில் விக்கிரமசிங்கவோ பௌத்த மதத் தலைவர்களின் கருத்துக்களைப்புறந்தள்ளிச்செயற்படும் நிலையில் இல்லை என்பதற்குநாட்டில்நடைபெற்றஅண்மையநிகழ்வுகளே சான்றாகியுள்ளன. இந்தநிலையில் ஞானசாரர்கூறியுள்ள கருத்தைசிறுபான்மைமக்களுக்கானஎச்சரிக்கையாகவே கருத வேண்டியுள்ளது. ஒரு சில அரசியல்வாதிகளைச் சுட்டிக்காட்டி ஆரம்பிக்கப்பட்டு, இப்போது அனைத்து முஸ்லிம்அரசியல்வாதிகளையும் நோக்கித்திரும்பியுள்ளது பௌத்த மேலாதிக்கச் சிந்தனை.

இவ்வாறான பௌத்த மேலாதிக்கச் சிந்தனையே நாட்டில்போர்ஏற்படக்காரணமாக இருந்தது. தமிழர்கள்மீது பாய்ந்த பௌத்த மேலாதிக்க சிந்தனை தற்போது நாட்டின் மற்றொரு சிறுபான்மைச் சமூகமான முஸ்லிம்கள் மீது பாயத் தொடங்கியுள்ளது. இது காலப்போக்கில் ஏனைய சிறுபான்மைச் சமூகங்களின் மீது பாயும் என்பதை மறுத்துவிட முடியா. சிறுபான்மைச் சமூகங்கள் இப்போது ஒன்றிணைந்து இந்த விடயத்தைக் கையாள்வதேஅவர்களின்இருப்புக்குப்பாதுகாப்பானதாகஅமையும்.

இதனால் அழிவுகள் தொடருமே தவிர நாட்டுக்கு நன்மைகள் ஏதும் ஏற்பட்டுவிடா. பௌத்த மேலாதிக்கச் சிந்தனையைச் சிறுபான்மை மக்களின் மீது திணிக்கும் முயற்சிகளைத் தெற்குக்கு கைவிடும்போதே நாட்டில் அமைதியும், சுபீட்சமும் ஏற்படும். தெற்குத்தலைவர்கள் அதை உணர்ந்து செயற்படுவதே நன்மை பயக்கும்.



# இஸ்லாமிய பயங்கரவாதம்; உளவுத்துறையின் வீழ்ச்சி!

ஞா.பிரகாஸ்

ஒரு நாட்டினுடைய அரசு மற்றும் பாதுகாப்புத்துறை தனது நாட்டையும், மக்களையும் பாதுகாத்துக் கொள்வதற்காக தேசிய பாதுகாப்பில் கண்ணும் கருத்துமாக கவனம் கொண்டிருக்க வேண்டியது மிக முக்கிய பொறுப்பாகும். அதிலும், குறிப்பாக மக்களை அழிக்கும் பயங்கரவாதச் சக்திகள் நாட்டுக்குள் நுழைந்து விடக்கூடாது என்பதிலும் மிகத் தீவிரமாகவிருக்க வேண்டும். ஆனால், எமது நாட்டில் அது முழுமையாக தோற்றுப் போயிருக்கின்றது. அந்தத் தோல்வி, இன்று எங்கள் நாட்டு மக்களின் உயிரையும், பன்னாட்டு மக்களின் உயிரையும் பறித்து குருதி வெறியாட்டத்துக்கு வித்திட்டிருக்கின்றது. இந்த வெறியாட்டமும் அதன் பின்னராக நகர்வுகளும் 30 ஆண்டுகளாக இடம்பெற்ற உள்நாட்டுப் போரை விடவும் கொடுமையானவை.

### ஸஹ்ரான் ஹாசிம் பற்றி ஏலவே தெரிவித்த மக்கள்

குண்டுத் தாக்குதல்களுக்கு பின்னர் அரசு மூன்று இஸ்லாமிய தீவிரவாத போக்குடைய அமைப்புக்களை தடை செய்திருந்தது. அதில், 'தேசிய தௌஹீத் ஜமாத்' பயங்கரவாதத் தாக்குதல்களை முன்னெடுப்பதில் முக்கியபங்காற்றிய அமைப்பாகும். அவ்வமைப்பின், செயற்பாடுகளைசிலஆண்டுகளுக்கு முன்னர் காத்தான்குடியைச் சேர்ந்த குறிப்பிட்டளவிலான இஸ்லாமிய மக்கள் வெளிச்சம்போட்டுக் காட்டிய ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது. அப்போதும், உளவுத்துறையினர் விழித்துக் கொள்ளவில்லை. 2017 ஆம் ஆண்டுமார்ச்மாதத்தில் தேசிய தௌஹீத் ஜமாத் என்பது பயங்கரவாத அமைப்பு, அதன் தலைவராக இருந்த ஸஹ்ரான் காசிம் (உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்களின் தலைவன் என்று கூறப்பட்டிருப்பவர்) பயங்கரவாதி என்பதை அம்மக்கள் வெளிப்படுத்தினர். அன்றைய தினம் 'ஸஹ்ரான் சாத்தானை கைது செய், நல்லாட்சியில் ஆயுதக் கலாசாரத்தை உட்புகுத்தாதே' போன்ற பதாகைகளுடன், அடிப்படைவாதத்தை தூண்டும் தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பை அரசு உடனடியாக தடை செய்ய வேண்டும் என்று அரசுக்குக் கோரிக்கை விடுத்து அந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது. குறித்த, போராட்டமானது தேசிய தௌஹீத் ஜமாஅத் அமைப்பால் நிகழ்த்தப்பட்ட வாள்வெட்டுத்தாக்குதல் சம்பவத்தின் பின்னணியிலேயே இடம்பெற்றது. ஆயினும், இவை, இஸ்லாமிய அமைப்புகளுக்கு இடையிலான மதக் கொள்கை முரண்பாடுகளுக்குள் மழுங்கடிக்கப்பட்டது. அரசு மற்றும் உளவுத்துறையும் அவையனைத்தையும் சந்தேகக்கண் கொண்டுபாராமல், அவற்றை மத முரண்பாடு எனும் கோணத்தில் சாதாரணமாக உதறித் தள்ளிவிட்டிருந்தன. இங்குதான் உளவுத்துறையின் முதலாவது வீழ்ச்சி தொடங்கியது.

2018ஆம் ஆண்டு மார்ச்சில் காத்தான்குடி பொலிஸ் பிரிவில் இருக்கக்கூடிய ஆரயம்பதி பகுதியில் இஸ்லாமிய அரசு பயங்கரவாதிகளின் பெயரை தாங்கிய சுலோக அட்டையுடன் வெடி பொருள்கள் சில மீட்கப்பட்டன. அந்தச் சம்பவத்தினை கூட இந்தநாட்டு உளவுத்துறை கவனத்தில் கொள்ளவில்லை.



### ஆரயம்பதியில் மீட்கப்பட்ட வெளிபொருள்கள்

இதேபோல் 2018ஆம் ஆண்டு மார்ச்சில் காத்தான்குடி பொலிஸ் பிரிவில் இருக்கக்கூடிய ஆரயம்பதி பகுதியில் இஸ்லாமிய அரசு பயங்கரவாதிகளின் பெயரை தாங்கிய சுலோக அட்டையுடன் வெடி பொருள்கள் சில மீட்கப்பட்டன. அந்தச் சம்பவத்தினை கூட இந்தநாட்டு உளவுத்துறை கவனத்தில் கொள்ளவில்லை. அது, கண்டிக்கலவரம் நடந்து கொண்டிருந்தகாலம் என்பதால் அந்தச் சம்பவம் இனவாதத்தின் பெயரால், இனவாதச் சதிகள் காரணமாக இருக்கலாம் எனும் போக்கில் புதைந்துபோனது. ஆனால், இன்று இதனையும் மீளாய்விற்கு உட்படுத்திப்பார்த்தால் அதனுள் மறைந்திருந்த பெரிய உண்மைகள் மிகத் தெளிவாக வெளிப்படுகின்றன. இது, உளவுத்துறையின் இரண்டாவது வீழ்ச்சியாகும். இவ்விரு, விடயங்களிலும் உளவுத்துறையினர், பொலிஸ் துறையினர் உட்பட அரச பாதுகாப்புத்துறை பெரிய கண்காணிப்புத் தவறை செய்திருக்கின்றது. அதுமட்டுமல்லாது, பயங்கரவாதிகளை நெருங்கக்கூடிய சம்பவங்கள் பலநடந்தும் அவற்றை வேறுபல கோணங்களில் நோக்கி, உரிய உளவு விசாரணைகளை மேற்கொள்ளத் தவறியிருக்கின்றனர். அது, பயங்கரவாதிகளின் வளர்ச்சிக்கு வித்திட்டிருக்கின்றது. ஒரு, நாட்டின் உளவுத்துறை இத்தகைய பெரும் உளவுக் குறைபாட்டுடன் இருப்பது பெரும் அழிவுகளுக்கு காரணமாக அமைந்துவிடும் என்பதை இத்தாக்குதல் புடம்போட்டுக் காட்டுகின்றது. ஆனால், உளவுத்துறையின் வீழ்ச்சியை ஏற்றுக்கொள்ளும் அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன 'பலம்வாய்ந்த, ஐரோப்பிய நாடுகளிலும், பயங்கரவாதத் தாக்குதல்கள் இடம்பெற்றது. அதனை, அவர்களினால் தடுக்க முடியவில்லை' என்று சிறுப்பிள்ளைத்தனமான கருத்தை முன்வைத்து சமாளித்துக் கொண்டிருக்கின்றார்.

இலங்கை உளவுத்துறையிடம் இக்குறைபாடு ஏன் ஏற்பட்டது என்று பார்த்தல் 'விடுதலைப் புலிகள் மீள் எழுச்சி பெற்றுவிடுவார்களோ' என்ற ஒரேயொரு குறுகிய நோக்கிலான கண்காணிப்பை மட்டும் தீவிரமாக மேற்கொண்டு வந்ததால்த்தான் என்பதை உணரமுடியும். ஆக, எமது நாட்டின் உளவுத்துறையின் கண்காணிப்பும், விசாரணைகளும் எப்படிப்பட்டது, எதைநோக்கியதாக அமைந்திருந்து என்பதை இந்தவொரு சம்பவத்தின் மூலம் ஊகித்துக் கொள்ளலாம்.

## எந்தவோர் ஆலயத்துக்கும்
# குருக்களை நியமிக்கும்போது பின்னணியை ஆராயுங்கள்
### பன்னாட்டு இந்துக் குருமார் ஒன்றியம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 7

ஆலய நிர்வாகங்கள் ஆலயத்துக்குக் குருக்களை நியமிக்கும்போது அவரது குடும்பப் பின்னணியை ஆராய வேண்டும். அவரது பெற்றோர், கல்வி அறிவு, அவர் எந்தவிடத்தில் எவ்வளவு காலமாக வாழ்கிறார், அந்தணர் அல்லது சைவக்குருமார் குலமரபைப் பேணும் விதம், அவரது வாழ்க்கைநிலை குறித்து தகுதி வாய்ந்த ஒருவரின் சிபார்சுக் கடிதம் முதலானவைற்றைப் பார்க்க வேண்டும்.

இவ்வாறு பன்னாட்டு இந்து குருமார் ஒன்றியத் தலைவர் பண்டிதர் தேசமான்ய கலாநிதி சிவஸ்ரீ து.கு.ஜெகதீஸ்வரக்குருக்கள் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது பற்றி அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அண்மையில் மருதனார் மடத்தில் உள்ள சிவாலயத்தில் முஸ்லிமாக மாறிய ஒருவர் சிவபூசை செய்தமை பற்றியும் மட்டக்களப்பில் உள்ள இந்து ஆலயம் ஒன்றின் குருக்களுக்கு உதவியாளராக இருந்தவர் முஸ்லிம் என்றும் பத்திரிகைகளில் செய்திகள் வெளியாகியிருந்தன. இதைத் தொடர்ந்து இந்து சமய குருமார்கள் பற்றிப் பல்வேறு உண்மைக்குமாறான கருத்துக்கள் சைவத்தமிழர்களால் வெளியிடப்படுவது வருந்துவதற்குரியது.

**அறங்காவலர்கள்**

ஆலயக் குருமாருக்கு உதவியாளராக ஒருவரை நியமிப்பதென்றால், அவர் தீட்சை பெற்றிருக்க வேண்டும். முன்னைய காலத்தில் தீட்சை பெறாத ஒருவரைப் பஞ்சாமிர்தம் தயாரிக்க அனுமதிக்க மாட்டார்கள். ஆலயக் கிரியைகளுக்கு குருமாருக்கு உதவியாக இருக்கின்ற ஒருவரது குடும்பப் பின்னணி முதலானவை பற்றி இந்து ஆலய நிர்வாகிகள் - ஆலய அறங்காவலர்கள் சிந்திக்க வேண்டும்.

**ஆலோசனை கேளுங்கள்**

ஆலய நிர்வாகங்கள், சிவாச்சாரியார் ஒருவரைப் பூசைக்கு நியமிக்கும் போது வணக்கத்துக்குரிய குருமாரையோ, இந்து குருமார் ஒன்றியத்தையோ அணுகி ஆலோசனை கேட்பதில்லை. குறைந்த சம்பளத்தில் தாங்கள் சொல்வதைக் கேட்கக் கூடிய ஒருவரை ஆலய குருவாக நியமிப்பதையே விரும்புகின்றார்கள்.

**நினைத்தபடியெல்லாம் செயற்படாதீர்கள்!**

ஒரு மொழியைப் பாதுகாக்க வேண்டுமெனில் அதன் மரபை - அதன் இலக்கணத்தைப் பின்பற்றல் வேண்டும். ஒரு இனம் தனது மரபை, மரபோடு இணைந்த ஒழுக்கத்தைக் கைவிட்டால் பிறகு இனம் பற்றிக் கதைப்பது என்ன பயனைத் தரும்?

இந்து சமயத்துக்கென்று வேதங்கள், ஆகமங்கள் இருக்கின்றன. நீண்ட மரபும் பாரம்பரியமும் இருக்கின்றன. ஆலயங்களை நிர்வகிக்கின்றவர்களும் ஆலயத்தோடு தொடர்புடையவர்களும் இந்து சமயத்துக்குரிய ஆலய பூசைக்குரிய மரபை மறந்து தங்கள் விருப்பப்படி அல்லது வசதிப்படி கிரியைகளைச் செய்து விட்டு சைவசமயத்துக்குக் கேடு வந்து விட்டது என்று அழுவதில் அர்த்தமில்லை.

**வேதங்கள், ஆகமங்களை கவனத்தில்கொள்ளுங்கள்**

தாங்கள் பணம் கொடுக்கின்றோம் தங்கள் விருப்பப்படி ஐயா செய்ய வேண்டிதுதானே என்று பலர் நினைக்கின்ற னர். வேத ஆகமங்களில் கூறப்பட்டுள்ள மூர்த்தி அலங்கார விதியை குருமார் கூறினாலும் கேட்க மாட்டார்கள். எந்தெந்தத் திருவிழாவுக்கு எவ்வாறு சுவாமியை அலங்கரிப்பது என்று மூர்த்தி அலங்கார விதி கூறுகின்றது. விதிக்கு மாறாக சுவாமியை அலங்கரிப்பது விபரீதமான பலன்களை ஏற்படுத்தும்.

**குருக்கள்மாரின் நிலையை உணர்ந்துகொள்ளுங்கள்**

குருமார்கள் தங்களது குடும்பத்தவர்களின், தம்மைச் சார்ந்து வாழ்வோரின் வாழ்க்கையைக் கொண்டு நடத்துவதற்கு வருவாய் தேவை என்று நினைப்பதில்லை. சிவாச்சாரியார் ஒருவர் ஆலய, சைவ சமயக் கிரியைகளை மட்டுமே செய்து தனது வாழ்க்கையைக் கொண்டு நடத்த முடியாத நிலைமை இன்று காணப்படுகின்றது.

**சைவத் தமிழ் மக்களே அக்கறை கொள்ளுங்கள்**

சைவத் தமிழ் மக்கள் ஆலய குருமார், அவர்களது வாழ்நிலை பற்றி அக்கறை இன்றி இருப்பதும் சைவ சமயத்துக்கு ஆரோக்கியமானதல்ல. இந்து குருமாரைப் பற்றி அவதூறான வார்த்தைகளைச் சைவத் தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுப்போர் தெரிவிப்பது மிகுந்த வேதனையைத் தருகின்றது.

**நற்சான்றுப் பத்திரம் அவசியம்**

அந்தண குலத்தில் பிறந்த ஒருவர் சிவாச்சாரிய பணியை மட்டுமே செய்வதென்றால் அவர் தனக்குரிய வருவாயைப் பற்றி சிந்திப்பதை விமர்சனம் செய்கின்றீர்கள்? இது சைவத் தமிழ் மக்கள் தாங்களே தங்களையும் தங்கள் சமயத்தையும் அவமதிப்பதாக உள்ளது.

புலம்பெயர் தேசங்களில் உள்ளவர்கள் ஆலயத்துக்கு சிவாசாரியார் ஒருவரை நியமிப்பதென்றால் அவரிடம் இந்து குருமார் ஒன்றியத்தின் நற்சான்றுப் பத்திரத்தை கேட்பார்கள்.

இன்று ஊர் முழுவதும் கோயிலைக் கட்டிவிட்டு அந்தணரல்லாதவர்களை, தெருவில் நிற்போரை ஆலயப் பூசகராக நியமித்து விட்டு இந்து சமய குருமார் 'நேற்' பேசுகிறார்கள் என்று கூறுவது சைவத் தமிழர்களுக்கு நன்றன்று - என்றுள்ளது. (த)

## பச்சிலைப்பள்ளியில் இன்று இரு கிராமங்கள் கையளிப்பு
### அமைச்சர் சஜித் கலந்துகொள்வார்

கிளிநொச்சி, ஜூன் 7

கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் வண்ணாங்கேணி வடக்கில் அமைக்கப்பட்ட 'ஆராதி நகர்,சஞ்சீவிநகர்' கிராமங்கள் இன்று மக்களிடம் கையளிக்கப்படவுள்ளன.

வீடமைப்பு அமைச்சர் சஜித் பிரேமதாச முதன்மை விருந்தினராக இதில் கலந்து கொள்ளவுள்ளார்.

இந்த நிகழ்வு இன்று காலை 8 மணிக்கு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஈ.சரவணபவன், சி.சிறீதரன், எம்.ஏ.சுமந்திரன், த.சித்தார்த்தன், மாவை சோ.சேனாதிராசா ஆகியோருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. வடக்கு மாகாண ஆளுநர் சு.ராகவன் மற்றும் மாவட்டத்தின் ஐக்கிய தேசியக் கட்சியின் அமைப்பாளரும் கரைச்சிப் பிரதேச சபை உறுப்பினருமான கலாநிதி எஸ்.விஜயராஜன் ஆகியோரும் இதில் கலந்துகொள்வர் என்று அழைப்பிதழில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2015ஆம் ஆண்டுக்குள் 'யாவருக்கும் வீடு' பெற்றுக்கொடுக்கும் நோக்கில் 200 மற்றும் 201ஆவது கிராமங்களாக 'ஆராதி நகர்,சஞ்சீவிநகர்' கிராமங்கள் தெரிவுசெய்யப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (த)

## கல்லூரி முன்பாக விபத்து மாணவர்கள் நால்வர் காயம்



யாழ்ப்பாணம்,ஜூன் 7

வீதி விபத்தில் காயமடைந்த 4 மாணவர்கள் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

இந்த விபத்து யாழ்ப்பாணம் ஒஸ்மானியா கல்லூரி முன்பாக நேற்றுக் காலை 8 மணியளவில் இடம் பெற்றது.

கொட்டடிப் பகுதியிலிருந்து வந்துகொண்டிருந்த முச்சக்கரவண்டி, வேகக் கட்டுப்பாட்டை இழந்து எதிர்த்திசையில் நடந்து வந்து கொண்டிருந்த மாணவர்களை மோதித் தள்ளியதாக யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தை ஏற்படுத்திய முச்சக்கரவண்டி சம்பவ இடத்தில் இருந்து தப்பிச் சென்றுள்ளதாகப் பொதுமக்கள் தெரிவித்தனர்.

முச்சக்கர வண்டிச் சாரதியைக் கைது செய்யுமாறு கோரி சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸாருடன் பொதுமக்கள் முரண்பட்டதுடன் பொலிஸார் சந்தேக நபரை கைது செய்வதில் இழுத்தடிப்பதாகவும் குற்றஞ்சாட்டினர்.

இதனால் ஒரு மணித்தியாலம் அப்பகுதியில் போக்குவரத்து தடைப்பட்டது.

விபத்தை ஏற்படுத்திய முச்சக்கரவண்டிச் சாரதியை மறைகாணியின் (சிசிடிவி) உதவியுடன் கைது செய்வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-106)



வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் கிளிநொச்சியில் போராடும் உறவுகளை இலங்கைக்கான கனடா தூதுவர் டேவிட் மக்னொன் நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடினார். (214)

## மன்னார் கடலில்
# 140 கிலோ கஞ்சாவுடன் றோலர் படகு மீட்பு

மன்னார், ஜூன் 7

மன்னார் கடற்பரப்பில் 140.76 கிலோ கிராம் கேரளக் கஞ்சாவுடன் றோலர் படகு நேற்று முன்தினம் இரவு கைப்பற்றப்பட்டுள்ளதாக கடற்படை ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

மன்னார் பேசாலை கடற்பகுதியில் முன்னெடுக்கப்பட்ட சுற்றுக் காவல் நடவடிக்கையில் சந்தேகமான படகொன்று அவதானிக்கப்பட்டது. அந்தப் படகை கடற்படையினர் சோதனை செய்தனர். கேரளக் கஞ்சா பொதி செய்யப்பட்ட நிலையில் இருந்தது அவதானிக்கப்பட்டது. கடற்படையினர் அதனை மீட்டனர்.

கடற்படையினரின் சுற்றுக் காவல் நடவடிக்கையை அவதானித்த கடத்தல்காரர்கள், கஞ்சாவையும் படகையும் விட்டு தப்பித்திருக்கலாம் என்று தெரிவித்த கடற்படையினர், படகையும், கஞ்சாவையும் மீட்டுள்ளதாகக் குறிப்பிட்டனர். சட்டநடவடிக்கைகளுக்காக அவை தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (ஓ.5,7)



## சிவகுமாரன் நினைவாக பொருள்கள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 7
தியாகி பொன். சிவகுமாரனின் 45ஆவது ஆண்டு நினைவாக யேர்மன் தமிழ் இளையோர்களின்ஒழுங்கமைப்பில்அங்குள்ளசிறார்களால் பொதி செய்யப்பட்ட உபகரணங்கள், விளையாட்டுப்பொருள், இனிப்புக்கள் வவுனியா முன்பள்ளி மாணவர்களுக்கு வழங்கப்பட்டன. இவை தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் கல்விமேம்பாட்டுத்துறையூடாகவழங்கப்பட்டன.

வவுனியாவில் நேற்றுமுன்தினம் நடந்த இந்த நிகழ்வில் முன்னணியின் பொதுச் செயலர் செ.கஜேந்திரன், வவுனியா வடக்குப் பிரதேச சபை உறுப்பினர் தி.விஜிகரன், புளியங்குளம் புரட்சி விளையாட்டுக்கழகத்தலைவர் அமிர்தராஜ், முன்னணியின்பழையவாடிசெயற்பாட்டாளர் அகிலேஸ், முத்துமாரிநகர் செயற்பாட்டாளர் திருமதி.சித்திராதேவி ஆகியோர்கலந்துகொண்டனர். புதூர், பரிசன்குளம், முத்துமாரிநகர், புளியங்குளம்தெற்கு, இராமனூர்ஆகியமுன்பள்ளிகளின் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள், சிறார்களின் பெற்றோர்கள் என நூற்றுக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். (து-222)

### யாழ்ப்பாணப் பொதுநூலகத்தில்

# இலத்திரனியல் மயமாகும் இலங்கை சார்ந்த நூல்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 7

யாழ்ப்பாணம் பொதுநூலகத்தில் இலங்கையைப் பிரதிபலிக்கும் பழைய நூல்கள் இலத்திரனியல் மயப்படுத்தப்பட்டுள்ளன என்று நூலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.



இதுபற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:
யாழ்ப்பாணம் பொதுநூலகத்தில்பல்வேறுவகையானநூல்கள்காணப்படுகின்றன. இவற்றில் நாட்டைப் பிரதி பலிக்கும் நூல்கள் மிக முக்கிய இடம் வகிக்கின்றன. வரலாறு, சமயம், அரசியல் போன்ற பல்வேறுநூல்கள்எமதுநாட்டைப் பிரதிபலிக்கின்றன. இவ்வாறான பழைமை வாய்ந்த நூல்கள் கிடைப்பது அரிது. ஆகவே எமது நாட்டைப் பிரதிபலிக்கும் சுமார் ஆயிரம் நூல்கள் தற்போது இலத்திரனியல் மயப்படுத்தப்பட்டுள்ளன. அவை இறுவெட்டில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதுடன்,கணினி மயப்படுத்தப்பட்டுள்ளன. இது தவிரநூலகத்தில்காணப்படும் அனைத்துநூல்களையும்மற்றும்பத்திரிகைகளையும்இலத்திரனியல் மயப்படுத்தும் நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட்டுவருகின்றது - என்றுதெரிவிக்கப்பட்டது. (ம-7)



போரால் பாதிக்கப்பட்டு விழுப்புண் அடைந்து தொழில் இன்றிவறுமைநிலையில்உள்ளஒருவருக்குவாழ்வாதார உதவியாகக்கோழிக்கூடுஅமைத்துவழங்கப்பட்டுள்ளது. ஜேர்மனி ஸ்ருட்காட்டில் இயங்கும் உறவுகளுக்கு கரம் கொடுப்போம் அமைப்பினூடாக இந்த உதவி அண்மையில் வழங்கப்பட்டுள்ளது. சிறுப்பிட்டி நீர்வேலியைச் சேர்ந்த முன்னாள் போராளியான செல்வன் மகேந்திரம் என்பவருக்கே ஒரு லட்சத்து 20 ஆயிரம் ரூபா பெறுமதியில்கோழிக்கூடும்கோழிகளும்வழங்கப்பட்டன. (ஐ-159)

## கலைச் சங்கமமும் விருது வழங்கலும்

யாழ்ப்பாணம், ஜூன் 7
கதிர் தொலைக்காட்சியின் ஏற்பாட்டில் கலைச் சங்கமமும் விருது வழங்கும் நிகழ்வும் நாளை சனிக்கிழமை நெல்லியடிக் கலையகத்தில் முற்பகல் 9 மணிக்கு நடைபெறவுள்ளன.

ஓய்வுபெற்ற மாவட்டநீதிபதிபா.சுப்பிரமணியம் தலைமையில் பாடல் போட்டி மற்றும் கலை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. இதேவேளை துன்னாலை அல்லையம்பதி வடிவேலு சந்திரசேகரத்துக்கு சமூக சேவையாளருக்கான விருதும் இதன்போது வழங்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)





## வல்லையில் துப்புரவு பணி முன்னெடுப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 7
உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு வல்லை வெளியில் கொட்டப்பட்டிருந்த பிளாஸ்டிக் கழிவுகள் அகற்றும் பணிகள் நேற்றுமுன்தினம் இடம் பெற்றன.

70 இற்கு மேற்பட்ட இளையோர், சிறுவர்களின் தன்னார்வப் பங்களிப்பில் வலி.கிழக்குப் பிரதேச சபையின் ஜே.சி.பி, உழவு இயந்திரம் மூலம்துப்புரவு செய்யப்பட்டன. (ஐ)





பருத்தித்துறைதம்பசிட்டிசதாவதானிசிக்கனகடனுதவிக்கூட்டுறவுச்சங்கத்தின் 32ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது. (ம-173)

## வீதிகளின் சீரமைப்பு பணிகள் ஆரம்பம்


கொடிகாமம், ஜூன் 7
சாவகச்சேரிபிரதேசசெயலர்பிரிவில் உள்ள அல்லாரை தாளையடி அம்மன் வீதி மற்றும் வெள்ளாம்போக்கட்டிசெபமாலைமாதாவீதி ஆகியவற்றின்சீரமைப்புவேலைகள்ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நேற்றுமுன்தினம்புதன்கிழமைமுற்பகல் 9.30மணியளவில் இலங்கை தமிழரசு கட்சியின் வட்டார கிளை செயலாளர் பண்டாரி கதிரவேலு தலைமையில் ஆரம்பித்துவைக்கப்பட்டன.

நிகழ்வில் வடக்கு மாகாண முன்னாள் உறுப்பினரும் இலங்கைதமிழரசு கட்சியின் தொகுதிகிளையின் தலைவருமான கேசவன் சயந்தன், சாவகச்சேரிஇலங்கைதமிழரசுகட்சி தொகுதி கிளை செயலாளர் சங்கரன் தங்கராசா, பிரதேசசபைஉறுப்பினர்களான பொன்னம்பலம் மகேந்திரராணி, சி.இரத்தினசிங்கம் பொது அமைப்புகளின் பிரதிநிகள், கிராம மக்கள் எனப்பலரும்கலந்துகொண்டனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரனின் துரித கிராமிய அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 15 லட்சம் ரூபா செலவில் இந்த வீதிகள் சீரமைக்கப்படவுள்ளன. (ஐ-159)

## கலந்துரையாடலும் மரநடுகையும்



சிறுவர்களுக்கான கலந்துரையாடலும் மரநடுகை நிகழ்வும் காரைநகர் வெடியரசன் பகுதியில்-நேற்றுமுன்தினம் இடம்பெற்றன. மரநடுகையின் முக்கியத்துவத்தையும் சூழல்பாதுகாப்பின்முக்கியத்துவத்தையும்தெளிவுபடுத்தும் வகையில் இந்த நிகழ்வை மனிதம் அமைப்பினர் ஏற்பாடு செய்துள்ளனர். (ஐ-ரி1)

## குருகுலம் ச.ச.நிலையத்துக்கு அடிக்கல் நடப்பட்டது நேற்று!

யாழ்ப்பாணம், ஜூன் 7
நாகர்கோவில் மேற்கு குருகுலம் சனசமூக நிலையத்துக்கானநிரந்தரக் கட்டடத்துக்கான அடிக்கல்நாட்டும்வைபவம் குருகுலம் சனசமூக நிலைய வளாகத்தில் நேற்றுக் காலை 10 மணியளவில் இடம் பெற்றது.



நிலையத் தலைவர் யோ.சுமன் தலைமையில்நடைபெற்றநிகழ்வில் முதன்மை விருந்தினராக வருகை தந்த பருத்தித்துறைப் பிரதேசசபை த்தவிசாளர் அரியகுமார் முதன்மைக் கல்லை நட்டுவைக்க ஜனநாயக போராளிகள் கட்சித் தலைவர் சி.வேந்தன் மற்றும்பிரதேசசெயலகம்சார்பாக கிராம அலுவலர், பொருளாதார அலுவலர், சமுர்த்தி அலுவலர்மற்றும் பிரதேசசபைவட்டாரஉறுப்பினர்ஆ.சுரேஸ்குமார்,நாகேஸ்வரா விளையாட்டுக் கழகத் தலைவர் எனப்பலரும்கலந்துகொண்டனர். (ம-26)

# ரூ.2,000 மில். நிதி ஒதுக்கீட்டில் யாழ்.குடாநாட்டில் நீர்த்தேக்கம்

யாழ்ப்பாணம், ஜூன் 7

யாழ்ப்பாணக் குடா நாட்டின் தண்ணீர் விநியோகத்துக்கான நீர்த்தேக்கம் அமைக்கும் பணிகள் இந்த மாதம் நடுப்பகுதியில் ஆரம்பிக்கப்படவுள்ளன. முதலாம் கட்டப் பணிகளுக்கு அரசு இரண்டாயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கியுள்ளது. சாவகச்சேரி - பருத்தித்துறை வீதியின் 9 ஆவது கிலோமீற்றரை அண்மித்த 'கப்பூது'வில் நீர்த்தேக்கம் அமைக்கப்படவுள்ளது.

ஆறு சதுரக் கிலோமீற்றர் பரப்புக் கொண்ட நீர்த்தேக்கத்தின் அணைக்கட்டு 25 அடி அளவு உயரம் கொண்டதாக இருக்கும் என்று நீர்ப்பாசனத் திணைக்களப் பொறியியலாளர் த.சர்வராசா தெரிவித்தார்.

யாழ்ப்பாணக் குடா நாட்டின் குடிதண்ணீர் விநியோகத்துக்கு நீர்த்தேக்க அமைப்புத் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பிரதேச செயலகம் தோறும் நடைபெற்று வரும் விவசாயக் குழுக் கூட்டங்களில் நகர் விநியோகத்துக்கான 'நீர்த்தேக்க அமைப்பு வேலை தொடர்பான திட்ட முன்மொழிவு முன்வைப்புக்கள் நீர்ப்பாசனத் திணைக்களப் பொறியியலாளரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நீர்த்தேக்க அமைப்புத் தொடர்பாக பொறியியலாளர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணக் குடாநாட்டு குடிதண்ணீர் விநியோகத்துக்கான நீர்த்தேக்கம் அமைக்கும் பணியும் தொண்டைமானாறு குடாக்கடல் நீரேரியை ஆழமாக்கும் பணியும் சமகாலத்தில் மேற்கொள்ளப்படவுள்ளது. குடாக்கடல் நீரேரியை ஆழமாக்கும் போது பெறப்படும் மண் நீர்த்தேக்கத்துக்கான அணைக்கட்டுக்குப் பயன்படுத்தப்படவுள்ளது.

ஆறு சதுரக் கிலோமீற்றர் பரப்பளவு கொண்ட நீர்த்தேக்கத்தின் அணைக்கட்டு 25 அடியளவு உயரம் கொண்டதாக அமைக்கப்படவுள்ளது.

நீர்த் தேக்கத்தில் 25 ஆயிரம் மில்லியன் கன மீற்றர் அளவு தண்ணீர் தேக்கக் கூடியதாக இருக்கும். யாழ்ப்பாணக் குடாநாட்டின் குடிதண்ணீர்விநியோகத்துக்கு வருடத்துக்கு 12.5 ஆயிரம் மில்லியன் கன மீற்றர் அளவு போதுமானது.

மாரி மழை காலத்தில் பெறப்படும் மழைநீர் நீர்த்தேக்கத்தில் தேக்கி வைக்கப்பட்டு சுத்திகரிக்கப்பட்டு குடிதண்ணீர் விநியோகிப்பதற்கு வழங்கப்படும்.

மாரி மழை காலத்தில் மேலதிக தண்ணீர் கடலுக்குச் செல்லாமல் இருப்பதற்கு வசதியாக தொண்டைமானாறு குடாக்கடல் நீரேரி ஆழமாக்கப்பட்டுள்ளது.

குடிதண்ணீர்விநியோகத்துக்கான பணிகள் தொடர்பாக பொதுமக்கள் விவசாயிகள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். திட்ட வேலைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கப்படவேண்டும் என்று மேலும் தெரிவித்தார். (து-11)



கிளிநொச்சி பாடசாலை



போர்க்கட்டி அ.த.க பாடசாலை

## சுற்றுச்சூழல் பாதுகாப்பு வாரத்தில் பாடசாலைகளில் பல்வேறு நிகழ்வுகள்

கொடிகாமம்,ஜூன் 7

பன்னாட்டு சுற்றுச்சூழல் பாதுகாப்பு வாரத்தை முன்னிட்டு பாடசாலைகளில் பல்வேறு நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன.


கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் கடந்த செவ்வாய்க்கிழமை சுற்றாடல் முன்னோடிக் குழுவின் பொறுப்பாசிரியர் வி. நரேஸ்குமார் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக கரைச்சி பிரதேச சபை செயலர் க.சண்முகதாசன், சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி வலய சுற்றாடல் முன்னோடி ஆணையாளர் ரீ. நிகேதன், கிளிநொச்சி மாவட்ட மூத்த சுற்றாடல் அலுவலர் பி.திவாகரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சூழலை பாதுகாக்கும் நோக்குடன் 40 இற்கும் மேற்பட்ட மரக்கன்றுகள் நடப்பட்டன.

இதேவேளை அன்றையதினம் மிருசுவில் போக்கட்டி அ. த க.பாடசாலையிலும் காலை 8 மணி தொடக்கம் 11 மணி வரை துப்புரவுப் பணிகள் இடம்பெற்றன.

சமுர்த்தி அபிவிருத்தி அலுவலகர் திருமதி மயூரன் இந்திரவதனி, கிராம அலுவலர் செல்வி எஸ். சர்மிளா, பொருளாதார அபிவிருத்தி அலுவலகர் திருமதி க.சிவமதி ஆகியோரின் ஒழுங்குபடுத்தலில் பாடசாலை அதிபரின் வேண்டுகோளிற்கு இணங்க துப்புரவுப் பணிகள் இடம் பெற்றன. இந்த துப்புரவுப் பணியில் ஜே/328 தவசிகுளம் கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட சமுர்த்தி பயனாளிகள், பொது அமைப்பின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஜ-159)



## பயனாளிகளுக்கு உரித்துப் படிவம்

யாழ்ப்பாணம்,ஜூன் 7

தெல்லிப்பழை பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட சமுர்த்திப் பயனாளிகளுக்கு உரித்துப் படிவம் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வு தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

தெல்லிப்பழை பிரதேசத்தில் புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட 4 ஆயிரத்து 195 குடும்பங்களுக்கே உரித்துப் படிவங்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் கலந்து கொண்டு சமுர்த்தி உத்தரவாதப் பத்திரங்களை பயனாளிகளிடம் கையளித்தார். (ஜ-9)

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம்.ஜூன் 7

மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையின் பழைய மாணவர் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 பாடசாலையில் நடைபெறும். பழைய மாணவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொண்டு நிர்வாக சபையின் செயற்பாடுகளுடன் இணைந்து பாடசாலையின் வளர்ச்சிக்காக செயலாற்றுமாறு அதிபர் ஆ.பேரின்பநாயகம் கேட்டுக்கொண்டுள்ளார். (ஜ)

## சைவ சித்தாந்தத் துறை பெரும் வரப்பிரசாதமே

### இந்துகுருமார் அமைப்பு தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன் 7

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஏற்கனவே இந்து நாகரிகத்துறை இருக்கின்ற நிலையில் சைவ சித்தாந்தத் துறையும், புதிதாக இணைக்கப்படுவது பெரும் வரப்பிரசாதமே. இவ்வாறு இந்துகுருமார் அமைப்பின் தலைவரும், செயலரும் இணைந்து தெரிவித்தனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இந்துக் கற்கைகள் பீடம் நேற்று ஆரம்பிக்கப்பட்டது. இதனை முன்னிட்டு அவர்கள் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

அந்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது;

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் இந்துபீடம் என்ற புதிய பீடம் ஆரம்பிப்பதையிட்டு, பெரும் மகிழ்ச்சியடைகின்றோம். யாழ்ப்பாண சமூதாயத்தில் சைவத்தை யாழ்ப்பாண தமிழர்கள் பெருமூச்சாக கொண்டனர். இதனது அடியூற்றே உலகளாவிய ரீதியிலே என்றும் எமது பண்பாடாக பரந்து நிற்கின்றது. இத்தகைய ஒரு உன்னத முயற்சிக்கு நாம் எங்களால் ஆன ஒத்துழைப்பை என்றும் வழங்குவோம் என்பதோடு, சவால்கள் மிகுந்த எமது சமுதாயத்தின் பல்வேறு விதமான முகங்களுக்கும், அறிவுசார் துறையில் என்றும் வளம் பெற வேண்டும் என்பது எமது எதிர்பார்ப்பாகும்.

இந்தப் பீடம் என்றும் வளமும், வளர்ச்சியும் பெற வேண்டும் என ஆசிர்வதித்துப் பெரும் மகிழ்வடைகின்றோம். என்றுள்ளது. (ஜ-106)

## கலாசாரப் பேரவை பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 7

வடமராட்சி தெற்கு , மேற்கு பிரதேச கலாசாரப் பேரவையின் பொதுக்கூட்டம் செயலக மாநாட்டு மண்டபத்தில் நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பிரதேச செயலர் ஈ. தயாரூபன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் கலைஞர்கள், கலைமன்றங்களின் பிரதிநிதிகள் மற்றும் கலை ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (ஜ)

## நீண்ட காலக் கோரிக்கை தற்போது நிறைவேறியுள்ளது

### செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன் 7

பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்ட நாள் தொடக்கம் சைவ சித்தாந்த பீடம் தனித்துவமாக அமைக்கப்பட வேண்டும் எனப் பலரும் குரல் கொடுத்தனர். நீண்ட காலக் கோரிக்கை தற்போது நிறைவேறியுள்ளமை மனதுக்கு மகிழ்ச்சியைத் தருகிறது.

இவ்வாறு செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இந்துக் கற்கைகள் பீடம் நேற்று ஆரம்பித்துவைக்கப்பட்டது.

இதனை முன்னிட்டு அவர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது;

சைவப் பெரியார் சேர்.பொன். இராமநாதனின் பாரிய சொத்தில் உருவான யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் இந்து கற்கை பீடம் ஆரம்பித்து வைக்கப்படுவது அப் பெருமகனின் இலட்சியத்துக்குக் கிடைத்த வெற்றி எனலாம்.

பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்ட நாள் முதல் சைவ சித்தாந்த பீடம் தனித்துவமாக அமைக்கப்பட வேண்டும் எனப் பலரும் குரல் கொடுத்தனர். நீண்ட காலக் கோரிக்கை தற்போது நிறைவேறியுள்ளது. இப் பீடம் எதிர்காலத்தில் சீரிய முறையில் பல சாதனைகளை நிலைநாட்ட வேண்டும் என்று இந்து மக்கள் சார்பில் வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்- என்றுள்ளது. (ஐ)

## கமக்கார அமைப்பின் பொதுக்கூட்டம் இன்று நடைபெறாது

சாவகச்சேரி, ஜூன் 7

கைதடி நாவற்குழி கமக்கார அமைப்பின் பொதுக்கூட்டம் தவிர்க்க முடியாத காரணங்களால் இன்று நடைபெறாது என்று அமைப்பின் செயலர் ந.திருநீலகண்டன் அறிவித்துள்ளார். எதிர்வரும் 11 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு பொதுக் கூட்டம் நடைபெறும். எனவே அங்கத்தவர்களை அன்றைய தினம் கலந்துகொள்ளுமாறு அறிவித்துள்ளார். (ஜ-9)

## அலங்கார உற்சவத்தில் ஆன்மீகச் சொற்பொழி

திருநெல்வேலி கரியபுலம் அருள்மிகு சிறி ஞான வைரவப் பெருமான் ஆலய அலங்கார உற்சவம் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 30 நாள்கள் நடைபெறும் உற்சவத்தின் போது தெய்வீகப் பேருரையாளர் மதுரகவி காரை எம்.பி.அருளானந்தம் ஆசிரியரின் ஒழுங்கு படுத்தலில் பாடசாலை மாணவர்களின் சொற்பொழி இடம்பெறவுள்ளது. (ஜ)

ஊக்குவிப்பு



வவுனியா மின்சார சபையில் தற்காலிக அடிப்படையில் வேலை செய்யும்போது மின்கம்பத்திலிருந்து தவறி வீழ்ந்து இடுப்புக்குக் கீழ் செயற்படமுடியாமலுள்ள வவுனியா இராமபுரத்தைச் சேர்ந்த சிறப்புத் தேவையுள்ளவருக்குக் கோழிவளர்ப்பு உதவி அண்மையில் வழங்கப்பட்டது. சுவிஸில் வசிக்கும் தாயகத்தைச் சேர்ந்த உதயதாஸ் மற்றும் சில உறவுகளின் நிதிப்பங்களிப்பில் சுயதொழில் மேற்கொள்வதற்குக் கோழிவளர்க்கும் கூடு, கோழிகள் என்று ரூ.75ஆயிரம் பொறுமதியான உதவிகள் தமிழ் விருட்சம் அமைப்பு ஊடாக வழங்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (கு)

# கட்டுக்கரைப் பிரதேசத்தில் 1000 ஏக்கர் காடுகள் அழிப்பு

## உடன் நடவடிக்கை எடுக்குமாறு மாவட்டச் செயலருக்குத் தவிசாளர் கடிதம்

மன்னார், ஜூன் 7

கட்டுக்கரைக்குளத்தை அண்மித்த மேய்ச்சல் தரவைக்கு ஒதுக்கப்பட்ட பகுதியில் சுமார் 800 தொடக்கம் 1000 ஏக்கர் நிலப்பரப்பில் வளர்ந்த காடுகள் அழிக்கப்பட்டுக் கையகப்படுத்தல் நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. கையகப்படுத்தல்களைத் தவிர்க்க உரிய நடவடிக்கைகளை உடனடியாக எடுங்கள்.



இவ்வாறு நானாட்டான் பிரதேச சபைத் தவிசாளர் மன்னார் மாவட்டச் செயலருக்குக் கடிதம் அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கடந்த வருடம் தலைமை அமைச்சர் மன்னாருக்குப் பயணம் மேற்கொண்டிருந்தார். அதன்போது மன்னார் கால்நடைகளுக்கு மேய்ச்சல் தரவைக்கான இடங்களைக் கட்டுக்கரைக் குளப்பகுதியில் ஒதுக்கித்தர வேண்டும் என்று தவிசாளர் பரஞ்சோதி கேட்டுக்கொண்டார். அதற்கான நடவடிக்கைகளைத் தலைமை அமைச்சர் மன்னார் மாவட்டச்செயலரிடம் ஒப்படைத்திருந்தார். மன்னார் மாவட்டச் செயலரின் பணிப்புக்கமைய நானாட்டான் பிரதேச செயலர் மா.சிறிஸ்கந்தகுமார் தலைமையில் கடந்த முதலாம் திகதி நானாட்டான் பிரதேச சபையின் தவிசாளர், உபதவிசாளர் புவனம், முருங்கன் நீர்ப்பாசனப் பொறியியலாளர்கள் மற்றும் மன்னார் குடிமக்கள் குழுத் தலைவர் கட்டுக்கரைப் பகுதியில் கால்நடைகளுக்கு மேய்ச்சல் தரைகள் ஒதுக்கப்பட்ட இடங்களைப் பார்வையிடச் சென்றிருந்தனர்.

பலதசாப்தங்களுக்குமுன்னரே போர் காரணமாக மேய்ச்சல் தரைகள் உள்ள பகுதிக்கு மக்கள் செல்லமுடியாத நிலை காணப்பட்டது. ஆனால் மரங்கள் வளர்ந்து காடுகளாகிவிட்டன. மேய்ச்சல் தரை தற்போது காடாகக் காட்சியளிக்கின்றது. அதனால் கால்நடைகள் புல் மேய்வதற்கு ஏற்ற நிலை அங்கு மிகக்குறைவு. அதனாலேயே மேய்ச்சல் தரைக்குப் பற்றாக்குறை காணப்படுகிறது. கால்நடைகள் உணவின்றிச் சிரமப்படுகின்றன. இதுஒருபுறமிருக்க அந்தப் பகுதிகளில் சுமார் 800 தொடக்கம் 1000 ஏக்கர் நிலப்பரப்பில் காடுகள் அழிக்கப்பட்டு அடாத்தாக விவசாய செய்கைக்கும் குடியேறுவதற்கு ஏற்றதாக நிலங்கள் தயார் செய்யப்பட்டிருந்தமையும் கண்டறியப்பட்டுள்ளது.

கால்நடைகளுக்கான மேய்ச்சல் நிலங்களாக அடையாளப்படுத்தப்பட்ட நிலங்களே அடாத்தாக அழிக்கப்பட்டுள்ளன. அதனால் கால்நடைகளுக்கான மேய்ச்சல் நிலங்களை அடையாளப்படுத்த முடியாதுள்ளது. நிலங்களைக் கையகப்படுத்தும் நடவடிக்கையை அதிகாரிகள் தலையிட்டுத் தடுத்து நிறுத்த வேண்டும்.

கட்டுக்கரைக் குளத்துக்குத் தண்ணீர் வரத்துப் பகுதியாகவும் இருப்பதால் சட்டவிரோதமாகத் தண்ணீரைப் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கையில் சிலர் ஈடுபட்டுள்ளனர்.

இந்தச் செயற்பாடு அரச உயர் அதிகாரிகளின் ஒத்துழைப்புடனேயே நடைபெற்றிருப்பதாக அறிகிறோம். இதற்கு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கடிதத்தில் கோரியுள்ளார். (த-213)



## தொழில் முயற்சியாளர்களான 10 பெண்களுக்குத் தலா 50,000

முல்லைத்தீவு, ஜூன் 7

புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட பெண்கள்தொழில்முயற்சியாளர் கூட்டுறவுச் சங்கத்தில் வசதி குறைந்த பெண்கள் 10 பேருக்குத் தலா 50 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது. தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கிராமிய வங்கியால் இலகு கடன் அண்மையில் வழங்கப்பட்டது.

சங்கத்தில் நடந்த இந்த நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர்கள், புதுக்குடியிருப்பு மேற்குகிராம அலுவலர் மற்றும் புதுக்குடியிருப்புப் பிரதேச செயலக மகளிர் அபிவிருத்தி அலுவலர்கள் கலந்து சிறப்பித்தனர்.

நிகழ்வுக்குப் பெண்கள் தொழில்முயற்சியாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் சு.கலைச்செல்வி தலைமை தாங்கினார். (த-ரி1)

மரநடுகை



அரச தலைவரின் தேசிய மரநடுகை வேலைத்திட்டம் கிளிநொச்சியின் கண்டாவளை பிரதேச செயலர் பிரிவிலுள்ள விளாவோடையில் நேற்று நடைபெற்றது. மாவட்டச் செயலர், பொலிஸ் அதிகாரி, கிளிநொச்சி இராணுவத் தலைமையக கட்டளை அதிகாரி பிரதேச செயலர்கள், திணைக்களங்கள்சார் அதிகாரிகள் கலந்து கொண்டனர். (35)

## இளந்தளிர் மைதான சீரமைப்பு ஆரம்பம்

முல்லைத்தீவு ஜூன் 7

முல்லைத்தீவு, பூதன்வயல், முள்ளியவளைப் பகுதியில் அமைந்துள்ள, இளந்தளிர் விளையாட்டுக்கழக மைதான மறுசீரமைப்பு வேலைகள் இடம்பெற்றுவருகின்றன.

வடக்கு மாகாணசபை உறுப்பினர் து.ரவிகரனின் பரிந்துரையில் வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதனின் 5 லட்சம் ரூபாவில் வேலைகள் நடைபெறுகின்றன. வேலைகளை ரவிகரன், கரைதுறைப்பற்றுப்பிரதேசசபைஉறுப்பினர் சி.லோகேஸ்வரன் ஆகியோர் பார்வையிட்டனர். (த-222)



## விவசாயத் திணைக்களத்தால் முல்லைத்தீவில் 14 நிகழ்வுகள்

முல்லைத்தீவு, ஜூன் 7

முல்லைத்தீவின் மாந்தை கிழக்கில் விவசாயத் திணைக்களத்தால் 14 நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்டன. அரசதலைவரின் 'நாட்டுக்காக ஒன்றிணைவோம்' நிகழ்ச்சித் திட்டத்தில் தேசிய உணவு உற்பத்தித் திட்டத்தின் கீழ் இவை நடந்தன.

மாந்தை கிழக்கு விவசாயப் போதனாசிரியர் கி.கீர்த்திகன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுகளில் மாந்தை கிழக்குப் பிரதேச செயலர் ந.றஞ்சனா, பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் கு.குகநாதன் மற்றும் அரச தலைவர் செயலக அதிகாரிகள், பாடவிதான அலுவலர்கள், விவசாயப் போதனாசிரியர்கள், கிராம அலுவலர்கள், சமுர்த்தி அலுவலர்கள், அபிவிருத்தி அலுவலர்கள், விவசாயிகள் எனப் பலர் இந்த நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர். மாந்தை கிழக்குப் பிரதேசத்தில் உள்ள ஒட்டறுத்தகுளம் கிராமத்தில் காளான் அறுவடை இடம்பெற்றது. கொல்லவிளாங்குளத்தில் தேனி வளர்ப்பும் ஆரோக்கிய இளைஞர் விவசாயக் கழகத் திறப்பும் நடைபெற்றன. பாலிநகரில் சேதன முறையிலான வீட்டுத்தோட்டச் செய்கை, மாந்தை கிழக்கில் நிலக்கடலை செய்கை தொடர்பான பயிற்சி வகுப்பு என்பன உட்பட 14 நிகழ்வுகள் விவசாயக் கிராமங்களில் நடைபெற்றன. (த-ரி3)

## பாடசாலையில் துப்புரவுப் பணி

மல்லாவி, ஜூன் 7

நாட்டுக்காக ஒன்றிணைவோம் வேலைத்திட்டத்தின் கீழ் மல்லாவி அணிஞ்சியன்குளம் அ.த.க பாடசாலையில் துப்புரவுப் பணிகள் நேற்றுமுன்தினம் இடம்பெற்றன. துப்புரவுப் பணியில் பெற்றோர்கள், ஆசிரியர்கள், கிராம அலுவலர், பிரதேச அலுவலர்களும் கலந்துகொண்டனர். (ஜ-74)



# காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் காணிகளில் வசிப்போருக்கு உறுதி

யாழ்ப்பாணம், ஜூன் 7

வடக்கு மாகாணத்தில் காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் காணிகளில் வசிப்பவர்களுக்கு அடுத்தமாத இறுதியில் காணிப் பத்திரங்கள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பிராந்திய காணி சீர்திருத்த ஆணைக்குழு அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதுபற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

காணி சீர்திருத்த ஆணைக்குழுவால் மக்களுக்கு ஆரம்பத்தில் காணிகள் வழங்கப்பட்டன. ஒன்றரை பரப்பு முதல் சுமார் 4 பரப்பு வரை காணிகள் வழங்கப்பட்டன. அதற்கான முறையான காணிப் பத்திரங்கள் அப்போது இருந்த சூழ்நிலையில் வழங்கப்படவில்லை. மக்களின் தேவை கருதி அவை வழங்கப்பட்டன. காணி பத்திரம் இருந்தால் மட்டுமே அரசால் வழங்கப்படும் வீட்டுத்திட்ட மற்றும் ஏனைய உதவிகள் கிடைக்கும். ஆகவே இதனை அடிப்படையாக கொண்டு காணிகள் தற்போது அளவிடப்பட்டு அவற்றுக்கான பத்திரங்கள் வழங்கப்படவுள்ளன.

மன்னார் 125 பேர், கிளிநொச்சி 50 பேர், வவுனியா 22 பேர், முல்லைதீவு 6 பேர், யாழ்ப்பாணம் 4 பேர் உட்பட சுமார் 200க்கும் அதிகமானவர்களுக்கான காணி உறுதிப்பத்திரங்கள் அடுத்த மாத இறுதியில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ம-7)



## அரசதகவல் திணைக்களம் முல்லையில் திறக்கப்பட்டது

முல்லைத்தீவு, ஜூன் 7

முல்லைத்தீவு மாவட்டத்தில் அரச தகவல் திணைக்களத்தின் கிளை அலுவலகம் ஒன்று திறந்துவைக்கப்பட்டுள்ளது. அரச தகவல் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் நாலங்க கலுவெவ, முல்லைத்தீவு மாவட்டச் செயலர் ரூபவதி கேதீஸ்வரன் ஆகியோர் இணைந்து இதனைத் திறந்து வைத்தனர்.

முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தின் கட்டடத் தொகுதியில் இந்த அலுவலகம் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. அரச தகவல் திணைக்களஅலுவலர் ஒருவர் அதற்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

'நாட்டுக்காக ஒன்றிணைவோம்' எனும் நிகழ்ச்சித் திட்டத்தின் ஓர் அங்கமாக இந்த அலுவலகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இது அரச தகவல் திணைக்களத்தின் 23ஆவது மாவட்ட அலுவலகம். இதற்கு முன்னர் 22 இடங்களில் இந்த அலுவலகம் அமைக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன நாளை சனிக்கிழமை முல்லைத்தீவுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார். (த-222)

## அரச தகவல் திணைக்களம் திறந்தமையால் பெருவெற்றி

### மாவட்டச் செயலர் தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஜூன் 7

முல்லைத்தீவு மாவட்டத்தில் அரச தகவல் திணைக்கள அலுவலகம் திறந்து வைத்தமை பெரு வெற்றி என்று முல்லைத்தீவு மாவட்டச் செயலர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டச் செயலக கட்டடத் தொகுதியில் அரச தகவல் திணைக்கள அலுவலகம் நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

அதில் உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

முல்லைத்தீவு மாவட்டத்தைப் பொறுத்த மட்டில் மாவட்டத்தின் அபிவிருத்தி தொடர்பில் தகவல்களை ஊடகவியலாளர்களுக்கு வெளிப்படுத்துவது போன்ற விடயங்களில் அதிக சிரமங்களை எதிர்நோக்கி வந்துள்ளோம்.

அதேவேளையில் ஊடகவியலாளர்களும் பல சந்தர்ப்பங்களில் விடயங்களைப் பெற்றுக்கொள்வதில் சிரமங்களை எதிர்கொண்டிருந்தனர்.

அரசதலைவர் மைத்திரிபாலவின் தலைமையில் நாட்டுக்காக ஒன்றிணைவோம் செயற்றிட்டத்துக்கு உட்பட்டதாக முல்லைத்தீவு மாவட்டத்தில் அரச தகவல் பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது.

இது எங்களுக்குக் கிடைத்த பெரு வெற்றி.

முல்லைத்தீவு மாவட்டத்தின் அபிவிருத்தி தொடர்பாகவும் மாவட்டத்தின் பல்வேறு விடயங்களை நாங்கள் வெளிப்படுத்துவதற்கும் அவற்றை நாங்கள் சேகரிப்பதற்கும் இந்த அலுவலகம் உறுதுணையாக இருக்கும் என்று மாவட்டச் செயலர் தெரிவித்துள்ளார். (த-ரி3)

# கேப்பாபிலவில் போராடும் மக்களுக்கு மைத்திரிபால என்ன கூறப்போகிறார்?

### ரவிகரன் கேள்வியெழுப்புகிறார்

யாழ்ப்பாணம், ஜூன் 7

"வடக்கு கிழக்கு மாகாணத்திலுள்ள மக்களின் நிலம் மக்களுக்குச் சொந்தம். அவை 2017ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்துக்கு முன்னர் உரியவர்களிடம் கையளிக்கப்படும்" எனத் தெரிவித்த அரசதலைவர், நாளை முல்லைத்தீவுக்கு வரும்போது கேப்பாபிலவில் இரண்டு ஆண்டுகள் கடந்தும் தமது நிலத்தைக் கேட்டுப் போராட்டம் நடத்தும் மக்களுக்கு என்ன கூறப்போகிறார்? இனியாவது மக்களின் காணிகளை விடுவிக்க வேண்டும்.

இவ்வாறு வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் து.ரவிகரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் 2 ஆயிரத்து 457 ஏக்கர் தனியார் நிலமே படையினர் வசமிருப்பதாக மைத்திரிபால சிறிசேன தெரிவித்திருந்தார்.

எனினும் அந்தத் தகவல் தவறு என்று மாவட்டச் செயலர்களின் புள்ளி விவரங்கள் அரசதலைவரின் கூற்றைப் பொய் என்று நிரூபித்துள்ளன.

யாழ்ப்பாண மாவட்டத்தில் மட்டும் 2 ஆயிரத்து 642 ஏக்கர் நிலமும் மன்னார் மாவட்டத்தில் 211 ஏக்கர் நிலமும், கிளிநொச்சி மாவட்டத்தில் ஆயிரத்து 132 ஏக்கர் நிலமும் , முல்லைத்தீவில் 101 ஏக்கர் தனியார் நிலம் என்பன படையினரிடம் உள்ளன. வவுனியா மாவட்டத்தில் 56 ஏக்கர் தனியார் நிலம் படையினரிடம் உள்ளதாக அந்தந்த மாவட்டச் செயலகங்கள் உறுதி செய்கின்றன.

இதன் பிரகாரம் வடக்கின் 5 மாவட்டத்தில் மட்டும் தனியாருக்குச் சொந்தமான 4 ஆயிரத்து 142 ஏக்கர் நிலம் படையினர் வசமிருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலமையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள தனியாருக்குச் சொந்தமான வெறும் 101 ஏக்கர் நிலத்தைக்கூட விடுவிக்க முடியாத நிலமையிலேயே இந்த நாட்டின் அரசதலைவர் உள்ளார் -என்றார். (த-105)

## மன். மூத்த பொலிஸ் அத்தியட்சகராக பந்துல வீரக்கோன் நியமிக்கப்பட்டார்



மன்னார், ஜூன் 7

மன்னார் மாவட்டத்திற்கு புதிய மூத்த பொலிஸ் அத்தியட்சகராக பந்துல வீரக்கோன் நிய மிக்கப்பட்டுள்ளார் என்று அத்தியட்சகர் காரியாலயம் தெரி வித்தது.

இதற்கு முன்னர் மன்னார் மாவட்ட மூத்த பொலிஸ் அத்தியட்சகராக கடமையாற்றிய சிறியந்த பீரிஸ் கடந்த மே மாதம் 28ஆம் திகதி மூன்று வருட சேவையை நிறைவு செய்து காலி மாவட்டத்தில் உள்ள அல்லப்பிட்டியவுக்கு மாற்றலாகி சென்றதை அடுத்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கு பந்துல வீரக்கோன் நிய மிக்கப் பட்டார். (ம-213)



## வவுனியா பண்ணை முன் மரக்கன்றுகள் நடும் நிகழ்வு

வவுனியா, ஜூன் 7

ஆயிரம் மரக்கன்றுகளை நடும் திட்டத்தின் ஒரு பிரிவாக வவுனியா விவசாயப் பண்ணைக்கு முன்பாக மரக்கன்றுகள் நேற்றுமுன்தினம் நடப்பட்டன.

வவுனியா மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் வனவளத்திணைக்களம், விவசாயத் திணைக்களம் மற்றும் சுற்றாடல் அபிவிருத்தி அதிகார சபையின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

வவுனியா மாவட்ட மேலதிகசெயலர் தி. திரேஸ்குமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதேச செயலர் கா. உதயராசா, உள்ளூராட்சி உதவி ஆணையாளர் காஞ்சனகுமார, மூத்த பொலிஸ் அத்தியட்சகர், இராணுவத்தின் 56 ஆவது படைப்பிரிவு அதிகாரிகள், மாவட்டச் செயலக அதிகாரிகள், விவசாயத் திணைக்கள அதிகாரிகள், பாடசாலை மாணவர்கள், கிராம அலுவலர்கள், பொலிஸார் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு அரசதலைவரின் அறிவுறுத்தலின்படி இது நடைபெற்றது. (த)





போரால் பாதிப்படைந்த பெண் ஒருவர் கைதடியில் நடத்தி வரும் சிறுகடையை மேலும் விருத்தி செய்ய 60ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டன. வி3 அறக்கட்டளை ஊடாக இவை வழங்கப்பட்டன. பொறியியலாளரும் யாழ்ப்பாணத் தொழிலதிபரும் வி3 அறக்கட்டளையைச் சேர்ந்தவருமான சஞ்சே மற்றும் வவுனியா மாவட்ட சமூக சேவை அலுவலர் ஸ்ரீனிவாசன் ஆகியோரால் இவை அண்மையில் வழங்கப்பட்டன. (த-222)

## இலவச கற்கைநெறிக்கு விண்ணப்பங்கள் கோரல்

கிளிசொச்சி.ஜூன் 7

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையால் கிளிநொச்சி மாவட்டத்துக்கான தொழிற்பயிற்சி கற்கை நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியலாளர், கணினி வன்பொருள் வல்லுநர் ஆகிய கற்கைநெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கற்கை நெறிகளை கற்க விரும்புபவர்கள் தங்கள் பதிவுகளை அலுவலக நேரத்தில் கிளிநொச்சி பழைய கச்சேரி வளாகத்தில் அமைந்துள்ள தொழிற்பயிற்சி நிலையத்தில் எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளுமாறு கிளிநொச்சி மாவட்டத்தின் கச்சேரி வளாக தொழிற்பயிற்சி நிலைய கல்வி இணைப்பாளர் உ.தினேஸ்குமார் கோரியுள்ளார். மேலதிக தகவல்களுக்கு 0776684302, 07777 83608, 021 228 5686 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# ஜெயபுரம் மக்களின் வயல் காணிகளை அவர்களுக்கே வழங்க நேற்று இணக்கம்

## விரைவில் அளவீடு செய்யவும் தீர்மானம்

கிளிநொச்சி, ஜூன் 7

கிளிநொச்சி மாவட்டத்தில் ஜெயபுரம் வடக்கு மற்றும் தெற்கு மக்களுக்கு முன்னர் வழங்கிய வயல்க் காணிகள் அவர்களுக்கே உரியது என்று நேற்றைய கலந்துரையாடலில் இணக்கம் காணப்பட்டுள்ளது. அந்தக் காணிகளை உடனடியாக அளவீடு செய்து அந்த மக்களுக்கு வழங்குவதற்கும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

1983 ஆம் ஆண்டு இலங்கையின் தென்பகுதியில் ஏற்பட்ட ஜூலைக் கலவரத்தில் பாதிக்கப்பட்ட 540க்கும் மேற்பட்ட குடும்பங்கள் கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரிப்பிரதேச செயலர் பிரிவிலுள்ள ஜெயபுரம் வடக்கு, ஜெயபுரம் தெற்கு ஆகிய இரண்டு கிராம அலுவலர் பிரிவுகளில் தஞ்சமடைந்தனர். அவர்களுக்கு 1985 ஆம் ஆண்டு தலா ஒன்றரை ஏக்கர் வீதம் மேட்டுக் காணிகளும், 1990 ஆம் ஆண்டு ஒரு ஏக்கர் வீதம் வயல்க்காணிகளும் வழங்கப்பட்டன.

அதன் அடிப்படையில் அந்தக்காணிகளைத் துப்பரவு செய்து மக்கள் பயிர்செய்து வந்தனர். போரில் இடம்பெயர்ந்தனர்.

பின்னர் மீள்குடிய மர்த்தப்பட்டனர். எனினும், வனவளத் திணைக்களத்தினர் அவர்களுக்கு இடையூறு ஏற்படுத்தினர்.

வயல்க் காணிகள் தமக்குரியவை என்று வனவளத் திணைக்கள அதிகாரிகள் கூறி மக்களின் வாழ்வாதாரச் செயற்றிட்டத்தைத் தடுத்து நிறுத்தினர்.

இந்த விடயம் நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரனின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது.

கடந்த 24ஆம்திகதிநாடாளுமன்ற அமர்வில் கொண்டு வரப்பட்ட ஒத்திவைப்புவேளைத் தீர்மானத்தின் போது குறித்த காணிகளை மக்களிடம் கையளிப்பது தொடர்பில் கலந்துரையாடல் நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது.

அதன்படி உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் வஜிர அபேவர்த்தன தலைமையில் அமைச்சரின் நாடாளுமன்ற அலுவலகத்தில் நேற்று மு.ப.11.30 மணிக்கு நடைபெற்றது.

கலந்துரையாடலின் முடிவில் தொடர்புடைய தரப்பினரிடையே இணக்கம் காணப்பட்டு குறித்த வயற்காணிகளை உடனடியாக அளவீடு செய்து ஒரு மாத காலத்துக்குள் அந்த மக்களுக்கு கிடைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்ற முடிவு எட்டப்பட்டது.

கலந்துரையாடலில் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன், உள்நாட்டலுவல்கள் அமைச்சின்செயலர்காமினி செனவிரத்ன, வனவளத் திணைக்களப் பொதுப் பாதுகாப்பு அதிகாரி மகிந்த செனவிரத்ன, கிளிநொச்சி மாவட்டச் செயலர் சுந்தரம் அருமைநாயகம், வடக்கு மாகாண மேலதிக காணி ஆணையாளர் கே.மகேஸ்வரன், பூநகரி பிரதேச செயலர் கிருஸ்ணேந்திரன், ஜெயபுரம்வடக்கு கிராம அலுவலர் நோயல், ஜெயபுரம் தெற்கு கிராம அலுவலர் கணேசமூர்த்தி, ஜெயபுரம் கமக்கார அமைப்புத் தலைவர் அரசப்பன் இராமன், கமக்கார அமைப்பு பிரதிநிதிகளான பொ.சுப்ரமணியம், மா. சண்முகம் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் அலுவலர்களும் கலந்து கொண்டிருந்தனர் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனின் ஊடகப் பிரிவு தெரிவித்தது. (த)



# வில்பத்தில் இராணுவத்தினர் மரக்கன்றுகள் நடுகை

மன்னார் வில்பத்து பகுதி சார்ந்த பகுதிகளில் மன்னார் தள்ளாடி 54 ஆவது படைப்பிரிவின் ஏற்பாட்டில் மரக்கன்றுகள் நடும் நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

தள்ளாடி 54 ஆவது படைப்பிரிவு அதிகாரி மேஜர் ஜெனரல் பண்டார தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் இராணுவத்தின் வன்னி மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் குமுது பெரேரா கலந்து கொண்டார்.

முசலி பிரதேச செயலர் கே.எஸ்.வசந்தகுமார், மக்கள், பாடசாலை மாணவர்கள், இராணுவத்தினர் பலர் இதில் கலந்து கொண்டிருந்தனர்.

அங்கு நேற்று முன்தினம் 3 ஆயிரம் மரக்கன்றுகள் நடுகை செய்யப்பட்டன. இதுவரை அந்தப் பகுதிகளில் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மரக்கன்றுகள் நடுகை செய்யப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (த-56)

## தேவிபுரம் பகுதியில்

# கிணற்றுக்குள் இருந்து வெடிபொருள்கள் மீட்பு

முல்லைத்தீவு, ஜூன் 7

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேசத்திற்கு உட்பட்ட தேவிபுரம் பகுதியில் கிணறொன்றில் இருந்து வெடி பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன. இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

குறித்த காணியின் உரிமையாளர் கிணற்றை இறைத்துத் துப்பரவு செய்யும் போது வெடிபொருள்கள் உள்ளிட்ட சில பொருள்கள் இருப்பதை இனம் கண்டுள்ளார். அருகில் உள்ள படைமுகாமிற்கு தகவல் கொடுத்துள்ளதை தொடர்ந்து குறித்த இடத்துக்குச் சென்ற படையினர் கிணற்றில் உள்ள வெடிபொருள்களை எடுத்துள்ளார்கள். இரண்டு கைக்குண்டுகள், ஓர் ஆர்.பி.ஜி. குண்டு, துப்பாக்கி ரவைகள் என்பன அவ்வாறு மீட்கப்பட்டன. (ம)

# வாடிக்குரியவரே தீ மூட்டியுள்ளார்

## கடற்றொழில் திணைக்களம் பொலிஸில் முறைப்பாடு

முல்லைத்தீவு, ஜூன் 7

முல்லைத்தீவு செம்மலைப் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை மூன்று வாடிகள் எரிந்தமைக்கு அந்த வாடி உரிமையாளரே காரணம். அவரே தீ மூட்டியுள்ளார் என்று கடற்றொழில் நீரியல்வளத் துறைத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் குற்றஞ் சாட்டியுள்ளார்.

இது பற்றி முல்லைத்தீவுப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதாகவும் முல்லைத்தீவு மாவட்டக் கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்கள உதவிப்பணிப்பாளர் கலிஸ்ரன் தெரிவித்துள்ளார்.

செம்மலைக் கடற்கரையில் சட்டவிரோத கடற்றொழில் நடவடிக்கையைப் பரிசோதிக்க கடற்றொழில்திணைக்கள அதிகாரிகள் சமபவதினமன்று சென்றிருந்த போதே எரிப்பு நடந்துள்ளது.

அந்தப் பகுதியில் தொழில் செய்த ஒருவர் வேறொருவரின் கரைவலையை வலித்துக் கொண்டிருந்த வேளை அது அனுமதி அற்றமுறையில் வலிக்கப்படுகின்றது என்றுகூறி அதனை நிறுத்துமாறு திணைக்கள அதிகாரிகள் தெரிவித்து அங்கு தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டவர்களைக் கைது செய்ய முற்பட்டனர். அதன்போது சந்தேகநபர் தனது வாடிக்குச் சென்று அவரே தீ வைத்துள்ளார். கடற்றொழில் திணைக்களத்தினர் மீட்ட கரைவலைக்கும் தீ வைக்க முயற்சித்துள்ளார்.

அனுமதி அற்றமுறையில் கரைவலைத் தொழில் செய்த குறித்த கடற்றொழிலாளரின் தொழில் நடவடிக்கையைத் தடைசெய்து அதனைப் பிடிக்கும்போது அவர் தனது வாடிக்குத் தீ மூட்டியுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். முல்லைத்தீவுப் பொலிஸார் விசாரணையை முன்னெடுத்துள்ளனர். (த-ரி3)





# 31ஆம் நாள் நினைவஞ்சலியில் மாணவர்களுக்கு அன்பளிப்பு

கிளி/வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலயத்தில் வைத்து கிளிநொச்சி பிரதேச மாணவர்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டன. யாழ்ப்பாணம் சுண்டுக்குழியைச் சேர்ந்த ஓய்வு பெற்ற அதிபர் அமரர் சச்சிதானந்தத்தின் 31 ஆம் நாள் நினைவாக அவர்களது பிள்ளைகளால் இந்த உதவிகள் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டன.

அதன்படி கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள இராமநாதபுரம் மேற்கு ஜி.ரி.எம்.எஸ்., பாரதி வித்தியாலயம், வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த 4மாணவிகளுக்கு ஈருருளிகளும், ஊற்றுப்புலம் வித்தியாலய மாணவர் ஒருவரின் மருத்துவ தேவைக்காக 20 ஆயிரம் ரூபாவும் வழங்கப்பட்டன. (த-222)



# கனடா தூதுவருடன் சந்திரகுமார் சந்திப்பு

கிளிநொச்சி, ஜூன் 7

இலங்கைக்கான கனடா தூதுவர் டேவிட் மக்னொன் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், சமத்துவம் சமூக நீதிக்கான மக்கள் அமைப்பின் தலைவருமான மு. சந்திரகுமார் ஆகியோர் நேற்றுச் சந்தித்துப் பேசினர்.

கிளிநொச்சியிலுள்ள சந்திரகுமாரின் அலுவலகத்தில் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

சமகால மற்றும் எதிர்கால அரசியல் நிலமைகள் பற்றி கலந்துரையாடப்பட்டதோடு, உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்குப் பின்னரான நாட்டின் நிலமைகள் பற்றியும், வடக்கில் முதலீடுகளை மேற்கொள்வதன் ஊடாக தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக்கொள்வது பற்றியும் பேசியதாக சந்திரகுமார் தெரிவித்தார்.

இதன்போது கனடா தூதுவர் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவித்தபோது,

நான் கிளிநொச்சியில் நிற்பதில் மட்டும் மகிழ்ச்சியடையவில்லை. பல நாடுகளின் பிரச்சினைகளை அறிந்து கொண்டவன். அந்த வகையில் வடக்கில் மேலோங்கியுள்ள பிரச்சினை களையும் புரிந்து கொண்டுள்ளேன். போரின் பின்னரான அரசியல் பொருளாதார நிலமைகள் தொடர்பிலும் அறிந்துகொண்டுள்ளேன் - என்று தூதுவர் தெரிவித்தார். (த-214)



தேசிய சுற்றாடல் தினத்தை முன்னிட்டு உடையார்கட்டு குரவயல் பகுதியிலுள்ள பாரதி முன்பள்ளியில் நேற்றுமுன்தினம் மரநடுகையும் மரக்கன்றுகள் விநியோகமும் இடம்பெற்றன.

உடையார்கட்டு பிரதேச மணல் அகழ்வு உரிமையாளரால் புவிச்சரிதவியல் அளவைகள் மற்றும் சுரங்கங்கள் பணியகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக பணியக தலைமைப் பொறியியலாளர் மயூரன், சிறப்பு விருந்தினராக முல்லை மாவட்ட முன்பள்ளி இணைப்பாளர் ஐ.சிவநேசன், புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உட்பட பலர் கலந்து கொண்டனர். (9)

# வடக்கில் தேவைக்கு மேலதிகமாக மோட்டார் வாகனங்கள் அதிகரிப்பு!

## சூழல் தின நிகழ்வில் ஐங்கரநேசன் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 7

போரின் பின்னர் வடக்கு மாகாணத்தில் மோட்டார் வாகனங்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்து வருகிறது. 2018 ஆம் ஆண்டு வடக்கு மாகாண மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் ஏறத்தாழ இரண்டேமுக்கால் இலட்சம் மோட்டார் வாகனங்கள் வாகன வரி செலுத்தியுள்ளன. எனவே வடக்கில் தேவைக்கு மேலதிகமாக அதிகரித்துவரும் மோட்டார் வாகனங்கள் குறித்து எச்சரிக்கையாக இருக்கவேண்டியது அவசியம்.

இவ்வாறு தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவரும் வடக்கு மாகாண முன்னாள் விவசாய அமைச்சருமான பொ. ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

உலக சுற்றுச்சூழல் தின நிகழ்ச்சி வேலணை மத்திய கல்லூரியில் அதிபர் சி. கிருபாகரன் தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் உரையாற்றுகையில் ஐங்கரநேசன் மேற்கண்டவாறு கூறினார் என்று அவரது ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. அவர் மேலும் தெரிவித்ததாவது: .

வேறு மாகாணங்களில் பதிவுசெய்யப்பட்ட பெருந்தொகையான வாகனங்களும் வடக்கில் பயன்பாட்டில் உள்ளன. காற்றை மாசுபடுத்துவதில் பெற்றோலிய எரிபொருள்களில் இயங்கும் மோட்டார் வாகனங்கள் பெரும் பங்கு வகிக்கின்றன.



காற்றில் கலந்துவரும் மாசுக்கள் காரணமாக ஆண்டுதோறும் 7 மில்லியன் பேர் வரையில் பலியாகிக்கொண்டிருக்கிறார்கள் என்று உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது. இந்த இறப்புக்களில் பெரும் பங்கு ஆசிய, ஆபிரிக்க நாடுகளிலேயேநிகழ்கின்றது. இது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொருட்டே இந்த ஆண்டு சூழல் தினத்துக்கான கருப்பொருளாகக் 'காற்று மாசுபடுதலைத் தோற்கடிப்போம்' என்றுள்ளது.

காற்று மாசுபாட்டால் இறக்கின்றவர்களில் அரைவாசிப்பேர் பெற்றோலிய எரிபொருள்களில் இயங்கும் வாகனங்களில் இருந்து வெளியேறுகின்ற புகை மாசுக்களாலேயே உயிர் துறக்கின்றனர்.

இதனால் வளர்ச்சியடைந்த நாடுகள் தங்கள் நாடுகளில் மின்சாரத்தில் இயங்குகின்ற மோட்டார் வாகனங்களைப் பயன்படுத்துவதை ஊக்குவித்து வருகின்றன. பெற்றோலிய வாகனங்களை அதிக எண்ணிக்கையில் ஏற்றுமதி செய்தும் வருகின்றன. வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாண மாவட்டத்திலேயே உந்துருளிகளின் எண்ணிக்கை மிகஅதிகமாகவுள்ளது. ஒரு லட்சத்து 58 ஆயிரத்து 358 மோட்டார் வாகனங்கள் யாழ்ப்பாணத்தில் கடந்த ஆண்டில் வாகன வரி செலுத்தியுள்ளன. இவற்றில் ஒரு லட்சத்து 25 ஆயிரத்து 910 உந்துருளிகளே. அவை இன்று இளைஞர்களின் அந்தஸ்தின் அடையாளமாகவுள்ளன. அநேகமான வீடுகளில் ஒன்றுக்கு மேற்பட்ட உந்துருளிகள் உள்ளன.

நாம் தினமும் சுமார் 15 லீற்றர் வளியைச் சுவாசித்துக் கொண்டிருக்கிறோம். எமது நுரையீரலின் காற்றுப் பைகளைச் சுத்தமான காற்றால் நாங்கள் நிரப்ப வேண்டும் என்றால் மோட்டார்வாகனங்களின் தேவையற்ற பயன்பாட்டை அறவே தவிர்க்கவேண்டும்-என்றார். (த)

# விஞ்ஞான ஆய்வுப் பயிற்சிக்கு யாழ். இந்து மாணவன் தெரிவு

யாழ்ப்பாணம், ஜூன் 7

சிங்கப்பூர் தேசிய பல்கலைக் கழகத்தால் நடத்தப்படுகின்ற விஞ்ஞான ஆய்வுப் பயிற்சிக்காக இலங்கையிலிருந்து பங்குபற்றும் குழுவில் யாழ்ப்பாண இந்துக் கல்லூரி மாணவன் தேவானந்த் அபிராம் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

சிங்கப்பூர் டெக்னாலஜீஸ் எண்டுவெமென்ட் புரோகிராம் என்ற அமைப்பும் சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகமும் இணைந்து இந்த விஞ்ஞானஆய்வு பயிற்சித் திட்டத்தை நடத்துகின்றன. எதிர்வரும் ஜூன் மாதம் 9 ஆம் திகதி முதல் 15ஆம் திகதிவரை சிங்கப்பூர் தேசிய பல்கலைக் கழகத்தில் இந்தப் பயிற்சிகள் நடைபெறுகின்றன.

10 நாடுகள் பங்குகொள்ளும் இந்த ஆய்வு முகாமில் முதல் முறையாக இலங்கை பங்குபற்றுகிறது. இலங்கைக் குழுவில் நான்குபேர் அகில இலங்கை ரீதியாகத் தெரிவாகியுள்ளனர். ஒன்பது மகாணங்களிலிருந்தும் விஞ்ஞானத்துறையில் தேசிய மட்டத்தில் அடைவுகளைக் கொண்டிருந்த மாணவர்களுக்குப் பலகட்டங்களாக நடைபெற்ற தேர்வின் மூலம் இவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். வடமகாணத்திலிருந்து யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி உயர்தர மாணவன் தேவானந்த் அபிராம் தெரிவாகி சிங்கப்பூர் பயணமாகிறார். (எ)

# எமது உரிமைப் போராட்டத்துக்கு சகல மக்களும் ஆதரவளியுங்கள்

## வறணி சிமிழ் கண்ணகை அம்மன்கோவில் வழிபடுவோர் சபையினர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 7

ஆலய வழிபாட்டில் சமத்துவம் கோரி இடம்பெறும் மக்கள் போராட்டத்துக்கு அனைவரும் ஆதரவு தரவேண்டும் என்று வறணி வடக்கு சிமிழ் கண்ணகை அம்மன் ஆலய வழிபடுவோர் சபையின் நிர்வாகத்தினர் கோரியுள்ளனர்.

ஆலயத்தின் உபயகாரர்கள், பக்தர்கள், பொதுமக்கள் மற்றும் சமூகமட்ட அமைப்புகள் இணைந்து ஆலய வழிபாட்டில் அனைவருக்கும் சமத்துவம் வேண்டும்! ஆண்டுதோறும் திருவிழா நடைபெறுவது உறுதிப்படுத்தப்படவேண்டும்! என்ற கோரிக்கைகளை முன்வைத்து ஆலய முன்றலில் கடந்த 28ஆம் திகதி தொடக்கம் தொடர் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

வழிபடுவோர் சபையினர் தெரிவித்ததாவது:

தமது போராட்டத்துக்கு அனைவரும் ஆதரவு தரவேண்டும் என்று கோருகின்றோம்.

சுமார் நூற்றைம்பது வருடங்களுக்கு முன்னர் இந்தப் பிரதேசத்தில் உள்ள குளத்தில் கிடைத்த சிமிழ் ஒன்றுக்குள் இருந்த கண்ணகை அம்மனின் திருவுருவச் சிலையை வைத்து வழிபட்டு வந்ததால் உருவானதே சிமிழ் கண்ணகை அம்மன் ஆலயம்.

சாதிய அடிப்படையிலான ஆதிக்க சிந்தனை கொண்ட ஒரு சிலரின் அடாவடியான செயற்பாடுகளால் இருபது வருடங்கள் வரை திருவிழா இடம்பெறாதிருந்தது. கடந்த வருட தேர்த் திருவிழாவின்போது, பக்தர்கள் எவரும் வடம் தொட அனுமதிக்கப்படாது என்பதற்காக ஜே.சி.பி. இயந்திரம் கொண்டு தேர் இழுக்கப்பட்டது.

ஒட்டுமொத்த தமிழ்ச் சமூகத்துக்கும் அவமானத்தை ஏற்படுத்துகின்றதான ஒரு செயல் மீளவும் இடம்பெறக்கூடாது. நாம் எமது பிரதேச ஆலய விவகாரங்களுக்குப் பொறுப்பான தென்மராட்சி பிரதேச செயலகத்திடம் கடந்த 8 ஆம் திகதி தொடக்கம் பல்வேறு கோரிக்கைக் கடிதங்களை வழங்கி இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணுமாறு கோரிநின்றோம். பல்வேறு முயற்சிகளை முன்னெடுத்தபோதும், குறித்த குழப்பகாரர்கள் அவர்களுக்குப் போதிய ஒத்துழைப்பை வழங்கவில்லை.

பல்வேறு ஒடுக்குமுறைகளை எதிர்கொண்டு நிற்கின்ற இலங்கையின் சிறுபான்மைத் தேசிய இனங்களுள் ஒன்றான தமிழ்த் தேசிய இனத்தின் ஒற்றுமைக்குப் பெரும் தடைக் கல்லாக இருக்கின்ற இந்தச் சமூக ஏற்றத்தாழ்வு அடியோடு களையப்பட்டு, அனைவரது உள்ளங்களிலும் சகோதரத்துவம் மலரவும், எமது அடுத்த தலைமுறை மகிழ்வாக வாழவும் பாடுபடவேண்டியது காலத்தின் கட்டாயம்.

எமது இந்தப் போராட்டத்தின் வெற்றி யாழ்ப்பாண மாவட்டத்தின் அனைத்துக் கோயில்களிலும் பக்தர்கள் மத்தியில் பாரபட்சம் காட்டப்படுவதை இல்லாமல் செய்வதுடன், ஏனைய இடங்களில் நேரடியாகவும் மறைமுகமாகவும் இடம்பெறும் சமூக அநீதிகளையும், சாதி ரீதியிலான பாரபட்சங்களையும் தடுப்பதற்கானதொரு முன் உதாரணமாக அமையும் என நாம் நம்புகிறோம்.

எனவே, ஒட்டுமொத்த மனித சமுதாயத்துக்கே இழுக்கு ஏற்படுத்துவதான சாதியப் பாகுபாடுகளைத் தகர்த்து, ஆலய வழிபாட்டில் அடியவர்கள் அனைவரும் சமத்துவமாகக் கலந்துகொள்ளும் சூழலை உருவாக்க, அமைதி வழியில் பாடுபடும் எம்முடன் அனைத்துச் செயற்பாட்டாளர்களும் எம்முடன் இணைந்து செயற்பட முன்வரவேண்டும் என்று அழைப்புவிடுக்கின்றோம் - என்று அவர்கள் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

# பணியாளர் நலன்புரிச் சங்க பொதுக்கூட்டம்

பனை அபிவிருத்திச் சபையின் பணியாளர் நலன்புரிச் சங்கப் பொதுக்கூட்டம் தலைமைக் காரியாலயத்தில் கடந்த முதலாம் திகதி சங்கத் தலைவர் என்.நவநந்தன் தலைமையில் இடம்பெற்றது.

புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெற்றது. தலைவராக கா.கோபாலகிருஷ்ணன், செயலராக தி.தர்ஜினி, பொருளாராக எஸ்.ஜே.சத்தியராஜன், உபதலைவராக இ.சசிக்குமார், உபசெயலராக எஸ்.ஞானசர்மிளா, நிர்வாக உறுப்பினர்களாக ஈ.மகிந்தன், பெனில்டஸ் பீரிஸ், எஸ்.நாகேஸ்வரன், திருமதி சா.கமலேஸ்வரி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

பணியாளர் நலன்புரிச் சங்க அங்கத்தவர்களின் புலமைப்பரிசிலில் சித்தியடைந்த பிள்ளைகள் மதிப்புறுத்தப்பட்டனர். பணியாளர் நலன்புரிச் சங்கத்தில் அங்கத்துவம் வகிக்கும் புதிய திருமணத் தம்பதியர் மதிப்புறுத்தப்பட்டனர்.

மேலும் 2018ஆம் ஆண்டு ஒவ்வொரு துறையிலும் சிறப்புற பணியாற்றிய பணியாளர்களுக்கு சிறப்பான செயற்பாட்டாளர்களுக்கான விருதுகள் வழங்கி மதிப்புறுத்தப்பட்டனர். அந்த வகையில் சிறப்பான செயற்பாட்டளர்களாக செ.தேவதாஸ் நிர்வாகப்பிரிவு, திருமதி தீ.காருண்ஜா நிதிப்பிரிவு, பொ.தெய்வேந்திரம்- அபிவிருத்திப் பிரிவு, எஸ்.சரஸ்வதி விரிவாக்கப் பிரிவு, எஸ்.மார்க் எடிசன்- உற்பத்திப் பிரிவு, ப.தவமனோகரன்- சந்தைப்படுத்தல் பிரிவு ஆகியோர் மதிப்பளிக்கப்பட்டனர். (ஐ)



# மணவாளக் கோலம்

சங்கானை,ஜூன் 7

சங்கானை மாவடி ஞானவைரவர் ஆலய மணவாளக்கோல நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது.

காலை 8.30 மணியளவில் கிரியைகள் ஆரம்பமாகி 108 சங்காபிஷேகம் நடைபெறும்.

தொடர்ந்து மாலை வசந்த மண்டபப் பூசை இடம்பெற்று எம்பெருமான் உள்வீதி வலம்வரும் அருங்காட்சி இடம்பெறும் என்று அறிவித்துள்ளனர். (ஐ-126)

# இறுவெட்டு வெளியீடு

கொற்றாவத்தை இசை இறுவெட்டு வெளியீட்டு நிகழ்வு யாழ்ப்பாணம் திவ்விய மஹால் மண்டபத்தில் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு நடைபெறும். நிகழ்வில் முதன்மை விருந்தினராக இசைவாணர் கண்ணன் கலந்துகொள்ளவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ஐ)

# மரம் நடுகையும் நிலையத் திறப்பும்

கொடிகாமம்,ஜூன் 7

உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு மரநடுகையும் சோழர் பராமரிப்பு நிலையத் திறப்பு நிகழ்வும் இடம்பெற்றன.



வன்னி இளங்கோபுரம் சோழர் பராமரிப்பக வளாகத்தில் நேற்றுமுன்தினம் யோ.புரட்சி தலைமையில் நிகழ்வுகள் இடம்பெற்றன.

விசுவமடு பிரதேச மணல் அகழ்வுப் பத்திர உரிமையாளர்கள் சங்கம், புவிச்சரிதவியல் அளவைச் சுரங்கங்கள் பணியகத்தின் வழிகாட்டலில் நிகவுகள் இடம்பெற்றன.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக புவிச்சரிதவியல் அளவைச் சுரங்கங்கள் பணியகத்தின், முல்லைத்தீவு, யாழ்ப்பர்ணம், கிளிநொச்சி மாவட்டங்களின் பிராந்திய அகழ்வுப் பொறியியலாளர் டி.மயூரன் கலந்துகொண்டு நிலையத்தை திறந்து வைத்தார்.

சோழர் பராமரிப்பு நிலைய மாணவிகளின் கரகாட்டம், முதன்மை விருந்தினர் உரை, சிறுவர்களுக்கு பரிசில் வழங்கல் என்பன இடம்பெற்றன.தொடர்ந்து மரநடுகை நிகழ்வு இடம்பெற்றது. (ஐ-159)

# ஈஸ்டர் தின தாக்குதல் விசாரணையில் ஆஸி.

கொழும்பு, ஜூன் 7

ஈஸ்டர் ஞாயிறு தீவிரவாதத் தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகளுக்கு உதவுவதற்காக ஆஸ்ரேலியா 20 புலனாய்வு நிபுணர்களை இலங்கைக்கு அனுப்பியுள்ளது என்று அந்த நாட்டின் உள்துறை அமைச்சர் பீற்றர் டட்டன் தெரிவித்தார்.

இலங்கை வந்துள்ள அவர், கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் இந்தத் தகவலை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தீவிரவாதத் தாக்குதல்கள் குறித்த விசாரணையில் ஈடுபட்டுள்ள இலங்கைப் புலனாய்வுக் குழுக்களுக்கு உதவுவதற்காக ஆஸ்ரேலியா 20க்கும் அதிகமான புலனாய்வு அதிகாரிகளைக் கொண்ட குழுவொன்றை இங்கு அனுப்பியுள்ளது.

அவர்கள் இப்போதும், இலங்கை அதிகாரிகளுடன் இணைந்து பணியாற்றி வருகின்றனர். குறிப்பாக தடயவியல் பக்கத்தில் ஆஸ்ரேலிய அதிகாரிகள் உதவி வருகின்றனர்.

மிக விரைவாக இலங்கை அரசுக்கு இந்த உதவியை வழங்கினோம். ஆஸ்திரேலியப் பொலிஸார் ஊடாக, கொழும்பில் உள்ள ஆஸ்ரேலிய தூதரகம் இதற்கான பணிகளை ஒருங்கிணைக்கிறது.

இரண்டு நாடுகளுக்கும் இடையில் புலனாய்வுத் தகவல்களைப் பகிர்ந்து கொள்ளவும் நாங்கள் தயாராக இருக்கிறோம். - என்றார். (எ)

## களனிப் பல்கலை கற்றல் செயற்பாடு மீள ஆரம்பம்

கொழும்பு, ஜூன் 7

பல்கலைக்கழகத்தினுள் செயற்படுத்தப்பட்ட புதிய பாதுகாப்பு வேலைத் திட்டத்துக்கு அமையச் செயற்படுவதாக மாணவர்கள் உடன்பட்டதற்கு இணங்க நேற்று முதல் களனிப் பல்கலைக்கழகம் மீண்டும் திறக்கப்பட்டுள்ளது என்று அதன் நிர்வாகச் சபை தெரிவித்துள்ளது.

நாட்டில் கடந்த ஏப்ரல் மாதம் இடம்பெற்ற அசம்பாவிதத்தைத் தொடர்ந்து மூடப்பட்ட களனி பல்கலைக்கழகம் கடந்த 28ஆம் திகதி மீண்டும் திறக்கப்பட்டது. பல்கலைக்கழக நிர்வாகத்தால் புதிதாக செயற்படுத்தப்பட்ட பாதுகாப்பு வேலைத்திட்டத்துக்கு மாணவர்கள் எதிர்ப்புத் தெரிவித்தமையால் மருத்துவப் பீடத்தைத் தவிர்ந்த ஏனைய அனைத்து பீடங்களும் கடந்த 30ஆம் திகதி காலவரையறையின்றி மூடப்பட்டது. (எ)

## பாடசாலையில் டெட்டனேட்டர் நேற்று மீட்பு

கொழும்பு, ஜூன் 7

கஹட்டகஸ்திகிலிய குக்குளேவ தீகாபய பகுதி பாடசாலை ஒன்றில் நேற்று டெட்டனேட்டர்கள் மீட்கப்பட்டுள்ளன. அதனால் அந்தப் பாடசாலை தற்காலிகமாக மூடப்பட்டது.

நேற்றுக் காலை பாடாலை சோதனையிடப்பட்டபோதே டெட்டனேட்டர்கள் மீட்கப்பட்டன என்று பொலிஸார் கூறுகின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை கஹட்டகஸ்திகிலிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

## கிழக்குக் கடற்படை தலைமையகம் சென்று உரையாடிய அமெ. அதிகாரி

கொழும்பு, ஜூன் 7

இலங்கை வந்துள்ள அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின், அரசியல், இராணுவ விவகாரங்களுக்கான உதவிச் செயலர் கிளார்க் கூப்பர், கிழக்கு கடற்படைத் தலைமையகத்துக்கும், கண்ணி வெடிகளை அகற்றும் பகுதிகளுக்கும் சென்று கலந்துரையாடல்களை நடத்தியுள்ளார்.

கடந்த 2ஆம் திகதி இலங்கை வந்த கிளார்க் கூப்பர், கொழும்பில் இலங்கைப் பாதுகாப்பு அமைச்சின் உயர் அதிகாரிகளைச் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தார். கடந்த செவ்வாய்க்கிழமை அவர், கிழக்கில் அமெரிக்க அரசின் நிதி உதவியுடன், முன்னெடுக்கப்படும் கண்ணி வெடிகள் அகற்றும் பணிகளைப் பார்வையிட்டார்.

கண்ணிவெடிகளை அகற்றும் நடவடிக்கைகளில் காணப்படும்முன்னேற்றங்கள் மற்றும் அதில் எதிர்கொள்ளப்படும் இடர்களையும் அவர் கேட்டறிந்து கொண்டார்.

இலங்கைக் கடற்படையின் கிழக்குப் பிராந்தியத் தலைமையகத்துக்குச்சென்ற அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலர் கூப்பர், கிழக்கு கடற்படைத் தளபதி றியர் அட்மிரல் மெரின் விக்ரமசிங்கவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார். அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் மற்றும் அமெரிக்க தூதரக அதிகாரிகளைக் கொண்ட குழுவொன்றும் இந்தச் சந்திப்பில் பங்கேற்றது.

இந்தச் சந்திப்பின் போது, சுதந்திரமான திறந்த இந்தோ-பசுபிக் பிராந்தியத்துக்கு ஆதரவாக, அமெரிக்க கடற்படையுடன், இணைந்து இன்னும் அதிகமான பயிற்சிகள் மற்றும் கூட்டு ஒத்திகைகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என்று கிளார்க் கூப்பர், தெரிவித்துள்ளார். (எ)



## அனந்தியுடனும் மக்னொன் பேச்சு

கிளிநொச்சி, ஜூன் 7

கனடா நாட்டின் இலங்கைக்கான தூதர் டேவிட் மக்னொன் வடக்கு மாகாண முன்னாள் மகளிர் அமைச்சர் அனந்தி சசிதரனை நேற்றுச் சந்தித்தார். கிளிநாச்சியிலுள்ள விடுதி ஒன்றில் சந்திப்பு நடைபெற்றது.

"இறுதிப் போரில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான எந்தவொரு நட்ட ஈடுகளும் வழங்கப்படவில்லை. பன்னாட்டு நியமங்களுக்கமைய பாதிக்கப்பட்ட மக்களுக்கு எந்தவொரு நட்ட ஈடுகளும் வழங்கப்படவில்லை. ரணில் அரசு இன ரீதியில் வெவ்வேறான பார்வையையே கொண்டுள்ளது" என்று சந்திப்பின் பின்னர் அனந்தி சசிதரன் ஊடகங்களிடம் தெரிவித்தார். (த-35)

## ரிசாத்துக்கு எதிராக முதல் முறைப்பாடு

கொழும்பு, ஜூன் 7

சிறப்புப் பொலிஸ் குழுவிடம், முன்னாள் அமைச்சர் ரிசாத் பதியுதீனுக்கு எதிரான முதலாவது முறைப்பாடு நேற்றுமுன்தினம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்று பொலிஸ் பேச்சாளர் ருவன் குணசேகர தெரிவித்துள்ளார்.

முன்னாள் அமைச்சர் ரிசாத் பதியுதீன், முன்னாள் மாகாண ஆளுநர்களான அசாத் சாலி மற்றும் ஹிஸ்புல்லா ஆகியோருக்கு எதிரான முறைப்பாடுகளை பதிவு செய்வதற்கு பொலிஸ் தலைமையகத்தில், மூன்று பேர் கொண்ட பொலிஸ் குழு கடந்த செவ்வாய்க்கிழமை அமைக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவிடம் நேற்றுமுன்தினம் அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் முறைப்பாடு செய்துள்ளார். அமைச்சராக இருந்து ரிசாத் பதியுதீன் சிங்கள வணிகர்களுக்கு எதிராக நடவடிக்கைகளை முன்னெடுத்தார். சதொச ஊடாக மனித பாவனைக்கு உதவாத பொருள்களை வழங்கினார் என்றும் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது. (எ)

## மருத்துவர் சியாப்தீன் மீது முஸ்லிம் பெண் முறைப்பாடு

கொழும்பு, ஜூன் 7

சிங்களப் பெண்களுக்கு கருத்தரிக்க முடியாத நிலையை ஏற்படுத்தினார் என்று குற்றம்சாட்டப்படும் குருநாகல் மருத்துவமனை மகப்பேற்று நிபுணர் செய்கு சியாப்தீனுக்கு எதிராக முஸ்லிம் பெண் ஒருவரும் நேற்றுமுன்தினம் முறைப்பாடு செய்துள்ளார்.

அதிகளவு சொத்துக்களை சேகரித்துள்ளமை தொடர்பான சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ள மருத்துவர், செய்கு சியாப்தீன், பிரசவத்தின் போது, அறுவைச் சிகிச்சையை மேற்கொண்டு, 4 ஆயிரத்துக்கும் அதிகமான பெண்களுக்கு, கருத்தரிக்க முடியாத நிலையை ஏற்படுத்தினார் என்று குற்றச்சாட்டுகள் கூறப்படுகின்றன.

இதுதொடர்பாக சுகாதார அமைச்சு விசாரணைகளை நடத்தி வரும் நிலையில் குறித்த மருத்துவருக்கு எதிராக குருநாகல் மருத்துவமனையில் அவருக்கு எதிரான முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டு வருகின்றன. நேற்றுமுன்தினம் வரை 737 பெண்கள், அவருக்கு எதிராக முறைப்பாடு செய்துள்ளனர். நேற்றுமுன்தினம் 26 வயதுடைய முஸ்லிம் பெண் ஒருவரும் முறைப்பாடு செய்தார். இவர் சிங்களவர் ஒருவரை திருமணம் செய்துள்ளார்.

தாம் இரண்டாவது பிரசவத்துக்காக குருநாகல் மருத்துமனையில் சேர்க்கப்பட்ட போது, மருத்துவர் சியாப்தீன் அறுவைச் சிகிச்சை மூலம் குழந்தையை வெளியே எடுத்தார் என்றும், அதற்குப் பின்னர் தன்னால் கருத்தரிக்க முடியவில்லை - என்றும் அவர் தனது முறைப்பாட்டில் கூறியுள்ளார். (எ)

## கண்காணிப்புக் கருவி தொடர்பாக கோரிக்கை விடுக்கப்படவில்லை

### சீனத் தூதுவர் தெரிவிப்பு


கொழும்பு, ஜூன் 7

கண்காணிப்பு கருவிகளை வழங்குமாறு இலங்கையிடம் இருந்து சீனாவுக்கு கோரிக்கைகள் எதுவும் விடுக்கப்படவில்லை என்று இலங்கைக்கான சீன தூதுவர் செங் ஷியுவான் தெரிவித்துள்ளார்.

தீவிரவாத முறியடிப்பு பொறிமுறைக்காக இலங்கைக்கு கண்காணிப்பு கருவிகளை சீனா வழங்கவுள்ளது என்று வெளியாகிய தகவல்கள் குறித்து எழுப்பிய கேள்விக்கே அவர் இவ்வாறு பதிலளித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையிடம் இருந்து கோரிக்கை விடுக்கப்பட்டால் சீனா உதவத் தயாராக இருக்கிறது. இதுதொடர்பாக இலங்கை அரசிடமிருந்து எந்தக்கோரிக்கைகளும் விடுக்கப்படவில்லை. நாட்டின் இறைமைக்கு சீனா முக்கியத்துவம் அளிக்கிறது. இன்னொருநாட்டின் உள்விவகாரங்களில் எமது நாடு தலையீடு செய்யாது.



இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பின் அடிப்படையில், அவசர தொலைத் தொடர்பு கருவிகள், வெடிபொருள்களை செயலிழக்கச்செய்யும்கருவிகளை சீனா அனுப்பி வைக்கவுள்ளது. எனினும் சீன இராணுவத்தினர் இதில் ஈடுபடுத்தப்படமாட்டார்கள் - என்றார். (எ)

# முறையாக நிரூபிக்கப்படும்வரை எவரும் குற்றவாளிகள் கிடையாது

## மங்கள சமரவீர தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 7

சட்டத்தின் மூலம் முறையாக நிரூபிக்கப்படும் வரையில் எவரையும் குற்றவாளி என கூற முடியாது என்று நிதி அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.



த கார்டினல் ட்றூத் என்ற தலைப்பில் அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் இந்தக் கருத்துக்கள் இடம்பெற்றுள்ளன.

அவர் தெரிவித்துள்ளதாவது

பயங்கரவாதம் உள்ளிட்ட குற்றங்களில் யார் குற்றவாளி, யார் அப்பாவி என்பதை தீர்மானிக்கும் அதிகாரத்தை அரசியல் யாப்பு எந்தவொரு அரசியல்வாதிக்கோ, மதகுருவுக்கோ, சமூக ஊடகங்களுக்கோ வழங்கவில்லை. இலங்கையில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட மற்றும் அரசால் நியமிக்கப்பட்ட எந்தவொரு பிரதிநிதியும் அத்தகைய அரசியல் யாப்பை பாதுகாப்பதற்கு சத்தியப் பிரமாணம் செய்துள்ளனர்.

முறையான பொலிஸ் விசாரணைகள் மற்றும் வழக்கு விசாரணைகளின் பின்னர் தீர்மானங்களை மேற்கொள்வது அவசியம். இத்தகைய சட்ட முறையை இனவாதிகள் கடத்திச் சென்று தலைகீழாக மாற்றுவதற்கு இடமளிக்கக்கூடாது.- என்றார். (எ)

# கிழக்கு மாகாணப் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுவிட்டது!

## கிழக்கு கட்டளைத் தளபதி தெரிவிப்பு

மூதூர், ஜூன் 7

கடந்த உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்குப் பின்னர் எந்தவொரு பாதிப்பும் ஏற்படாத வண்ணம் கிழக்கு மாகாணத்தைப் பாதுகாத்திருக்கிறோம். கிழக்கின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது என்று இராணுவத்தின் கிழக்குப் பிராந்திய கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் அருண ஜயசேகர தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற மாவட்ட அரச அலுவலர்களுக்கான சமகால பாதுகாப்பு நிலவரம் தொடர்பான கூட்டத்தி லேயே அருண ஜயசேகர மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்டச் செயலர் ஏ.புஸ்பகுமாரவின் ஆரம்ப உரையுடன் ஆரம்பமான கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஏப்ரல் 21ஆம் திகதி காலை நடைபெற்ற சம்பவத்தையடுத்து 9.20க்கு அதற்குரிய நடவடிக்கைகள் எவ்வாறு எடுக்கப்பட வேண்டும் என்று தீர்மானித்தோம். அதனைச் செய்து முடித்தோம். 26ஆம் திகதி அதன் உச்ச அளவைக் கண்டு கொண்டீர்கள். எங்களுடைய அனைத்து இராணுவப் பயிற்சிப் பாடசாலைகளின் பயிற்சிகளை இடைநிறுத்தி இராணுவத்தினர் அடங்கிய முப்படையினரையும் ஒருங்கிணைத்து செயற்பட்டோம்.

கிழக்கு மாகாணத்தில்தான் இந்தச் சமயப் பிற்போக்கு வாதிகள் உள்ளனர் என்றுகூறிக் கொண்டிருக்கிறார்கள். நாடு முழுவதும் கிழக்கு மாகாணத்தில் என்ன நடக்கப் போகிறது என்று காட்டிக் கொண்டிருந்தார்கள். நாங்கள் மிகவும் திட்டமிட்டுச் செயற்பட்டு இதனை நிறைவு செய்தோம்.

இதற்கு பொது மக்கள், புலனாய்வுத்துறையினருக்குச் சிறப்பான ஒத்துழைப்பை வழங்கியிருந்தார்கள்.

திருகோணமலை அனைத்து இனங்களும் வாழுகின்ற முன்மாதிரியான பிரதேசமாக இருக்கின்றது. சுற்றுலா மையமாக இருக்கின்றது. பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாக இருக்கிறது.

நாட்டின் குளியாப்பிட்டி, நீர்கொழும்பு என பல இடங்களிலும் பல்வேறு சம்பவங்கள் நடைபெற்றன எனினும், ஒரு சம்பவமும் இந்த மாவட்டத்தில் நடைபெறாத வண்ணம் பார்த்துக் கொள்ள முடிந்தது.

**முஸ்லிம் பாடசாலைகளுக்கு 13லிருந்து பாதுகாப்பு**

எதிர்வரும் 13ஆம் திகதி முஸ்லிம் பாடசாலைகள் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன. அதற்கும் தேவையான பாதுகாப்பு வழங்குவோம். பாடசாலைப் பிள்ளைகளின் பாதுகாப்புத் தொடர்பாக கிராம மட்டக்குழுக்களின் ஊடாக வலுப்படுத்த வேண்டிய தேவை இருந்தது. அதனை மேற்கொண்டிருக்கிறோம்.

கிழக்கு மாகாணத்தில் கடந்த உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்குப் பின்னர் எந்தவொரு பாதிப்பும் ஏற்படாத வண்ணம் பாதுகாத்திருக்கிறோம். கிழக்கின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது. இனிவரும் காலங்களிலும் அதனை மிகவும் கவனமாக மேற்கொள்வோம்.

**ஐந்து வருடங்களாக பூட்டப்பட்டவை கண்டறிவு**

நான்கு ஐந்து வருடங்களாகத் திறக்கப்படாமல் இருக்கின்ற அலுவலகங்கள் கூட எங்களது பாதுகாப்புச் சோதனைகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. திணைக்களத் தலைவர்கள், திறக்கப்படாது, பயன்படுத்தாத அலுவலகக் கட்டங்களை பயன்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகளை எடுங்கள். அவ்வாறனவற்றினால் உங்களுக்கும் ஆபத்துக்கள் ஏற்படலாம் - என்றார். (த-40)

# பொருளாதாரத்தை அரசு வலுப்படுத்த வேண்டும்

## சஜித் வலியுறுத்து



கொழும்பு, ஜூன் 7

நாட்டின் பொருளாதாரத்தை வலுப்பெறச் செய்வதில் அரசு அக்கறை காட்ட வேண்டும் என்று அமைச்சர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தியுள்ளார்.

கல்கமுவவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சரிந்து போயுள்ள தேசிய பொருளாதாரம் நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையும். நாட்டின் தேசிய பாதுகாப்பை வலுப்படுத்துவதன் மூலம் நாட்டிலுள்ள அனைத்து இனங்கள் மற்றும் மதங்கள் பாதுகாக்கப்படும். அரசு தேசிய பாதுகாப்பை பலப்படுத்துவதிலும் தேசிய பொருளாதாரத்தை உறுதி செய்வதிலும் அக்கறை காட்ட வேண்டும்.

நாட்டில் ஏற்பட்டுள்ள அச்ச நிலையைப் பயன்படுத்தி மக்களுக்குள் பிளவுகளை ஏற்படுத்தி மீண்டும் அதிகாரத்தை கைப்பற்ற முயற்சிக்கின்றனர். இந்தச் செயற்பாடுகள் தேசிய வருமானத்துக்குப் பங்கம் விளைவிக்கும். மக்கள் நிதானமாகச் செயற்படுவதுடன் ஒரே நாடு என்ற வகையில் முன்னோக்கிச் செல்ல வேண்டும்.- என்றார். (எ)

# சகல தௌஹீத் ஜமாத்களையும் உடனடியாகத் தடை செய்யுங்கள்

## மனித உரிமை, மனிதாபிமானத்துக்கான அமைப்பு அரசிடம் கோரிக்கை முன்வைப்பு

கொழும்பு, ஜூன் 7

தீவிரவாத தௌஹீத் கோட்பாடுகள் இஸ்லாமிய மார்க்கத்துக்கு முரணானவை. இலங்கையில் இடம்பெற்ற தொடர் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களில் தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பு நேரடியாக ஈடுபட்டிருந்தது உறுதியாகியுள்ளது. எனவே நாட்டிலுள்ள அனைத்து தௌஹீத் ஜமாத் அமைப்புகளையும் உடன் நடைமுறைக்குவரும் வகையில் தடைசெய்யவேண்டும்.

இவ்வாறு மனித உரிமைகளுக்கும் மனிதாபிமானத்துக்குமான அமைப்பு அரசிடம் கோரிக்கை முன்வைத்துள்ளது.

அந்த அமைப்பு விடுத்த செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தௌஹீத் என்ற அரபுச் சொல்லின் கருத்து ஏகத்துவம் என்பதே. ஓர் இறைவன் என்பது அதன் பொருள். இது முஸ்லிம்களின் அடிப்படை நம்பிக்கை. ஆனால், அயலவர்களாகவும், நண்பர்களாகவும், சமூக, பொருளாதார வாழ்வின் பிரிக்கப்படமுடியாத சக பயணிகளாகவும் திகழ்கின்ற ஏனைய மதத்தவர்களின் இறை நம்பிக்கைக்கான உரிமையை நிராகரிக்க முஸ்லிம் சமூகத்திலுள்ள எந்தவோர் இஸ்லாமிய அமைப்புக்கும் எதுவித உரிமையோ, அதிகாரமோ கிடையாது.

1990களில் இலங்கையில் வேரூன்றத் தொடங்கிய தௌஹீத் எனும் அமைப்பு காலப்போக்கில் இஸ்லாமிய பரப்புரைகளை முன்னிறுத்தி பல்வேறுபட்ட தௌஹீத் குழுக்களாகப் பிரிந்து செயற்படத் தொடங்கின. இலங்கைத் தௌஹீத் ஜமாத் மற்றும் தமிழ்நாடு தௌஹீத் ஜமாத் என்ற இரண்டு தௌஹீத் அமைப்புக்களே ஆரம்பத்தில் இந்தப் பிராந்தியத்தில் தௌஹீத் இயக்கங்களாகப் பிரபல்யம் பெற்று விளங்கின.

இலங்கைத் தௌஹீத் ஜமாத்துக்குள் ஏற்பட்ட குழப்பங்களைஅடுத்து 10 வருடங்களுக்குள் இலங்கையில் பல்வேறு தௌஹீத் அமைப்புக்கள் தோற்றம் பெற்றுவிட்டன. சிறுசிறு குழுக்களாகத் தங்களை உருவாக்கிக் கொண்ட இத்தகைய அமைப்புக்கள் தத்தமக்கென்று வெவ்வேறான பள்ளிவாசல்களையும் அமைத்து தனித்தனியான பெயர்களில் தௌஹீத் அமைப்புக்களாகச் செயற்பட்டு வருகின்றனர்.

குர்ஆன் ஹதீஸ் என்பதை முன்னிலைப்படுத்தும் இவர்கள் அதே குர்ஆன் ஹதீஸை பின்பற்றும் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபையுடன் பலவிடயங்களில் முரண்பட்டு வருகின்றனர். இவர்களின் பரப்புரைகள் சில முஸ்லிம் பிரதேசங்களில் தீவிரமாக வேரூன்றியுமுள்ளன. இஸ்லாமிய மார்க்கத்தை கடுமையோடு கடைப்பிடிக்க வேண்டும் என்ற எண்ணம் உடையவர்களுக்குள் இவர்களின் பரப்புரைகள் இலகுவாகச் சென்று ஊடுருவியுள்ளன. அந்தஅடிப்படையில் ஆனதே தேசிய தௌஹீத் ஜமாத்தின் தலைவராகச் செயற்பட்டு தீவிரவாதத் தற்கொலைத் தாக்குதல் நடத்திய ஸஹ்ரான் வெளியிட்ட கருத்துக்கள்.

பன்னாட்டு ரீதியாக இந்தத் தீவிரவாத அமைப்புக்கள் கொண்டிருப்பதாகக் கூறப்படும் தொடர்புகள் பயங்கரவாத வடிவில் நாட்டை அழிக்கும் அளவுக்கு நாசகாரச் சூழலையும் ஏற்படுத்தியுள்ளன.

தௌஹீத் அமைப்புக்களின் செயற்பாடுகள் இந்தநாட்டின் ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகத்தைப் பன்னாட்டு வல்லரசுகள் தமது நிகழ்ச்சிநிரலைச் செயற்படுத்துவதற்கான ஒருகருவிச் சமூகமாகச் சிக்கவைத்துள்ளன.

தௌஹீத் அமைப்புக்களின் தீவிரவாதக்கொள்கைகளின் அடிப்படையில் பயங்கரவாதச் செயற்பாடுகளில் நேரடியாக ஈடுபட்டவர்களும், அவற்றுக்கு உடந்தையாக இருப்பவர்களும் இனங்காணப்பட்டு உச்சபட்ச தண்டனைகளுக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

**அப்பாவிகளை விடுவியுங்கள்**

தற்போது இலங்கை முஸ்லிம்களுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள மார்க்க ரீதியான தடைகளையும் அச்ச சூழ்நிலைகளையும் போக்கி போதிய பாதுகாப்பை வழங்குவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். அதுமட்டுமன்றி, வெறுமனே சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ள அப்பாவி முஸ்லிம்கள் தொடர்பில் அரசு கவனம் செலுத்தி அவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றுள்ளது. (த)

# அரசியல் மாற்றங்களை சரியாகப் பயன்படுத்தவும்

## டக்ளஸ் எம்.பி. கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஜூன் 7

நாட்டில் அரசியல் ரீதியிலாக சில மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இந்த மாற்றங்களை இந்த அரசு மிகச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

அவர் அனுப்பிய செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

தொடர்ந்தும் இனவாத ரீதியிலானதும், மத அடிப்படைவாத ரீதியிலானதுமான பாதையில் அரசியலை முன்னெடுக்க, முயற்சிப்பீர்களேயானால், மேலும் அழிவுகள் ஏற்படும். மாற்றங்கள் ஏற்படுகின்ற நிலையில், அந்த மாற்றங்கள் எதன் அடிப்படையில் நிகழ்த்தப்படுகின்றதோ அந்த அடிப்படைகளின் முக்கியத்துவமாக இருக்கின்ற பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும்.

நாட்டில் முஸ்லிம் மக்கள் பாதுகாப்பற்ற தொரு நிலமையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இத்தகைய நிலை விரைவில் மாற்றப்பட வேண்டும் - என்றுள்ளது. (த)

# மணல் ஏற்றிய சாரதிகள் கைது!

முல்லைத்தீவு, ஜூன் 7

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் அனுமதி இல்லாமல் மணல் ஏற்றிய இரண்டு சாரதிகள் கைது செய்யப்பட்டனர். அவர்களின் உழவியந்திரங்களும் பறிமுதல் செய்யப்பட்டன.

நேற்றுமுன்தினம் மாலை இந்தச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. வள்ளிபுனம் பகுதியில் ஓர் உழவு இயந்திரத்திலும், மல்லிகைத்தீவு பகுதியில் மற்றும் ஓர் உழவு இயந்திரத்திலும் மணல் ஏற்றிச் செல்லப்பட்டுள்ளது. உழவியந்திரங்களை புதுக்குடியிருப்பு பொலிஸார் சோதனையிட்டபோது மணல் ஏற்றுவதற்காக அனுமதிப்பத்திரம் இருக்கவில்லை. இதையடுத்து சாரதிகள் இருவரும் கைது செய்யப்பட்டனர். சாரதிகள் இருவரும் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர். (ம-ரி3)

# இனவாதம் தோன்ற அனுமதிக்க முடியாது

## மகிந்த அமரவீர தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 7

முஸ்லிம் இனவாதமோ அல்லது சிங்கள இனவாதமோ தோற்றம் பெறுவதற்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.



நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே மஹிந்த அமரவீர இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் ஏற்பட்ட நெருக்கடி நிலமையை மேலும் அதிகரிக்காமல் தடுப்பதற்கே மகாநாயக்க தேரர்களும் குரல் கொடுத்தனர். நாட்டில் பயங்கரவாதம் மீண்டும் தலைதூக்குவதற்கு எமக்கு விருப்பமில்லை.

ஆகையால், தற்போது தோன்றியுள்ள பிரச்சினைக்கு தீர்வை பெற்றுகொள்வது தொடர்பாக மூவின மக்களின் மதகுருமார்களுடன் கலந்துரையாடலொன்றில் முஸ்லிம் அரசியல்வாதிகள் ஈடுபட வேண்டியது மிகவும் அவசியமாகும்.

இதேவேளை நாட்டிலுள்ள மூவின மக்களும் ஒரே சமூக சூழ்நிலையில் வாழுவதற்கு வழியமைத்து கொடுக்க வேண்டும். - என்றார். (எ)

# காலநிலை இடரைக் கட்டுப்படுத்தும் திட்டத்துக்கு அமைச்சரவை அனுமதி

கொழும்பு, ஜூன் 7

காலநிலை தாக்கத்தின் காரணமாக ஏற்படும் இடர்களைக் கட்டுப்படுத்துவதற்காக உத்தேசிக்கப்பட்டிருந்த வேலைத்திட்டத்துக்கு அமைச்சரவை அங்கிகாரம் கிடைத்துள்ளது.

மகாவலி, களனி, மல்வத்து, ஜின்கங்கை , நில்வளா, அத்தனகல மற்றும் முந்தெனிய நதி நீரேந்துப் பகுதியைப் போன்று கலாஓயா, தெதுறுஓயா, மாஓயா மற்றும் கல்ஓயா நீரேந்துப் பகுதியை உள்ளடக்கிய வகையில் புதிய திட்டத்தை முன்னெடுக்க அரசு தீர்மானித்துள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் இடம்பெற்ற அமைச்சரவையிலேயே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தை 8 முதல் 10க்கு இடைப்பட்ட ஆண்டுகளுக்குள் 3 கட்டத்தில் நிறைவு செய்ய அமைச்சரவையால் இதற்கு முன்னர் அனுமதி வழங்கப்பட்டிருந்தது. இதற்கமைய இதன் முதலாவது கட்டம் என்ற ரீதியில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள வெள்ள நீர் தொடர்பில் முழுமையான எச்சரிக்கை விடுத்தல் மற்றும் களனி கங்கை நீரின் இடரைக் குறைக்கும் திட்டம் 310 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டின் கீழ் நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இதன் மூலம் காலநிலை மற்றும் இடர் நிலமை தொடர்பாக அர்த்தப்படுத்துவதற்கு மற்றும் இடர் தொடர்பாக முழுமையான அறிவிப்பை மேற்கொள்ளக்கூடிய ஆற்றலை மேம்படுத்துவதற்கும் ஹங்வெல்லை மற்றும் கடுவலைக்கிடையில் கீழ் களனி நதி கரையோரப் பகுதியில் வெள்ள இடரைக் குறைப்பதற்காக நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இதற்கு தேவையான நிதியை வழங்குவதற்கு உடன்பாடு தெரிவித்துள்ள அபிவிருத்தி மற்றும் மறுசீரமைப்புக்கான பன்னாட்டு வங்கியுடன் கடன் ஒப்பந்தம் குறித்து பேச்சு நடத்துவதற்கு நிதி அமைச்சர் மங்கள சமரவீர நடவடிக்கை எடுத்துள்ளார். இதற்கு அமைச்சரவையில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. (எ-61)

# பெரும் வன்முறை தடுக்கப்பட்டதாம்

## டிலான் கூறுகின்றார்

கொழும்பு, ஜூன் 7



கத்தோலிக்க மக்களை இலக்குவைத்து தேவாலயங்களில் குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதில் நூற்றுக்கணக்கான மக்கள் உயிரிழந்த பின்னர் இடம்பெறவிருந்த பெரியதொரு வன்முறை தடுக்கப்பட்டுள்ளது. பதவி விலகிய முஸ்லிம் அமைச்சர்கள் இதனை கவனத்திற்கொள்ள வேண்டும். இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

பொரளையில் நாடாளுமன்ற உறுப்பினர் திலங்க சுமதிபாலவின் அலுவலகத்தில் நேற்று நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

முஸ்லிம் அமைச்சர்கள் அனைவரும் கூட்டாக பதவி விலகினாலும் தனித்தனி பதவி விலகல் கடிதங்களை கையளித்திருக்க வேண்டும். இவ்வாறு கூட்டாக கையெழுத்திட்டு கொடுத்த கடிதம் செல்லுபடியற்றது.

குற்றஞ்சாட்டப்படாமல் பதவி விலகியுள்ள அமைச்சர்கள் குற்றஞ்சாட்டப்பட்டவரை பாதுகாப்பதற்காக பதவி விலகினார்கள் என்ற குற்றச்சாட்டுக்கு ஆளாகிவிடக்கூடாது.

கத்தோலிக்க மக்களை இலக்கு வைத்து தேவாலயங்களில் குண்டு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டு நூற்றுக்கணக்கான மக்கள் உயிரிழந்தபோது, இடம்பெறவிருந்த பெரியதொரு வன்முறையை பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தடுத்தி நிறுத்தி மிகவும் பொறுமையுடன் செயற்பட்டார்.

அன்று தடுத்து நிறுத்தப்பட்ட வன்முறை தற்போது இடம்பெறுவதற்கு இடமளிக்கப்படக் கூடாது. இதனை பதவி விலகிய முஸ்லிம் அமைச்சர்கள் கவனத்திலெடுக்க வேண்டும் - என்றார். (எ)

# மாத்தறை விகாரைகளிலும் மங்களவுக்கு வருகிறது தடை

கொழும்பு, ஜூன் 7

பௌத்த விடயங்கள் குறித்து சர்ச்சைக்குரிய கருத்துக்களை தெரிவித்துவருவதால் அமைச்சர் மங்கள சமரவீரவை மாத்தறை மாவட்டத்தின் எந்த விகாரைக்கும் அழைப்பதில்லையென்றும் அவர் கலந்து கொள்ளும் நிகழ்வுகளை புறக்கணிப்பது என்றும் மாத்தறை பௌத்தசாசன சங்கம் நேற்றுமுன்தினம் தீர்மானித்துள்ளது.

நேற்றுமுன்தினம் அமைச்சருக்கு எதிராக ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்திய பின்னர் மாத்தறை மகாபோதியின் முன்பாக இதற்கான உறுதிமொழியையும் பிக்குமார் ஒன்றுகூடி எடுத்தனர்.

இதன்படிஅமைச்சரை இனிமாத்தறைமாவட்டவிகாரைகளின் எந்த நிகழ்வுகளுக்கும் அழைப்பதில்லையென தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே கம்பஹா மாவட்டத்திலும் அமைச்சருக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. (எ)

# வீதியோர வாகனத்தில் சடலம் மீட்பு

கொழும்பு, ஜூன் 7

அதுருகிரிய வீதி ஓரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனத்திலிருந்து சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

அத்துருகிரிய சங்தோரிஸ் ஜயந்தி மாவத்தையில் கார் ஒன்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை அதிகாலை 2:15 மணியளவில் பொலிஸார் குறித்த காரை சோதனையிட்டுள்ளனர். வாகனத்தின் சாரதி ஆசனத்தில் உயிரிழந்த நிலையில் ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர் மாலம்பே கஹாங்தொட்ட வீதியில் வசித்த 48 வயதுடைய மொஹோட்டி ஆராச்சிலாகே ராஹூல ஜயசம்பத் என அடையாளம் காணப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (எ-71)

# கஞ்சாவுடன் இருவர் கைது

கொழும்பு, ஜூன் 7

எம்பிலிபிட்டிய பகுதியில் கஞ்சாவுடன் சந்தேக நபர்கள் இருவர் கடந்த செவ்வாய்க்கிழமைகைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

எம்பிலிப்பிடிய பகுதியில் சந்தேகத்துக்கிடமான வேன் ஒன்று பயணிக்கிறது என்றுபொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது குறித்த வாகனத்தில் இருந்து ஒரு கிலோ 950 கிராம் கஞ்சா மீட்கப்பட்டது. சந்தேக நபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். (எ-71)

# முஸ்லிம்களை நசுக்குவதற்கு நாம் துணைபோகமாட்டோம்!

## தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலர் தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஜூன் 7

தற்போது சிங்கள மக்களோடு தமிழ் மக்களும் ஒன்றிணைந்து செயற்படுங்கள் என்ற வேண்டுகோள் முன்வைக்கப்பட்டுள்ளது. இதை மிக எச்சரிக்கையோடு பார்க்க வேண்டும். சிங்கள மக்களோடுசேர்ந்து முஸ்லிம் மக்களின் உரிமையை நசுக்குவதற்கு நாங்கள் ஒருபோதும் துணையாக இருக்கப் போவதில்லை.

இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலரும், கிழக்கு மாகாண முன்னாள் விவசாய அமைச்சருமான கே. துரைராசசிங்கம் தெரிவித்தார்.

சமகால நாட்டு நடப்புக்கள் தொடர்பில் அவர் நேற்று மேலும் தெரிவித்ததாவது:

**சிறுபான்மை இனங்களுக்கு ஒரே நிகழ்ச்சி நிரல்வேண்டும்**

சிறுபான்மை இனம் என்கின்ற அடையாளத்தைத் தக்க வைக்கின்ற நிலமையிலே அந்தந்த காலத்துக்கு ஏற்ற விதத்தில் அனைத்துச் சிறுபான்மை இனங்களும் ஒரே செயற்பாட்டில் தங்களுடைய நிகழ்சி நிரலை அமைத்துக் கொள்வதும் பெருந்தேசிய வாதத்துக்கு எதிராக எங்களைப் பலப்படுத்திக் கொள்வதும் அவசியம்.

**சதுரங்கம்**

அரசியல் என்பது ஒரு சதுரங்கம். நிகழ்வுகளுக்கு ஏற்ற விதத்திலே அந்தந்த அரசியற் கட்சிகளின் தலைவர்கள் அல்லது அதில் முன்னிலை வகிப்பவர்கள் தங்கள் காய்நகர்த்தல்களை மேற்கொள்வார்கள்.

அந்த வகையிலேதான் தற்போது நடைபெற்றிருக்கின்ற முஸ்லிம் அமைச்சர்களின் பதவி விலகலும் அமைந்துள்ளதாகக்கருதுகின்றேன். ஒவ்வொருவரும் தங்கள் வழிகளில் காய்களை நகர்த்திக் கொண்டிருந்தார்கள். யாரும் எதிர்பார்க்காத விதத்தில் முஸ்லிம் அமைச்சர்கள் அனைவரும்கட்சிபேதங்களை மறந்து தங்கள் பதவிகளைத் துறந்திருக்கின்றார்கள்.

அரசியல் காய்நகர்த்தல்களில் அவர்கள் கையாண்ட வழியாகத்தான் இதனை நாங்கள் அவதானிக்கின்றோம். தமிழர்களாகிய நாங்கள் இந்த நாட்டில் அனைத்து மக்களோடும் சேர்ந்து எங்களுடைய சம அந்தஸ்தைப் பேணிக் கொண்டு வாழ விரும்புபவர்கள்.

நாட்டில் சிங்கள பௌத்த தேசிய வாதத்தின் இன்னுமொரு முகம் தற்போது அடையாளப் படுத்தப்பட்டிருக்கின்றது. இது இந்த நாட்டின் அரசியலுக்கு உகந்ததல்ல. அத்துரலிய ரத்ன தேரர் நாடாளுமன்றத்தில் முன்வைத்த தீர்மானத்துக்கு வலுச் சேர்க்கும் முகமாகவே உண்ணாவிரதம் மேற்கொண்டு அதனைப் பௌத்த துறவிகளின் கவனத்துக்குக்கொண்டு சென்றிருக்கின்றார்.

இதனை அவர் நாடாளுமன்றிலேயே கையாண்டிருக்க முடியும்.

**ஞானசாரர் சொன்னது பொய்த்துவிட்டதே!**

இது போன்றே ஞானசார தேரரை அரசதலைவர் விடுதலை செய்யும் போது அவர் அரசியல் விடயங்களில் ஈடுபடமாட்டேன் என்று தெரிவித்திருந்தார். ஆனால் தற்போது அந்தக்கதைகள் எல்லாம் பொய்த்துப் போய் விட்டன.

உண்மையில் கண்டியில் நடைபெற்ற பௌத்த பிக்குகளைத் தலைமையாகக் கொண்ட அந்த மக்கள் பேரணி இந்த நாட்டின் அரசியல் நிகழ்ச்சி நிரலிலே பொருத்தமற்ற ஒரு செயற்பாட்டைக் கொண்டு வரும் என்பதற்கான ஒரு எச்சரிக்கையாக இருக்கின்றது.

**துறவிகள் தலையிட்டால் நாசம்**

அரசியல் தீர்வுகளிலே பௌத்த துறவிகள் சம்மந்தப்படும் போதெல்லாம் அரசியல் நிகழ்ச்சி நிரல் மாற்றப்பட்டு அது சிங்கள பௌத்த தேசிய வாதத்தினுடைய வெற்றியாகத்தான் தொடர்ச்சியாக நிகழ்ந்து வந்திருக்கின்றது என்பதும் இதனால் அதிகம் பாதிக்கப்பட்டவர்கள் சிறுபான்மையினர் என்பதும் வரலாறு தந்த பாடம். சுதந்திரம் அடைந்ததைத் தொடர்ந்து வந்த எல்லா விடயங்களிலும் இது நிகழ்ந்திருக்கிறது.

**முடக்கலுக்கான அடித்தளமே இது**

தற்போது நடைபெறுகின்ற விடயங்கள் சிறுபான்மை சமூகத்தினுடைய அபிலாசைகள் எல்லாம் முற்றுமுழுதாக முடக்கப்படுகின்ற செயற்பாட்டுக்கு அடித்தளமாகவே அமையப் போகின்றன.

தமிழ் மக்கள் நல்லாட்சியை ஏற்படுத்துவதில் முக்கிய பங்கு வகித்தோம். புதிய அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்குவதுதான் எமது நோக்கம் - என்றார். (கு-46)

# விமலுக்கு முதுகெலும்பிருந்தால் குற்றச்சாட்டை நிரூபிக்கட்டும்!!!

## சவால் விடுகிறார் அமீர் அலி

கொழும்பு, ஜூன் 7
ரிசாத் பதியுதீனுக்கு எதிராக முன்வைக்கப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டால் நாங்கள் தீர்மானத்தை எடுப்போம். அதேபோன்று விமல் வீரவன்சவுக்கு முதுகெலும்பு இருக்குமானால் ச.தொ.ச வாகனங்களை பயங்கரவாதிகள் பயன்படுத்தியதை நிரூபிக்க வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் அமீர் அலி சவால்விடுத்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
பயங்கரவாத தாக்குதலைத்தொடர்ந்து அப்பாவி முஸ்லிம்கள் அதிகமானவர்கள் சிறையிலடைக்கப்பட்டுள்ளனர். சந்தேகத்தில் கைது செய்யப்படுபவர்களையும் பிணை வழங்க முடியாதவாறு பொலிஸார் குற்றங்களைப் பதிவு செய்துள்ளனர். கப்பலின் சுக்கான் பொறிக்கப்பட்ட ஆடை அணிந்தமைக்காக முஸ்லிம் பெண் ஒருவர் 21 நாள் சிறையிலடைத்து விசாரிக்கப்பட்டார். ஆனால் குருநாகலையில் தாக்குதல் நடத்தியவர்கள் அனைவரும் சாதாரண சட்டத்தில் கைது செய்யப்படு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.
இந்த நாட்டின் நீதிமன்ற தீர்ப்புக்கள் முஸ்லிம்களுக்கு ஒருசட்டமும் மற்றவர்களுக்கு ஒரு சட்டமாகவும் இருக்கின்றதாகவே தெரிகின்றது. அத்துடன் மகாசங்கத்தினரின் கோரிக்கைக்கு நாங்கள் மதிப்பளிக்கின்றோம். அவர்கள் எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் போன்று சிந்திப்பவர்கள் அல்ல. நாட்டின் எதிர்காலம் குறித்து சிந்தித்தே எம்மிடம் கோரிக்கை விடுத்திருக்கின்றனர். அவர்களின் கோரிக்கை தொடர்பில் நாங்கள் அவர்களுடன் கலந்துரையாடவுள்ளோம் -என்றார். (ஓ.5)

## இந்து...

பதி கலையரங்கில் நிகழ்வுகள் நடைபெற்றன. யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இந்தியத் துணை தூதரகத்தால் நூல்களும் அன்பளிப்பு செய்யப்பட்டன.
நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தின் தகுதிவாய்ந்த அதிகாரி பேராசிரியர் கந்தசாமி, சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணம் பல்கலைக் கழக கலைப்பீட பீடாதிபதி கலாநிதி க.சுதாகர் ஆகியோர் கலந்து கொண்டனர். நிகழ்வில் சமயப் பெரியார்கள், விரிவுரையாளர்கள், ஆர்வலர்கள், மாணவர்கள் எனப் பலர் பங்கேற்றனர்.
நிகழ்வில் கலந்து கொண்ட கலாநிதி ஆறுதிருமுருகன் தெரிவித்ததாவது:
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றில் மிக பெறுமதி வாய்ந்த நாளாக இன்றைய நாள் பொறிக்கப்பட வேண்டும். சுதேசிகளின் மதம் கலைகளை வளர்ப்பதற்கு பல்கலைக் கழகம் வேண்டும் என்று சேர்.பொன்.இராமநாதன் மூன்று மணித்தியாலம் வாதாடினார். அதன் பின்னர்தான் பல்கலைக் கழகம் உருவாக்கப்பட்டது. அதன் பின்னர் இந்தக் கற்கை நெறி இன்று ஆரம்பிக்கப்பட்டது மிக பெறுமதிவாய்ந்த விடயம், என்றார்.
யாழ்ப்பாணப் பல்கலைக் கழக தகுதி வாய்ந்த அதிகாரி பேராசிரியர் க.கந்தசாமி தெரிவித்ததாவது:
1974ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் பல்கலைக் கழகம் ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கம் எமது பிரதேச கலை கலாசார அறிவுசார் விடயங்களை வளர்த்தெடுப்பது ஆகும். அதன் ஒரு மைல் கல்லாக இன்று இந்த பீடம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இது உருவாகுவதற்கு பலர் தமது பங்களிப்பை வழங்கியுள்ளனர். அவர்களுக்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். சைவ சித்தாந்த விழுமியங்களை மேலோட்டமாக அணுகாமல் ஆழ்ந்து சென்று அதனை உற்று நோக்கி மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும். பல்கலைக் கழகத்தை உருவாக்குவது அரசியல் வாதிகளுக்கு சுலபம். ஆனால் வளர்த்தெடுப்பது கல்வி சமூகத்தின் கடமையாகும், என்றார்.
யாழ்ப்பாணப் பல்கலைக் கழக கலைப்பீட பீடாதிபதி கலாநிதி க.சுதாகர் தெரிவித்ததாவது.
ஆரம்பத்தில் இந்த பீடம் உருவாக்கப்படுவதற்கு சில பீடாதிபதிகள் மாற்றுக் கருத்துக்களைத் தெரிவித்தனர். பின்னர் எமக்கு ஆதரவுகள் கிடைத்தன. இரண்டு ஆண்டுகளுக்குள் முன்மொழிவுகள் சமர்பிக்கப்பட்டு அதன் பின்னர் எமக்கு அனுமதிகள் கிடைத்தன. சைவ சித்தாந்ததுறை உள்பட மூன்று துறைகளை கொண்ட பீடமாக இது காணப்படும். இது எமக்கு கிடைத்த வெற்றியாகும். இது தனியான பீடமாக காணப்பட்டாலும் மூன்று ஆண்டுகளுக்கு கலைப் பீடத்துடன் இணைந்து செல்ல வேண்டி உள்ளது. மாணவர்கள் ஏற்கனவே மற்ற துறைகளில் கற்றல் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர். அடுத்து வரும் பிரிவினர் இதனைக் கற்கும்போது தனிப் பீடமாக இங்கு கற்க முடியும். இது உலகத்தில் காணப்படும் இந்து மக்களுக்கு இது தான் ஒரு பீடமாக உள்ளது. பீடத்தை உருவாக்குவது சுலபம். அதனை தக்க வைப்பது எங்கள் கைகளில் தான் உள்ளது. பலத்த சவால்கள் மத்தியில் இந்தப் பீடத்தை நாம் ஆரம்பித்துள்ளோம். சமயம் சமூகம் சார்ந்த பீடமாக இது பயணிக்கும், என்றார். (ஓ.5,7)

## மகாநாயக்கர்...

எனர். ரிசாத் பதியுதீன், ஹிஸ்புல்லா, அசாத் சாலி ஆகியோரைப் பதவி நீக்கக் கோரி, நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்னதேரர் உணவு ஒறுப்புப் போராட்டம் முன்னெடுத்திருந்த நிலையில், ஒட்டுமொத்த முஸ்லிம் அமைச்சர்களும் பதவிகளைத் துறந்திருந்தனர்.
இந்த நிலையில் மகாநாயக்க தேரர்கள் நேற்றுமுன்தினம், குற்றம் சுமத்தப்படாத முஸ்லிம் அமைச்சர்கள் தங்களது பொறுப்புக்களை மீள ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கோரிக்கை விடுத்திருந்தனர்.
இது தொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம், மகாநாயக்க தேரர்களின் அறிவிப்பை நாம் மதிக்கின்றோம். அதற்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அவர்களைச் சந்தித்து எமது நிலைப்பாட்டை அறிவிப்போம்.
மேலும் நாம் எமது பதவி விலகலை கடந்த திங்கட் கிழமை தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளித்தோம். அனைவரும் கூட்டாக கையெழுத்திட்டு கடிதத்தை கையளித்தோம். அரசமைப்பின் பிரகாரம் தனித் தனியாக பதவி விலகல் கடிதங்கள் கையளிக்கப்பட வேண்டும் என்று தலைமை அமைச்சர் கூறினார். நோன்பு பெருநாள் காரணமாக எமது உறுப்பினர்கள் சொந்த இடங்களுக்குப் பயணத்தை மேற்கொண்டிருந்தனர். பதவி விலகல் கடிதத்தை கையளிப்பதில் தாமதம் ஏற்பட்டது. இருப்பினும் கடந்த திங்கட்கிழமையிலிருந்து நாம் பதவிகளிலிருந்து விலகிவிட்டோம் - என்றார்.
இதேவேளை மூத்த அரசியல்வாதியான பௌசி தெரிவித்ததாவது, மகாநாயக்க தேரர்களின் கோரிக்கையை வரவேற்கின்றோம். ஆனால் இதுபற்றி உடனே முடிவெடுக்க முடியாது. நாங்கள் கூடி பேச வேண்டும். சில பிரச்சினைகளுக்கு உடனடியாகத் தீர்வை கண்டாக வேண்டும். எந்த நாளும் இழுபறியில் இருக்க முடியாது. பிரச்சினைகளுக்கு தீர்வை காண முயற்சிக்க வேண்டும். பேசி நாங்கள் ஒரு முடிவை எடுப்போம்- என்றார். (ஓ.5)

## விசாரணை...

நாடாளுமன்றத் தெரிவுக்குழு முன்னிலையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.
கொழும்பு கொட்டாஞ்சேனை மற்றும் கொழும்பின் புறநகர் பகுதியான தெகிவளை பகுதிகளில் 11 தமிழ் இளைஞர்கள் 2008ஆம் ஆண்டு மற்றும் 2009ஆம் ஆண்டுகளில் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டதாக அவர்களின் உறவினர்களினால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. இந்தச் சம்பவத்தில் பாதுகாப்பு பிரிவின் உயர் அதிகாரிகள் பலருக்கு தொடர்பு இருப்பதாக குற்றஞ்சுமத்தப்பட்டது. பல உயர் பாதுகாப்பு அதிகாரிகள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்ததுடன், பாதுகாப்பு பிரிவினர் பலர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலிலும் வைக்கப்பட்டிருந்தனர். முன்னாள் கடற்படைத் தளபதி ரவீந்திர குணவர்தனவை இந்த விவகாரத்தில் கைது செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டபோதும், அது தடுக்கப்பட்டது. இதன் பின்னரே நிசாந்த டி சில்வா இடமாற்றப்பட்டார்.
இந்த விவகாரம் தொடர்பில் தெரிவுக் குழுவில் பூஜித தெரிவித்ததாவது, பொலிஸ் அதிகாரியான நிசாந்த டி சில்வாவை இடமாற்றம் செய்ய, அரச தலைவர் கூறியதாக அப்போதைய பாதுகாப்பு செயலரால் எனக்கு அறிவிக்கப்பட்டது. இதன்படியே, இடமாற்றும் உத்தரவுக்கு கையெழுத்திட்டேன்.
நிசாந்த டி சில்வாவை இடமாற்றம் செய்வதற்கான தேவை ஏன் அரச தலைவருக்கு ஏற்பட வேண்டும் என நாடாளுமன்ற தெரிவுக்குழு உறுப்பினர்கள் பூஜித் ஜயசுந்தரவிடம் கேள்வி எழுப்பினர்.
பாதுகாப்பு படைகளின் பிரதானிக்கும், 11 தமிழ் இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட சம்பவத்துக்கும் இடையில் தொடர்பு காணப்படுகிறது என்று எண்ணுவதாக பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர குறிப்பிட்டார். (ஓ.5)

## தாக்குதலுக்குப்...

னார். அதேபோல விசாரணையில் பெயரைக் காப்பாற்றிக் கொள்ளலாம் எனவும் மைத்திரி கூறினார். தாக்குதல் அச்சுறுத்தல் இருப்பதாகப் புலனாய்வுத் தகவல் ஊடாக நான் கேள்விப்பட்டிருந்தேன். ஆனால், உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் குறித்து எனக்கு எதுவும் முன்கூட்டியே தெரியாது. ஆனால், நான் பலிக்கடா ஆக்கப்பட்டுள்ளேன். இவ்வாறு உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்கள் தொடர்பாக விசாரிக்க நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழு முன்பாக நேற்று சாட்சியம் அளித்தார் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர.
அவர் மேலும் தெரிவித்ததாவது:

**பொறிமுறை இல்லை**

பொலிஸ்மா அதிபர் புலனாய்வுத் தகவல்களை அரச தலைவரிடம் பரிமாறும் ஏற்பாடு இருக்கவில்லை. தேசிய புலனாய்வுத்துறைப் பணிப்பாளர் நேரடியாக அந்தத் தகவல்களை அரச தலைவரிடம் வழங்கி வந்தார். முன்னாள் பாதுகாப்புச் செயலர் புலனாய்வுத் தகவல்கள் எதனையும் அரச தலைவரிடம் கூறினால் அதை புலனாய்வுத்துறைப் பணிப்பாளர் நிலந்த ஏற்கனவே தம்மிடம் கூறிவிட்டார் என்று அரச தலைவர் சொல்லுவார் என்று முன்னாள் பாதுகாப்புச் செயலர் என்னிடம் தெரிவித்திருக்கின்றார்.
ஸஹ்ரான் ஹாசீமின் சகாக்களால் செய்யப்பட்டதாகச் சொல்லப்படும் காத்தான்குடி உந்துருளி குண்டுவெடிப்புத் தொடர்பாக ஏப்ரல் 18ஆம் திகதி எனக்குப் புலனாய்வுத்துறை கடிதம் மூலம் அறிவித்தது. உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் குறித்து எனக்குக் எந்தத் தகவலும் சொல்லப்படவில்லை. பொதுவான அச்சுறுத்தல் இருப்பதாகவே சொல்லப்பட்டது. உடனடித் தாக்குதல் குறித்து என்னிடம் எதுவும் சொல்லப்படவில்லை. ஆனால், தாக்குதலை தடுக்கத் தவறிவிட்டேன் என்று நான் பலிக்கடா ஆக்கப்பட்டுள்ளேன்.

**உறுதியான தகவல் இல்லை**

2018ஆம் ஆண்டு ஏப்ரலுக்குப் பின்னர் ஸஹ்ரான் குறித்து விசாரணை நடத்தப்பட்டது. 2018ஆம் ஆண்டு ஜூனில் நீதிமன்ற பிடியாணை பெறப்பட்டது. இன்ரபோல் பொலிஸ் உதவி பெறப்பட்டது.
ஏப்ரல் 20 ஆம் திகதி காலை 6.30 - 8.00 மணிக்குள் எனக்குத் தேசிய புலனாய்வுத் துறைப் பணிப்பாளர் நிலந்தவிடம் இருந்து ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. 'நாளை மிகவும் ஆபத்தானது. எதுவும் நடக்கலாம்' என்று என்னிடம் சொல்லப்பட்டது. அதேபோல் ஏப்ரல் 21ஆம் திகதி காலை 6.45 - 7.15 மணிக்குள்ளும் அவரிடம் இருந்து அழைப்பு வந்தது.
ஆனால், இப்படியான தகவல்களை அரச தலைவருக்குச் சொல்லும் நடைமுறை இருக்காதபடியால் என்னால் அப்படிக் கூற முடியாமல் போனது. சனிக்கிழமை (ஏப்ரல் 20) இரவு எனக்குத் தகவல் கிடைத்த பின்னர் உடனடியாக எல்லா பிரதிப் பொலிஸ்மா அதிபர்மார்களுக்கும் அறிவித்தேன். அவசரகாலச் சட்டம் பிறப்பிக்கப்படவில்லை. ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்க எனக்கு அதிகாரமில்லை. அவசரகாலச் சட்டத்தை பிறப்பிக்க என்னால் முடியாது.
நான் பதவியைத் துறந்தால் எனக்குத் தூதுவர் பதவி வழங்கப்படும் என்று அரச தலைவரால் கூறப்பட்டது. ஆனால், நான் அதனை ஏற்கவில்லை. இப்படியான உயர் பதவிகள் எனக்குத் தேவையில்லை. எனது சேவைக் காலத்தில் நான் ஒழுங்கீனங்கள் இன்றி சேவையாற்றியவன்.

**பாதுகாப்புச் சபைக் கூட்டத்துக்கு தடை**

தேசிய பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் இறுதியாக கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் 23 ஆம் திகதியே கலந்துகொண்டேன். அதற்குப் பின்னர், எந்தப் பாதுகாப்புச் சபைக் கூட்டத்திலும் பங்கேற்கவில்லை. பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் பங்கேற்க வேண்டாம் என்று அரச தலைவர் எனக்கு அறிவித்திருந்தார். பாதுகாப்புச் செயலர் ஊடாகவே அவர் இந்த தகவலை எனக்கு அறிவித்திருந்தார். ஏன் அவர் என்னை அழைக்கவில்லை என்று தெரியவில்லை. என் மீது அல்லது பொலிஸ் மீது அவருக்கு நம்பிக்கை இல்லாமல் இருக்கக்கூடும். இதுபற்றி முன்னாள் பாதுகாப்புச் செயலர் கபிலவிடம் கேட்டபோது, மன்னியுங்கள். இது அரச தலைவரின் உத்தரவு' என்று அவர் என்னிடம் தெரிவித்தார். பொலிஸ் திணைக்களம் சட்டம், ஒழுங்கு அமைச்சின் கீழ் இயங்கியபோது தேசிய புலனாய்வுத் துறை பாதுகாப்பு அமைச்சின் கீழ்தான் இயங்கியது. தேசிய புலனாய்வுத்துறைப் பிரிவுகளுக்கு நான் செல்ல முற்பட்டபோது எனக்கு உரிய பிரதிபலிப்பு காட்டப்படவில்லை. அனுமதி மறுக்கப்பட்டது.
பாதுகாப்பு அமைச்சில் நடைபெற்ற புலனாய்வுத்துறை இணைப்புக்குழுக் கூட்டத்தில் ஏப்ரல் 9ஆம் திகதி நான் கலந்துகொண்டிருந்தேன். தாக்குதல் சம்பந்தமான விடயங்கள் அங்கு கூட்டத்தின் ஓர் அங்கமாகவே பேசப்பட்டன. பின்னர் நான் அவை குறித்து உரிய பாதுகாப்புத் தரப்புக்களுக்கு அறிவித்தேன் -என்றார். (ஓ.5,22)

## கூட்டமைப்பு...

கொழும்பு வரும் மோடியை, இந்தியத் தூதரகத்தில் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் கூட்டமைப்பினர் சந்திக்கவுள்ளார். இதன்போதே முக்கிய பேச்சு இடம்பெறவுள்ளது என்று கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் நேற்றிரவு 'உதயன்' பத்திரிகையிடம் தெரிவித்தார்.
இரண்டாவது தடவையாகவும் இந்தியாவின் தலைமை அமைச்சராகப் பதவியேற்றுள்ள நரேந்திர மோடி, தனது மாலைதீவுப் பயணத்தின்போதே இலங்கைக்கும் வருகின்றார்.
நாளைமறுதினம் கொழும்பு வரும் அவர், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச, இரா. சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், ரவூப் ஹக்கீம் - ரிசாத் பதியுதீன் தலைமையிலான முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்குக் கூட்டணியினர், ஆறுமுகன் தொண்டமான் தலைமையிலான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சியினர் உள்ளிட்ட பல தரப்பினருடன் சந்திப்பு நடத்தவுள்ளார்.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும் இந்தியத் தலைமை அமைச்சருக்கும் இடையிலான சந்திப்பு இந்தியத் தூதரகத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் நடைபெறவுள்ளது.
இதன்போது உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவங்கள், தமிழ், முஸ்லிம் மக்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகள், அரசியல் தீர்வு விவகாரம், அரசியல் கைதிகள் விடயம், காணி விடுவிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் ஐ.நா. தீர்மானம் தொடர்பில் முக்கிய பேச்சு இடம்பெறவுள்ளது. (ஓ.5,22)

## அரசியலிலிருந்து...

ஹிங்குராணை நகரில் மணிக்கூட்டு கோபுரத்துக்கு அருகில் இந்த நபர் நேற்று உணவு ஒறுப்புப் போராட்டத்தை ஆரம்பித்தள்ளார். பிக்குமார் அரசியலில் இருந்து விலகும் வரை தனது உணவு ஒறுப்புப் போராட்டத்தை கைவிடப் போவதில்லை எனவும் அவர் கூறியுள்ளார். சோராச்சிலாகே டொன் டிலான் தாரக என்ற இளைஞரே உணவு ஒறுப்புப் போரட்டத்தை மேற்கொண்டுள்ளார். (ஓ.5)

## ஸ்டாலின்...

மு.க.ஸ்டாலினை நேற்றுக் காலை சந்தித்தார். இந்த சந்திப்பில் தி.மு.க சட்டத்தரணி இராதாகிருஷ்ணனும் கலந்து கொண்டார். தேர்தலில் தி.மு.க பெற்ற வெற்றிக்கு வாழ்த்தைத் தெரிவித்த மாவை. இலங்கை அரசியல் நிலமைகள் குறித்து சந்திப்பில் விளக்கியுள்ளார். (ஓ.5)

## முகத்தை...

முகத்தை முழுமையாக மூடி தலைக்கவசம் அணிவோரை கைது செய்து வழக்கு தொடர முடியும் என்று சட்ட மா அதிபர், பதில் பொலிஸ் மா அதிபருக்கு பணிப்புரை விடுத்துள்ளார். (ஓ.5)

# வெளியானது இந்தியா தழுவிய 'நீட்' பரீட்சை முடிவு

- 56 சதவீத தேர்ச்சி மட்டம்
- தமிழகத்தில் 48.57 சதவீத தேர்ச்சி
- ராஜஸ்தான் மாணவர் முதலிடம்
- இதுவரை இரண்டு மாணவிகள் உயிர்மாய்ப்பு

புதுடெல்லி,ஜூன் 7
இந்தியா தழுவிய ரீதியில் வருடா வருடம் நடத்தப்படுகின்ற நீட் பரீட்சை முடிவுகள் நேற்று வெளியாகின. இந்தப் பரீட்சையில் இந்த முறை 56.5 சதவீத மாணவ, மாணவிகள் தேர்ச்சி பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

14 லட்சத்து 10 ஆயிரத்து 754 பேர் இந்தப் பரீட்சைக்கு தோற்றினர். இதில் 4.45 இலட்சம் மாணவிகளும், 3.51 இலட்சம் மாணவர்களும் சித்தி எய்தினர். தேசிய அளவில் ராஜஸ்தான் மாணவர் நலின் கந்தேல்வால் முதலிடம் பெற்றார்.

மாநிலங்களைப் பொறுத்தவரையில் அதிகபட்சமான சித்தி விகிதத்தை டெல்லி பெற்றது. அங்கு பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் 80 சதவீதம் பேர் தேர்ச்சி அடைந்தனர்.

தமிழகத்தில் நீட் தேர்வை நிறுத்துமாறு ஒருபக்கம் போராட்டங்கள் நடந்தாலும், கடந்த ஆண்டைக் காட்டிலும் இந்த ஆண்டு சித்தி வீதம் அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டு 39.56 சதவீத சித்திகள் இருந்த நிலையில், இந்த ஆண்டு 48.57 சதவீத சித்தி பதிவாகியது. தமிழகத்தைச் சேர்ந்த ஸ்ருதி என்ற மாணவி இந்திய அளவில் 57ஆவது இடத்தைப் பிடித்தார்.

இந்தப் பரீட்சை முடிவில் சித்தியடையாத திருப்பூர், பட்டுக்கோட்டையில் 2 மாணவிகள் தவறான முடிவெடுத்து உயிர் மாய்த்துக் கொண்டனர். நீட் பரீட்சையில் தோல்வி அடைந்ததாலேயே அவர்கள் இந்தத் தவறான முடிவை எடுத்ததாக அவர்களின் பெற்றோர் வேதனை வெளியிட்டனர்.

# 'நீட்' பரீட்சையால் உயிர்மாய்ப்புகள் இந்தப் பரீட்சையை நிறுத்தவேண்டும்

## தமிழ்நாடு ஆசிரியர் சங்கம் தெரிவிப்பு

சென்னை,ஜூன் 7
நீட் பரீட்சையால் உயிரிழப்புகள் தொடர்வதால் அதை நிறுத்திவிடுவதே இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வாக அமையும் என்று தமிழ்நாடு ஆசிரியர் சங்கம் தெரிவித்தது. இந்த வருடத்துக்கான நீட் பரீட்சை முடிவுகள் வெளியாகியிருந்த நிலையில் தேனி மாவட்டத்தைச் சேர்ந்த ரிதுஸ்ரீ மற்றும் பட்டுக்கோட்டையைச் சேர்ந்த வைஷ்யா ஆகிய இருவரும் போதிய புள்ளிகள் பெறாததால் தவறான முடிவெடுத்துத் தமது உயிரை மாய்த்துக் கொண்டனர்.

இந்த நிலையிலேயே தமிழக ஆசிரியர் சங்கத் தலைவர் பி.கே.இளமாறன் நேற்று விடுத்த அறிக்கையில் மேற்கண்டவாறு குறித்த பரீட்சையை நிறுத்தவேண்டும் என்று குறிப்பிட்டார்.

# ஓரினச் சேர்க்கையாளராக இருந்தேன் பிலிப்பைன்ஸ் அதிபர் சர்ச்சைப் பேச்சு

டோக்கியோ,ஜூன் 7
தான் ஓரினச் சேர்க்கையாளராக இருந்து பின்னர் அதிலிருந்த விடுபட்டதாகப் பிலிப்பைன்ஸ் அதிபர் ரோட்ரிகோ டுடர்தோ தெரிவித்தார். இது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது. அண்மையில் ஜப்பானுக்குப் பயணம் செய்திருந்தபோதே அவர் ஜப்பானில் வைத்து இவ்வாறு தெரிவித்தார்.



ஜப்பானில் வாழும் பிலிப்பைன்ஸ் மக்களைச் சந்தித்து அவர்கள் மத்தியில் உரையாற்றும்போது பிலிப்பைன்சின் முக்கிய எதிர்க்கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் அண்டோனியோ டிரில்லேன்ஸ் என்பவரை விமர்சித்துப் பேசினார். அந்தப் பேச்சுக்களின் நடுவில், "நான் உங்களிடம் ஒன்று கேட்கிறேன். அண்டோனியோ டிரில்லேன்ஸ் குறித்து என்ன நினைக்கிறீர்கள். அவர் ஓர் ஓரினச் சேர்க்கையாளர். சொல்லப்போனால் நானும் ஓரினச் சேர்க்கையாளராக இருந்தேன். ஆனால் நான் என்னைக் குணப்படுத்திக் கொண்டேன். இப்போது நான் ஓரினச் சேர்க்கையாளராக இல்லை" என்று தெரிவித்தார் டுடர்தோ.

டுடர்தோ தனது அரசியல் எதிரியை விமர்சிப்பதற்காக இப்படித் தெரிவித்திருந்தாலும், ஓரினச் சேர்க்கையாளராக இருப்பது ஒரு நோய் என்று பொருள்படும் வகையில் பேசி இருப்பது சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது.

ரோட்ரிகோ டுடர்தோவின் இந்தப் பேச்சு தங்களைக் காயப்படுத்தியதோடு கோபம் அடையவும் செய்திருப்பதாகக் கூறி ஓரினச் சேர்க்கையாளர்கள் பலர் இதற்குக் கண்டனம் தெரிவித்து வருகிறார்கள்.



# சீன, இந்திய சனத்தொகை அதிகரிப்பே சூழல் மாசடைவுக்கு முக்கிய காரணம்

லண்டன்,ஜூன் 7
சீனா, இந்தியா ஆகிய நாடுகளின் அதிகரித்த சனத்தொகையே உலகின் நீர் மற்றும் காற்றின் தரம் குறைவதற்கும், சூழல் மாசுபாட்டுக்கும் முக்கிய காரணம் என்று அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்தார்.

தனது பிரிட்டன் பயணத்தின்போது இங்கிலாந்து இளவரசர் சார்லஸ் உடன் சுற்றுச்சூழல் குறித்து நடத்திய பேச்சுக்குப்பிறகு அளித்த செவ்வி ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த நூற்றாண்டில் வளர்ந்த நாடுகள் வெளியேற்றிய கரியமில மற்றும் பச்சை வீட்டு விளைவு வாயுக்களே பருவநிலை மாற்றத்துக்கு முக்கிய காரணம் என்று சுற்றுச் சூழல் அமைப்புகள் கூறி வருகின்ற நிலையில் ட்ரம்ப் இவ்வாறு தெரிவித்தார்.

பருவநிலை மாற்றம் உண்மையல்ல என்று ஆட்சிக்கு வந்ததில் இருந்து கூறிவரும் ட்ரம்ப், சூழல் மாசடைவைத் தடுப்பதற்கான பாரிஸ் பருவநிலை ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்கா விலகுவதாக அறிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# சூடான் மக்களின் போராட்ட விவகாரம் 46 பேர் கொல்லப்பட்டதை ஏற்கிறது அரசு

கார்த்தூம், ஜூன் 7
சூடான் நாட்டில் போராட்டக்காரர்கள் மீது இராணுவம் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் சாவடைந்தவர்களின் எண்ணிக்கை 60 ஆக உயர்ந்ததாகப் பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்த நிலையில், அந்த எண்ணிக்கை தவறானது என மறுத்த சூடான் அதிகாரி ஒருவர் குறித்த வன்முறையின் போது 46 பேரே துப்பாக்கிச் சூட்டில் சாவடைந்தனர் என்றார்.

சூடானின் தலைநகர் கார்த்தூமில் உள்ள இராணுவத் தலைமையகத்துக்கு முன்பாக நடந்த போராட்டத்தின்போதே இவ்வாறு போராட்டக்காரர்கள் மீது சூடு நடத்தப்பட்டது. இந்தத் துப்பாக்கிச் சூட்டின் எதிரொலியாகப் போராட்டக்காரர்களை ஒடுக்குவதைச் சூடான் இராணுவம் நிறுத்த வேண்டும் என அமெரிக்கா மற்றும் பிரிட்டன் ஆகிய நாடுகள் வலியுறுத்தின. ஐக்கிய நாடுகள் சபையும் சூடான் இராணுவத்தினரின் இந்தச் செயலுக்குக் கண்டனம் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

**பின்னணி**
சூடானின் அதிபருக்கு எதிரான போராட்டம் உச்சமடைந்த நிலையில், இராணுவப் புரட்சி காரணமாக ஆட்சி கவிழ்க்கப்பட்டது. அதிபர் பதவி நீக்கம் செய்யப்பட்டார். புதிய அதிபராக அந்த நாட்டு இராணுவத் தளபதி பதவியேற்றார். மக்களின் எதிர்ப்புக் காரணமாக ஓரிரு நாள்களில் அவர் தனது பதவியைத் துறந்தார். பின்னர் மக்களாட்சியை ஏற்படுத்த வலியுறுத்தினர் போராட்டக்காரர்கள்.

இது தொடர்பாகப் போராட்டக் குழுவினருக்கும் இராணுவத்துக்கும் இடையே நடந்த பேச்சுக்களில் தீர்வு எட்டப்படவில்லை. அந்த நாட்டு மக்கள் தொடர்ந்து போராட்டங்களை நடத்துகின்றனர்.





# சஞ்சய் தத்தையை விடுவித்தது போல பேரறிவாளனையும் விடுவியுங்கள்!

## அற்புதம் அம்மாள் கோரிக்கை

தமிழகம்,ஜூன் 7
இந்தியாவின் மும்பை நகரில் 1993ஆம் ஆண்டில் நடந்த குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பான வழக்கில் சிறைத் தண்டனை பெற்ற நடிகர் சஞ்சை தத்தை முன்கூட்டி விடுதலை செய்யப்பட்ட விதிமுறையைப் பின்பற்றி ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள்தண்டனை அனுபவித்துவரும் பேரறிவாளனை விடுதலை செய்ய வேண்டும் என்று அவரது தாயார் அற்புதம் அம்மாள் கோரினார்.



சஞ்சய் தத்தை முன்கூட்டி விடுதலை செய்வதற்கு இந்திய அரசு இசைவு தெரிவிக்காதபோதும், மாநில அரசு முன்வந்து முன்கூட்டியே அவரை விடுதலைசெய்தது எனப் பேரறிவாளனின் தாயார் தெரிவித்தார்.

அந்தத் தொடர் குண்டு வெடிப்பில் 250க்கும் மேற்பட்டவர்கள் சாவடைந்தனர். சட்டவிரோதமாக ஆயுதம் வைத்திருந்ததாகக் குற்றம்சாட்டப்பட்ட சஞ்சய் தத்துக்கு ஐந்து ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.


ஆனால் அவர் தண்டனைக் காலத்துக்கு முன்னதாக, விடுதலை செய்யப்பட்டார்.

சஞ்சய் தத் விவகாரத்தில் பின்பற்றப்பட்ட விதிமுறைகளை ஏன் இந்த ஏழு பேர் விடுதலையில் பின்பற்றக் கூடாது என்று மேலும் கேள்வி எழுப்பினார் அற்புதம் அம்மாள்.

ராஜீவ்காந்தி கொலைவழக்கில் ஆயுள் தண்டனை பெற்றுச் சிறையில் உள்ள ஏழு பேரை விடுதலை செய்யவேண்டும் என்று தமிழக ஆளுநருக்கு அனுப்பப்பட்டுள்ள பரிந்துரை ஒன்பது மாதங்கள் ஆகின்ற நிலையில் இதுவரையில் எந்த முடிவும் வெளிப்படுத்தப்படாமல் இருப்பது குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவை அச்சுறுத்துகிறது 'நிபா' 314 பேருக்கு அவசர சிகிச்சை





திருவனந்தபுரம்,ஜூன் 7
இந்தியாவின் கேரளா மாநிலத்தில் நிபா வைரஸ் பரவி வருகிறது.

அங்கு அந்த வைரஸால் பாதிக்கப்பட்ட 7பேர் தனித்து வைக்கப்பட்டுச் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றனர். இதற்கு மத்தியில் இந்த வைரஸின் தாக்கத்துக்கு உட்பட்டவர்கள் என்கிற சந்தேகத்தில் அங்கு கடும் காய்ச்சலுக்கு உள்ளாகிய 314 பேருக்குச் சிகிச்சையளிக்கப்பட்டு வருகிறது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது:


கேரளாவில் நிபா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ள சந்தேகத்தின் பேரில் கல்லூரி மாணவர் ஒருவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அவரது குருதி மாதிரியை ஆய்வு செய்ததில் அவருக்கு நிபா வைரஸ் பாதிப்பு இருப்பது உறுதி செய்யப்பட்டது. அந்த மாணவருடன் சேர்ந்து தங்கிஇருந்த 5பேருக்கும், சிகிச்சை அளித்த செவிலியர் உட்படச் சிலருக்குக் காய்ச்சல் தொடர்ந்து இருந்ததால், அவர்களும் தனித்தனியாகத் தங்கவைக்கப்பட்டுச் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. நிபா வைரஸ் பாதிப்பு ஏற்பட்டிருக்கலாம் எனச்சந்தேகம்எழுந்த, காய்ச்சலுக்குள்ளான 314பேரினுடைய குருதி மாதிரிகள் பெறப்பட்டுப் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டுள்ளன. அவர்களும்தனித்தனியாகத்தங்க வைக்கப்பட்டுள்ளனர். நிபா வைரஸ் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகச் சந்தேகத்தின் பேரில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு மேலதிக சிகிச்சை அளிப்பதற்காகச் சிறப்பு மருத்துவக்குழுக்கள் கொச்சி நகருக்குஅனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

**பின்னணி**

கடந்தஆண்டுகேரளாவின்கோழிக்கோடுமாவட்டம், சூபிக்கடா கிராமத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பேர் நிபா வைரஸ் தாக்கிச் சாவடைந்தனர். அவர்களுக்குச் சிகிச்சை அளித்த செவிலியர் லினியும் சாவடைந்தார்.

அதன்பின் கேரள அரசின் கடும் நடவடிக்கை, மருத்துவர்களின் சிகிச்சை ஆகியவற்றால் நிபா வைரஸ் கட்டுக்குள் வந்தது.

கடந்த ஆண்டு நிபா வைரஸ் தாக்குதலால் கோழிக்கோட்டில்14பேரும், மலப்புரத்தில் 3 பேரும் சாவடைந்தனர். 'டெரோபஸ்' குடும்பத்தைச் சேர்ந்த பழந்தின்னி வெளவால்களின் மூலம் நிபா வைரஸ் பரவுகிறது. மலேசிய நாட்டில் இது முதன் முதலில் கண்டறியப்பட்டு அங்கிருந்து இந்தியாவுக்குப் பரவியிருக்கலாம் என்று கருதப்படுகிறது.



## நிபா வைரஸ் பாதிப்பு தமிழகத்தில் இல்லை


சென்னை,ஜூன் 7
தமிழகத்தில் நிபா வைரஸ் பாதிப்பு இல்லை. அத்தோடு அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகள் கடுமையாகக் கண்காணிக்கப்பட்டு வருகின்றன என்று தெரிவித்தார் சுகா தாரத் துறை அமைச்சர் சி. விஜயபாஸ்கர். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

நிபா வைரஸ் என்பது வெளவால் கடித்த பழங்கள் மூலமாக மனிதனுக்குப் பரவுகிறது.

எனவே, மக்கள் பழங்களை நன்றாகக் கழுவிய பிறகு சுத்தப்படுத்திச் சாப்பிட வேண்டும். கேரளாவில் இந்த வைரஸ் பரவி வருவதால் தமிழகத்தில் சுகாதாரத்துறை, கால்நடைத் துறை உள்ளிட்ட துறைகளுக்கு எச்சரிக்கை விடுத்துச்சோதனைப்பணிகள்அதிகப்படுத்தப் பட்டுள்ளன.

தமிழகத்தில் நிபா வைரஸ் பாதிப்பு இல்லை. முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் பலவற்றை எடுத்து வருகிறோம் என்றார்

## 'நிபா' வைரஸ் விவகாரம் பொய்ச்செய்தி பரப்பியதாக இருவர் கைது



திருவானந்தபுரம்,ஜூன் 7
கேரளாவில் 'நிபா' வைரஸ் என்பது மருந்து உற்பத்தி நிறுவனங்கள் பரப்பிவரும் மிகப் பெரிய வதந்தி, தங்கள் மருந்துகளின் விற்பனைக்காக நிபா வைரஸ் தாக்கிவருவதாகச் சொல்கின்றனர் என்று கூறிய இரண்டு நபர்களைக் கேரளப் பொலிஸார் கைது செய்தனர்.

நெருக்கடியான காலகட்டத்தில் இதுபோன்ற பொய்ச்செய்திகளைப் பரப்பியது பொதுநலனுக்குக் குந்தகம் விளைவிப்பதாக இருப்பதால் கைது செய்திருக்கிறோம் என்று இந்தக் கைது குறித்துக் கேரளாப் பொலிஸார் தெரிவித்தனர்.

மருந்து நிறுவனங்கள் நிபா வைரஸ் வதந்தியைத் தங்கள் மருந்து விற்பனையை அதிகரிப்பதற்காகச் செய்கின்றன என்ற தங்களது கருத்துக்கு அரசும் உடந்தைதான் என்பது போல் கைது செய்யப்பட்டவர்கள் தெரிவிப்பதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## இன்றைய நாள்

**மேடம்:** உற்சாக மனதுடன் செயல்படுவீர்கள். திட்டமிட்ட காரியம் இனிதாக நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் போட்டி குறையும். நிலுவைப் பணம் வசூலாகும். நண்பரிடம் கருத்துக்களை பகிர்ந்து கொள்வீர்கள்.

**இடபம்:** மனதில் இனம் புரியாத சஞ்சலம் ஏற்படும். வாழ்க்கை அனுபவங்களை எண்ணிப் பார்த்து, அதன் மூலம் நம்பிக்கை ஏற்படும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பெற சீர்திருத்தம் அவசியம்.

**மிதுனம்:** நண்பர் மூலம் மகிழ்ச்சிகரமான தகவல் வரும். தொழில் வியாபார வளர்ச்சிக்கு கூடுதல் மூலதனத்தை பயன்படுத்துவீர்கள். சமூகத்தில் உங்கள் மீதான நல்ல மதிப்பீடு ஏற்படும்.

**கடகம்:** சிலர் சொல்லும் அறிவுரை சங்கடத்தை ஏற்படுத்தும். தொழில், வியாபார வளர்ச்சிப் பணியில் தாமதம் ஏற்படும். பணவரவை விட செலவு அதிகரிக்கும். தாயின் அன்பு நிறைந்த வார்த்தை நம்பிக்கைத் தரும்.

**சிம்மம்:** புதிய விஷயங்களை அறிவதில் ஆர்வம் கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் கூடுதல் வளர்ச்சி ஏற்படும். எதிர்பார்த்த பண வரவு கிடைக்கும்.

**கன்னி:** உங்கள் செயலில் வசீகர மாற்றம் ஏற்படும். .நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற பணிபுரிவீர்கள். உபரி பண வருமானம் உண்டு.

**துலாம்:** உறவினர் எதிர்பார்ப்புடன் நடந்து கொள்வர். அவர்களிடம் விரக்தி மனப்பாங்குடன் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். ஒவ்வாத உணவு உண்பதை தவிர்க்கவும்.

**விருச்சிகம்:** எண்ணிய காரியம் நிறைவேற கால தாமதம் ஆகலாம். தகுந்த திட்டமிடுதல் வெற்றியை கொடுக்கும். .சக தொழில், வியாபாரம் சார்ந்தவர்களிடம் சச்சரவு கூடாது.

**தனுசு:** மனதில் உற்சாகமும், செயல்களில் சுறுசுறுப்பும் ஏற்படும். தொழிலில் உற்பத்தி, விற்பனையில் புதிய வளர்ச்சி ஏற்பட்டு, பணவரவும், நன்மையும் அதிகரிக்கும்.

**மகரம்:** பேச்சில் சமயோசிதம் நிறைந்திருக்கும். நண்பர், உறவினர் அதிக அன்பு பாராட்டுவர். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிப் பணி நிறைவேறும்.

**கும்பம்:** நிலுவைப் பணியை நிறைவேற்றுவதால் பதற்றம் குறையும். பணவரவு கிடைப்பதில் தாமதம் ஏற்படலாம்.

**மீனம்:** தொடர்பில்லாத பணி உருவாகி குறுக்கீடு தரும். தொழிலில் கூடுதல் உழைப்பால் மட்டுமே, திட்டமிட்ட இலக்கு நிறைவேறும். அளவான பணவரவு கிடைக்கும்.



# கிண்ணத்தைச் சுவீகரித்தது யாழ். மத்திய கல்லூரி அணி

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் 125 ஆவது ஆண்டு நிறைவையும், கடினப் பந்து ஆரம்பிக்கப்பட்டு 75ஆவது ஆண்டு நிறைவையும் முன்னிட்டு அழைக்கப்பட்ட பாடசாலைகளுக்கு இடையிலான 20 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கடினப் பந்து துடுப்பாட்டத் தொடரில் யாழ்ப்பாணம் மத்திய கல்லு்ரி அணி கிண்ணம் வென்றது.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில், நேற்று வியாழக்கிழமை இடம் பெற்ற இறுதியாட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரி அணியை எதிர்த்து சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி மோதியது.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற யாழ்.மத்திய கல்லூரி அணி முதலில் துடுப்பாட்டத்தைத் தெரிவு செய்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்.மத்திய கல்லூரி அணி நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப்பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து 154 ஓட்டங்களைப் பெற்றது. அணி சார்பாக நிருசன் 34 ஓட்டங்களையும், ஜெயதர்சன் 29 ஓட்டங்களையும், இந்துயன் 27 ஓட்டங்களையும், சஞ்சயன் 26 ஓட்டங்களையும்அதிகபட்சமாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் வினோசன், விருசன் ஆகியோர் தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி 15.5 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 112 ஓட்டங்களை மாத்திரமே பெற்று வெற்றியைத் தவற விட்டது.

அணி சார்பில் டினோசன் 61 ஓட்டங்களையும், மதுஷன் 15 ஓட்டங்களையும், பிரணவன் 14 ஓட்டடங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் நிருசன் 3 இலக்குகளையும், விதுஷன் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

ஆட்ட நாயகன், சிறந்த பந்து வீச்சாளராக யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி வீரர் நிருசன் தெரிவு செய்யப்பட்டார். சிறந்த களதடுப்பாளராக யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி வீரர் வியாஸ் காந்த் தெரிவானார். சிறந்த துடுப்பாட்ட வீரராக யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி வீரர் டினோசன் தெரிவானார்.

(23)

மாகாண கரப்பந்தில்

## உடுப்பிட்டி மகளிர் கல்லூரி அணி சம்பியன்

கரணவாய், ஜூன் 7

மாகாண மட்ட கடற்கரை கரப்பந்தில் மாகாண சம்பியனாகியது உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

மாகாண கடற்கரை கரப்பந்தாட்டத்தின் இறுதியாட்டம் நேற்று வல்வை உதயசூரியன் உல்லாசக் கடற் கரையில் இடம்பெற்றது.

இதில் 20 வயதுப் பெண்களுக்கான இறுதியாட்டத்தில் உடுப்பிட்டி மகளிர் கல்லூரியும், வவுனியா ஸ்ரீசுமணா வித்தியாலயமும் பலப்பரீட்சைநடத்தின. மூன்றுசெற்களைக் கொண்ட இந்தச் சுற்றுப்போட்டியில்முதல்செற்றை வவுனியா ஸ்ரீசுமணா வித்தியாலயம் 21:19 என்ற புள்ளிகள் அடிப்டையில் வெற்றி பெற்றது. தொடர்ந்து தம்மை சுதாகரித்துக் கொண்ட உடுப்பிட்டி மகளிர் கல்லூரி அடுத்த இரண்டு செற்களையும் 22:14, 15:8 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியனாகியது. இதில்மூன்றாமிடத்தை மடு தச்சிணார்மருதமடு மகா வித்தியாலயம் பெற்றது. (108)




## உடுப்பிட்டி அ.மி.கல்லூரி கிண்ணத்தை வென்றது


கரணவாய், ஜூன்7

வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான ஆண்களுக்கான கடற்கரை கரப்பந்தாட்டத்தில் வவுனியா சின்னடம்பன் பாரதி வித்தியாலயத்தை வீழ்த்தி சம்பியனாகியது உடுப்பிட்டி அ.மி.கல்லூரி.

வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான 20 வயது ஆண்களுக்கான கடற்கரை கரப்பந்தாட்டத்தின் இறுதியாட்டம் நேற்று வல்வை உதயசூரியன் உல்லாசக்கடற்கரையில் இடம்பெற்றது.

இறுதியாட்டத்தில் உடுப்பிட்டி அ.மி கல்லூரியும் வவுனியா சின்னடம்பன் மகா வித்தியாலயமும் மோதின. மூன்று செற்களைக்கொண்ட இந்தப் போட்டியில் உடுப்பிட்டி .அ.மி கல்லூரி 21:15, 21:15 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று 2:0 என்ற நேர்செற்றில் கிண்ணத்தை சுவீகரித்தது. இதில் மூன்றாமிடத்தை தொண்டைமனாறு வீரகத்திப் பிள்ளைமகாவித்தியாலயம் பெற்றது.

(108)




## தெல்லிப்பழை பி.செ, கரவெட்டி பி. செ இறுதிப் போட்டியில் பலப்பரீட்சை

யாழ்ப்பாணம், ஜூன் 7

யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களுக்கிடையிலான ஆண்களுக்கான கால்பந்தாட்டத் தொடரில் தெல்லிப்பழை பிரதேச செயலக அணி, கரவெட்டி பிரதேச செயலக அணி இறுதியாட்டத்தக்குத் தகுதி பெற்றது.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற அரையிறுதியாட்டத்தில் தெல்லிப்பழை பிரதேச செலயக அணிக்கும், கோப்பாய் பிரதேச செயலக அணிக்கும் இடையிலான முதலாவது அரையிறுதியாட்டத்தில் தெல்லிப்பழை பிரதேச செயலக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுஇறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் கரவெட்டி பிரதேச செயலக அணிக்கும் சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணிக்கும் இடையிலான போட்டியில் நிர்ண யிக்கப்பட்ட நிமிடங்களில் கோல்கள் பதிவு செய்யாதவிடத்து ஆட்டம்சமநிலையில்முடிவடைந்தது. வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக சமனிலை தகர்ப்பு உதை வழங்கப்பட்டது. இதில் கரவெட்டி பிரதேச செயலக அணி 3:1என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றது.

(23)







தூய ஒளி வெற்றிக் கிண்ணத்தில்

## சென். அன்ரனிஸ், அன்னை வி.க.வெற்றி

யாழ்ப்பாணம், ஜூன் 7

குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழகத்தின் அனுசரனையுடன் சூசையப்பர் விளையாட்டுக்கழகம் நடத்தும் தூய ஒளி வெற்றிக்கிண்ணத்துக்கான கால் பந்தாட்டத் தொடரில் பாசையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.

குருநக்ர்பாடும்மீன் விளையாட்டுக்கழக மைதானத்தில் நேற்று முன்தினம் புதன் கிழமை மாலை 3.30 மணிக்கு இடம் பெற்ற ஆட்டத்தில் பாசையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கலைவாணி விளையாட்டுக்கழக அணி மோதியது. இதில் 5:0 என்ற கோல் கணக்கில் பாசையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.

+ + +

யாழ்ப்பாணம் ஜூன் 7

மற்றுமொரு ஆட்டத்திம் 4.30 மணிக்கு இடம்பெற்றது. இதில் பொற்பதி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அன்னை விளையாட்டுக் கழக அணி மோதியது.

**இதில் அன்னை விளையாட்டுக் கழக அணி 8:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.** (23)

## ஒலிம்பிக்கை வி.கவை வீழ்த்தியது பாடும்மீன்

யாழ்ப்பாணம், ஜூன் 7

குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழகத்தின் அனுசரனையுடன் சூசையப்பர் விளையாட்டுக்கழகம் நடத்தும் தூயஒளி வெற்றிக்கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் குருநகர்பாடும்மீன் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.

குருநகர்பாடும்மீன் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை 3.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் குருநகர்பாடும்மீன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஒலிம்பிக் விளையாட்டுக்கழக அணி மோதியது. இதில் 3:0 என்ற கோல் **கணக்கில் குருநகர்பாடும் மீன் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.** (23)

## 'பிபா'வின் தலைவராக மீண்டும் இன்பண்டினோ

உலக கால்பந்து சம்மேளனத்தின் தலைவராக இன்பண்டினோ இரண்டாவது முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

'பிபா' எனப்படும் உலக கால்பந்து சம்மேளன அமைப்புக்கான தலைவர் தலைவர் தேர்தல் 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறுகிறது. 2019-2023 ஆம் ஆண்டுக்கான உலக கால்பந்து சம்மேளனத்தின் தலைவர் தேர்தல் நடைபெற்றது. இந்தத் தேர்தலில் 49 வயது நிரம்பிய தற்போதைய தலைவர் இன்ஃபண்டினோ மீண்டும் போட்டியிட்டார்.

அவரை எதிர்த்து போட்டியிட யாரும் விருப்பம் தெரிவிக்காததால் அவர் தனி பெரும்பான்மை வாக்குகளுடன் இரண்டாவது முறையாக வெற்றி பெற்று உலக கால்பந்து சம்மேளனத்தின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.




## ஸ்டெய்னின் விலகல் டூ பிளசிஸ் கவலை

நடப்பு உலகக் கிண்ணப் போட்டியில் இந்தியா - தென்னாபிரிக்கா அணிகள் நேற்றைய போட்டியில் ஆடின. இதில் தென்னாபிரிக்கா அணியின் முன்னணி வேகப் பந்து வீச்சாளர் டேல் ஸ்டெய்ன் காயம் காரணமாக போட்டியில் இருந்து விலகியுள்ளார். அவரது விலகல் தென்னாபிரிக்கா அணிக்கு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

டேல் ஸ்டெய்ன் 2019இல் ஐ.பி.எல். போட்டியில் பெங்களூர் அணிக்காக விளையாடும் போது காயம் ஏற்பட்டது. அதிலிருந்து மீண்ட அவருக்கு திரும்பவும் காயம் ஏற்பட நேரிட்டது. இதனையடுத்து உலகக் கிண்ணத்தில் அவர் ஆடுவது சந்தேகமாக இருந்த நிலையில் அவர் தற்போது விலகவும் நேரிட்டுள்ளது.

இது குறித்து அணித் தலைவர் டூ பிளசிஸ் தெரிவித்ததாவது;

துரதிர்ஷ்டவசமாக அவரது காயம் ஐ.பி.எல். போட்டித் தொடரில் அவர் விளையாடிய அந்த 2 போட்டிகளால் ஏற்பட்டது. ஐ.பி.எல். தொடரில் அவரைத் தெரிவு செய்யாமலிருந்து அவர் அங்கு போகாமல் இருந்திருந்தால் இப்போது இங்கு இருந்திருப்பார். இந்த உலகக் கிண்ணப் போட்டியில் ஆட உடற்தகுதி பெற அவர் படாதபாடுபட்டார். தொடருக்கு முன்பாக நம்ப முடியாத அளவுக்கு நன்றாக பந்து வீசினார். இந்த உலகக் கிண்ணத்தில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்று அவர் முனைப்புடன் இருந்தார்- என்றார்.

## இலங்கை - பாக். போட்டி இன்று

நடப்பு உலகக் கிண்ணத் தொடரில் இன்று இடம்பெறும் போட்டியில் இலங்கை - பாகிஸ்தான் அணிகள் மோதுகின்றன. இரு அணிகளும் தலா இரண்டு போட்டிகளில் விளையாடி ஒவ்வோர் போட்டிகளில் வெற்றி பெற்றுள்ளன. இதில் பாகிஸ்தான் அணி கடந்த இங்கிலாந்துக்கு எதிரான ஆட்டத்தில் இங்கிலாந்து அணியை அதன் சொந்த மைதானத்தில் வைத்து வீழ்த்திய வெற்றிக் களிப்புடன் களமிறங்குகின்றது. பாகிஸ்தான் அணியைப் பொறுத்த வரைக்கும் துடுப்பாட்டம், பந்து வீச்சு என்பவற்றில் சமபலம் உள்ளதாகவே காணப்படுகின்றது. இலங்கை அணியைப் பொறுத்த வரையில் அந்த அணி கடந்த போட்டியில் ஆப்கான் அணியை வீழ்த்திய குதூகலத்துடன் களமிறங்குகின்றது. துடுப்பாட்டத்தில் இலங்கை அணி வீரர்கள் நிதானத்தைக் கடைப்பிடிப்பார்கள் எனில் இலங்கை அணி இந்தப் போட்டியில் நிச்சயம் வெற்றி பெறும். ஒவ்வொரு போட்டியிலும் ஒரு துடுப்பாட்ட வீரரே பொறுப்புடன் ஆடுகின்றார். இரண்டு, மூன்று துடுப்பாட்ட வீரர்கள் ஜொலிப்பார்கள் எனில் இலங்கை அணியின் பக்கமே வெற்றி. உலகக் கிண்ணத் தொடர்களை எடுத்துக் கொண்டால் இலங்கை அணி 3 தடவைகள் இறுதிக்குத் தகுதி பெற்று ஒரு தடவை கிண்ணத்தை சுவீகரித்துள்ளது. பாகிஸ்தான் அணி இரண்டு தடவைகள் இறுதிக்குத் தகுதி பெற்று ஒரு தடவை கிண்ணத்தை வென்றுள்ளது. இரண்டு ஆசிய அணிகள் நீண்ட இடைவெளிகளின் பின்னர் மோதும் போட்டி ரசிகர்களுக்க விருந்தாக அமையும்.

# தீவுகளின் வெற்றியை பறித்தார் மிச்சல் ஸ்ராக்

நடப்பு உலகக் கிண்ணத் தொடரில் கடந்த போட்டியின் தோல்விக்கு ஆஸ்திரேலியா அணி மருந்தைப் போட்டது போல் 15 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றது. மேற்கிந்தியத்தீவுகள் அணி ஸ்ராக்கின் பந்துவீச்சுக்கு முகம் கொடுக்க முடியாது திணறி வெற்றியைத் தவறவிட்டது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்தியத்தீவுகள் அணி முதலில் ஆஸ்திரேலியா அணியைத் துடுப்பெடுத்தாடுமாறு பணித்தது. ஆஸ்திரேலியா அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களுக்கு மேற்கிந்தியப் பந்து வீச்சாளர்கள் அதிர்ச்சி கொடுத்தனர். அடிபட்ட புலியாகக் களமிறங்கிய ஆஸ்திரேலியா அணி வெற்றி பெறும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஏனெனில் கடந்த போட்டியில் பாகிஸ்தான் அணியிடம் தோல்வியைச் சந்தித்தது. அணியின் பின் வரிசை வீரர் கட்லர் நைல் அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்தி அணியை நிலை நிறுத்தினார். அவர் 60 பந்துகளில் 92 ஓட்டங்களைப் பெற்றார். அவருக்கு ஆதரவாக சிமித், க்றேயும் தங்களது பங்களிப்புக்களை வழங்கி அணியின் ஓட்டங்களை அதிகரித்தனர். அணி 49 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்தது 288 ஓட்டங்களைப் பெற்றது.

மேற்கிந்தியதீவுகளின் பந்து வீச்சைப் பொறுத்த வரையில் பந்து வீச்சாளர்கள் தங்களின் பொறுப்புணர்ந்து பந்து வீசினர். அதில் பிரித்வைட் அதிகபட்சமாக 3 இலக்குகளைக் கைப்பற்றினார்.

மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு இந்த ஓட்ட எண்ணிக்கை இலகுவான ஓட்ட எண்ணிக்கையே அவர்கள் இலகுவில் வெற்றி பெறுவார்கள் என்று எதிர் பார்க்கப்பட்டது. ஆனால் நடந்து வேறு விதமாக இருந்தது. மேற்கிந்தியத்தீவுகளின் ஆரம்ப இணை அணிக்கு சிறந்த அத்திவாரத்தை அமைக்கத் தவறியிருந்தது. எனினும் ஏனைய வீரர்கள் அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தி வெற்றியை நோக்கி நகர்த்தினர். எல்லோராலும் எதிர்பார்க்கப்பட்ட ரசல் வந்த வேகத்தில் அதிரடி காட்டி பின்னர் ஏமாற்றமளித்தார். இறுதி வரை மேற்கிந்தியத்தீவுகளின் பக்கமே வெற்றி இருந்தது. ஆனால் ஸ்ராக்கின் பந்து வீச்சில் ஹோல்டர், பிரித்வைட் ஆட்டமிழக்க அணியின் வெற்றி பறிக்கப்பட்டது. ஸ்ராக் மேற்கிந்தியத்தீவுகளின் வெற்றியை பறித்தார் என்று கூறலாம். அவர் அவர்களின் வெற்றியைப் பறித்தோடு புதிய இந்த உலகக் கிண்ணத்தில் புதிய சாதனையயும் நிலை நாட்டினார். ஒரு போட்டியில் அதிகபட்சமாக 5 இலக்குகளைக் கைப்பற்றிய பெருமையையும் பெற்றார்.

அணி நிர்ணயிக்கப்பட்ட 50 பந்துப்பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 273 ஓட்டங்களை மாத்திரமே பெற்று 15 ஓட்டங்களால் வெற்றியைத் தவறவிட்டது.




## போராடி வென்றது நியூசிலாந்து அணி

நடப்பு உலகக் கிண்ணத் தொடரில் 9ஆவது போட்டியில் நியூசிலாந்து - பங்களாதேஷ் அணிகள் மோதின. இதில் நியூசிலாந்து அணி கடும் போராட்டத்தின் மத்தியில் 2 இலக்குகளால் வெற்றி பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நியூசிலாந்து அணி முதலில் பங்களாதேஷ் அணியைத் துடுப்பெடுத்தாடுமாறு பணித்தது. பங்களாதேஷ் அணி வீரர்கள் ஒவ்வொருவரும் தமது பொறுப்புணர்ந்து ஆடியிருந்தனர். ஆனால் இன்னும் சிறிது நேரம் களத்தில் நின்று தாக்குப்பிடித்திருந்தால் வெற்றி அவர்களினதே. ஒரு சீரான இடைவெளியில்தான் இலக்குகள் இழக்கப்பட்டுக் கொண்டிருந்தன. இதில் சகிப் அல் ஹசன் சிறப்பான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தியிருந்தார். நியூசிலாந்தின் பந்து வீச்சாளர்களில் ஹென்றி 4 இலக்குகளைக் கைப்பற்றி வெற்றிக்கு வழி வகுத்தார். அணி 49.2 பந்துப்பரிமாற்றங்களில் 244 ஓட்டங்களைப் பெற்று சகல இலக்குகளையும் இழந்தது.



பதிலுக்குக் களமிறங்கிய நியூசிலாந்து அணி வீரர்கள் நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்தியன் ஊடாக வெற்றியை அடைந்தனர். எனினும் பங்களாதேஷுடன் கடும் போராட்டத்தின் மத்தியில்தான் அந்த வெற்றியும் அவர்களுக்குக் கிடைத்தது. ரெயிலர் தனது அதிரடியான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தி 82 ஓட்டங்களைக் குவித்தார். அணித் தலைவர் வில்லியம்சன் 40 ஓட்டங்களைப் பெற்ற போதிலும் அதனை பெற்றுக் கொள்ள அவருக்கு 79 பந்துகள் தேவைப்பட்டன. எனினும் அவர் களத்தில் இருந்து இலக்குச் சரிவைக் கட்டுப்படுத்தி பங்களாதேஷ் அணிக்கு அழுத்தத்தைக் கொடுத்தார்.

பங்களாதேஷ் அணியின் பந்து வீச்சாளர்கள் அனைவரும் செவ்வனே தமது பணியை செய்திருந்தனர். நியூசிலாந்து அணி கடும் போராட்டத்தின் பின்னர் 47.1 பந்துப்பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

# ஆர்ச்சர், ஜேசன் ராய்க்கு விதி மீறலுக்கு அபராதம்

இங்கிலாந்து கிரிக்கெட் வீரர்களான ஆர்ச்சர் மற்றும் ஜேசன் ராய் இருவரும் ஆட்டத்தின் விதிகளை மீறியதால் போட்டி ஊதியத்தில் இருந்து 15 சதவீத அபராதம் விதிக்கப்பட்டது.

நடப்பு உலகக் கிண்ணத் தொடரில் இங்கிலாந்து - பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் இடம்பெற்ற 6ஆவது லீக் போட்டியில் பாகிஸ்தான் அணி துடுப்பெடுத்தாடும் போது 14ஆவது பந்துப்பரிமாற்றத்தில் ஜேசன் ராய் பிடி ஒன்றைத் தவற விட்டார். அப்போது அவர் தகாத வார்த்தையை பயன்படுத்தினர் என்றும்.மேலும் இதே ஆட்டத்தில் மற்றொரு இங்கிலாந்து வீரரான ஆர்ச்சர். பாகிஸ்தான் அணி துடுப்பெடுத்தாடும் போது 27ஆவது பந்துப்பரிமாற்றத்தில் அவர் வீசிய பந்தை களநடுவர் அகலப் பந்து எனத் தெரிவித்ததால் அதிருப்தி அடைந்து நடுவருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டார் என்ற குற்றச் சாட்டுக்களுக்காகவும் இவருக்கும் போட்டி ஊதியத்தில் இருந்து 15சதவீத அபராதம் விதிக்கப்பட்டது.






6ஆவது முறையாக

# கிண்ணம் வென்றது லிவர்பூல் அணி




ஐரோப்பிய சம்பியன்ஸ் லீக் கால்பந்துப் போட்டியில் லிவர்பூல் அணி 6ஆவது முறையாகவும் சம்பியன் பட்டத்தை வென்றது.

64 ஆவது கழக அணிகளுக்கான ஐரோப்பிய சம்பியன்ஸ் லீக் கால்பந்து போட்டி நடைபெற்று வந்தது. இதில் 32 அணிகள் பங்கேற்ற தொடரின் இறுதிப் போட்டி கடந்த சனிக்கிழமை இரவு மட்ரிட் நகரில் இடம்பெற்றது.

இறுதிப் போட்டியில் டோட்டனம் ஹாட்ஸ்புர் - லிவர்பூல் அணிகள் மோதின. முதல் பாதி ஆட்டம் ஆரம்பித்து 2ஆவது நிமிடத்தில் லிவர்பூல் அணிக்கு பெனால்ட் வாய்ப்பொன்று கிடைக்க அதனை அந்த அணி வீரர் முகமட் மொஹமட் சலா கோலாக மாற்றினார். பலம் வாய்ந்த லிவர்பூல் அணியின் அதிரடி ஆட்டத்துக்கு முன்பு டோட்டனம் வீரர்களால் எதிர்கொண்டு ஆட முடியவில்லை. முதல் பாதி ஆட்டத்தில் லிவர்பூர் அணி 1:0 என்ற கணக்கில் முன்னிலையிருந்தது.

இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பித்ததும் இரு அணி வீரர்களும் முட்டி மோதிக் கொண்டு ஆட ஆரம்பித்தனர். ஆட்டத்தின் இறுதி நிமிடத்தில் 87ஆவது நிமி டத்தில் லிவர்பூல் அணி வீரர் வோக் ஓரிகி ஒரு கோலைப் போட லிவர்பூல் அணி 2:0 என்ற கணக்கில் வெற்றி பெற்று கிண்ணத்தை சுவீகரித்தது.

கடந்த ஆண்டு சம்பியன்ஸ் லீக் இறுதி ஆட்டத்தில் ரியல் மட்ரிட் அணியிடம் ஏற்பட்ட தோல்விக்கு பின் தற்போது மீண்டும் பட்டம் வென்றுள்ளது லிவர்பூல் அணி. இது அந்த அணி வென்ற 6ஆவது கிண்ணம் இதுவாகும்.

**ஜயோதா**
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம்: 1575 — சீட்டிழுப்பு திகதி: 06.06.2019
வெற்றி இலக்கங்கள்: 10 37 64 67 D
அடுத்த திங்கட் கிழமைக்கான ஜக்பொட்: ரூ.32, 103, 308 /=
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது தூரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

**ராசி அதிர்ஷ்டம்**
திகதி: 06.06.2019 — வெற்றி வாரம்: 2533 — வர்ணம்: கபிலம்
துலாம்
வெற்றி இலக்கங்கள்: 31 40 51 56
வெள்ளிக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 5,321,862 /=
07.06.2019ம் திகதி வெள்ளிக் கிழமை நீல நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

**அத கோடிபதி**
சீட்டிழுப்பு வாரம்: 631
வர்ணம் : ஊதா
சீட்டிழுப்பு திகதி: 2019.06.06
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 57,703,450/-
வெற்றி இலக்கங்கள்: 15 40 48 61 E
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

**போட்டிப்பரீட்சை வகுப்புக்கள்**
P. உமாசங்கர் & வளவாளர்கள்
வடமாகாண முகாமைத்துவ உதவியாளர் (MA), சிறைக்காவலர், நீதிமன்ற எழுதுநர்
உளச்சார்பு - P. உமாசங்கர்
மொழித்திறன்-S.சூரியதாசன்
09.06.2019 ஞாயிற்றுக்கிழமை
மு.ப.9.00 - பி.ப.2.00
முற்றிலும் எதிர்பார்க்கை விடயங்களுடன் தொடர்ந்து பிரதி ஞாயிறு
நாவலர் கல்வி நிலையம்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
076 166 1986, 077 741 7143, 077 394 2964, 071 813 0390

**போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்**
P. உமாசங்கர் & வளவாளர்கள்
SLAS, SLFS, SLEAS,
புள்ளி விபர அலுவலர், நீதிமன்ற பதிவாளர், சட்டக்கல்லூரி பட்டதாரி ஆசிரியர், பாராளுமன்ற உத்தியோகத்தர்
- நுண்ணறிவு
- உளச்சார்பு
- பொது அறிவு
- முகா. உளச்சார்பு
P. உமாசங்கர்
09.06.2019 ஞாயிறு
மு.ப.9.00 - பி.ப.4.00
முற்றிலும் எதிர்பார்க்கை விடயங்களுடன் தொடர்ந்து பிரதி ஞாயிறு
நாவலர் கல்வி நிறுவனம்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
076 166 1986, 077 741 7143, 077 394 2964, 071 813 0390

**வேலையாள்கள் தேவை**
மேசன் வேலைக்கு ஆள்கள் தேவை.
077 790 9560, 077 728 9560

**D.C.M - யாழ்.நகர்**
(வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை அருகில்)
A/L 2021
கலை, வர்த்தக புதிய பிரிவுகள்
ஆரம்பம் - 08.06.2019
காலை - 8.00 மணியளவில்
(ஆரம்ப அலகிலிருந்து கற்பிக்கப்படும்)
077 011 9434 நிர்வாகி

## OBITURAY



23 . 03 . 1928 — 05 . 06 . 2019

**Mrs. Lizzie Kanmani Arulampalam**

Mrs. Lizzie KanmaniArulampalam beloved wife of late Dr. K. Arulampalam, loving mother of David, Ranji, Charles (UK), Dano (Australia), affectionate mother-in-law of Shantha, Ravi, Bernie (UK), Thaya (Australia), adorable grandmother of Neville and Julie, Neil, Vidiya (UK), doting great-grandmother of Jerusha and Alan, precious sister of Jothimalar (Canada), late Padmini (Canada), Margaret (Jesus Lives), John (Canada) and Anton entered into glory on 5th June 2019. Funeral service will be held at "Retnapathy", Karanavai East, Karaveddy on Sunday 9th June at 3.00p.m. Burial will follow at Methodist Mission cemetery Point Pedro.

"Retnapathy" Karanavai East, Karaveddy.
Daniel Jebakumar (Son)

T.P.0777110426

**வடஇந்திய பத்திரிநாத் கேதார்நாத் கங்கோத்திரி ஜமுனோத்திரி யாத்திரை**

நாள்கள் : 16 — ஆரம்பம் : 16.07.2019 — யாத்திரிகர் : 20

செல்லுமிடங்கள் சுருக்கமாக :
டெல்லி, ஆக்ரா, தாஜ்மகால், ரிஷிகேஸ், சிவானந்த ஆச்சிரமம், தொங்குபாலம், ராமர்கோயில், லக்சுமணர் கோயில், ஹரித்துவார், கங்காபூசை, மானுசாதேவி, மந்திர் சண்டிதேவிமந்தி இவை இரண்டு ஆலயங்களும், தொங்கு ஊஞ்சல்(விஞ்சில்) பயணம், கங்கோத்தி, அம்மன் ஆலயம், ஜமுனோத்திரி, அம்மன் ஆலயம்,பத்திரிநாத் 108 வைஸ்ணவ ஆலயங்களில் முதன்மையான ஆலயம், மானா, சரஸ்வதி நதி உற்பத்தியாகும் இடம், கேதாநாத் திருக்கயிலாயமலைக்கு சமமான ஆலயம், வேறு இடங்களும் காணலாம், சென்னையில் ஒரு நாள் சொப்பிங்
NB கேதார் நாத் கெலிக்கொப்ரர் பயணம்.

தங்களிடம் பெற்றுக் கொள்ளும் ரூபாவிற்கு எமது சேவை
4விமானரிக்கட், இந்தியாவில் சுற்றிப்பார்க்க A.C வாகன வசதி, மடப்பள்ளி ஆள்கள் மூலம் உடனுக்குடன் சமைத்த மூன்று வேளை உணவு, காப்பி, ரீ, மினரல்வாட்டர் (குடிநீர்) 2பேருக்கு கட்டில், மெத்தை, வெஸ்ரன் கொமட் குளியலறை, இணைந்த அறைகள் இவை அனைத்தும் எமது சேவை. விருப்பமுடையவர்கள் விபரத்தை கேட்டறிந்து பதிவு செய்யவும்.

வந்தவர்களைக் கேளுங்கள் சென்றுவரலாம் வாருங்கள்.
விபரங்களுக்கு : கலாநிதி. T.ஸ்ரீரெங்கநாதன் மகன் ராஜன்
59, 3/6, செட்டியார் தெரு, கொழும்பு - 11
srirangnathan2601@gmail.com — sridevisriranganathan.thuraiappa
077 768 0102/ 077 736 2154

**முன்னாயத்த வகுப்புக்கள்**
SLAS, SLEAS, LAW, LLB
பதிவாளர், முகாமைத்துவ உதவியாளர் பரீட்சைக்கானது
P.கமல்தாசன் மற்றும் வளவாளர் குழு
08.06.2019 சனி -9AM
SLAS (Ltd) விடய ஆய்வு
R.C அமல்ராஜ் - SLAS
9AM - 3PM
நுண்ணறிவு, பொது அறிவு, முகாமைத்துவம்
நாவலர் கல்வி நிறுவனம்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்
077 1116739, 076 1661986

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 07.06.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.